ஓம்

ஜய மஹாதேவ

மகாமேரு யாத்திரை

(நடுநிசி சூரியன் நம் முன்னோர் வசித்த பூமியில்)

ஆர். அனந்தகிருஷ்ண சாஸ்திரியினல்
யாத்திரை செய்து எழுதப்பட்டது

ஜனவரி 1936

PRINTED AT

THE HINDI PRACHAR PRESS,

TRIPLICANE, MADRAS.

ஓம் ஜய மஹாதேவ

முகவுரை

நான் மகாமேரு யாத்திரை செய்துவந்தவுடன் யாத்திரையைக் குறித்து ஒரு சிறு புஸ்தகம் விவரமாக "மிட் நைட் ஸன் இந்தி லாண்டு ஆப் அவர் பேரர் பாதர்ஸ்" என்ற பெயருடன் இங்கிலீஷில் பிரசுரஞ் செய்தேன். சென்ற கோடை காலத்தில் நீலகிரியில் நான் ஸ்ரீராமகிருஷ்ணாச்சிரமத்தில் தலைவராகிய ஸ்வாமி சித்பவானந்தாவர்களைச் சந்தித்தேன். அவர்கள் மகாமேரு யாத்திரையைக் குறித்து ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம் என்கிற தமிழ் மாதப் பத்திரிகைக்கு எழுதும்படி வற்புறுத்தினார்கள். அவர்கள் உத்தரவுப்படி உடனே எழுதலானேன். அந்த பத்திரிகையைப் படித்தவர்களில் சிலர் இன்னும் கொஞ்சம் விவரமாக எழுதி புஸ்தக வடிவில் சீக்கிரத்தில் அச்சிடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதில் காவேரி தீரவாஸி சிரஞ்சீவி கனம் கே. எஸ். தேவராஜய்யரவர்கள் ஒருவர். நடந்த சீதகாலத்தில் நான் ஸ்ரீகாசியில் வழக்கம் போல் பழைய ஏட்டுச் சுவடி பரிசோதனைக்காகத் தங்கிய பொழுது அவ்விடம் வித்துவான்களில் சிலர் மகாமேரு யாத்திரை நம் ஆரியர்களின் ஒரு உத்தம யாத்திரை யென்று புகழ்ந்து ஸ்ரீகாசியில் "அமரபாரதி" என்ற ஒரு ஸம்ஸ்கிருத மாதப் பத்திரிகையில் என் இங்கிலீஷ் புஸ்தகத்தைக் குறித்து புகழ்ந்து எழுதியிருந்தார்கள். யாத்

செய்வதில்லை. முதிர்ந்த வயதில் வெகுகால சாத்தியமான ஒரு பெரிய யாத்திரையைச் செய்யவேண்டும். அதற்கு பூ பிரஸ்தாரம் (பூமியைச் சுற்றுதல்) என்று பெயர்.* அப்பொழுது திரும்பி வீடுவரவேண்டுமென்ற நியமமில்லை. அவ்விதம் பூபிரஸ்தாரம் செய்பவன் வேலை முழுதும் பிறர் க்ஷேமத்திற்காகவே.

பிறகு ஹிமாலய பர்வதத்தில் தங்கி, தவத்தை விருத்தி செய்து கைலாசம் முதலான திவ்விய ஸ்தங்களைத் தரிசித்து வானப்பிரஸ்தமென்கிற நிலையை நடத்துதல் வேண்டும்.

---

* வேதத்திற் கூறிய படி பூமிமுழுவதும் ஆரியர்களுடையது. பிறகு மனு முதலான ஸ்மிருதிகளின்படி தொடர்ச்சி பூமியாயுள்ள ஆசியாக்கண்டம் முழுவதும் ஆரியர் வாஸஸ்தானமாக விருந்தது. இப்பொழுது நாம் வசிக்கும் பரத கண்டம்மாத்திரம் ஆரியவாசஸ்தானமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. எனினும் வட இந்தியாவிலிருக்கிற ஆரியர் தென் இந்தியாவில் வஸிப்பவரை த்ராவிடர்களென்றும் ஆரிய ரக்தக்கலப்புள்ளவரென்றும் பழிப்பதுண்டு. இவைகளெல்லாம் காலக்கிரமத்தில் வந்த அசூயையாகும். மேதாதிதி முதலான சில பெரியோர்களின் சட்டப்படி எந்த இடத்தில் ஆரியர் தங்கள் ஆசாரத்துடன் வஸிக்கிறார்களோ அந்தப் பூமிக்கு ஆரியாவர்த்தமென்றும், எந்தப் பூமியில் மிலேச்சாசாரமிருக்கிறதோ அந்த இடத்திற்கு மிலேச்சதேசமென்றும் பூமிக்குத் தனியே தோஷம் இல்லையென்றும் அதில் வாஸஞ் செய்யும் நல்லவர் கெட்டவர்களால் பூமிக்குச் சுத்தம் அசுத்தம் ஏற்படுகிறதென்றும் சிலர் கூறியிருக்கிறார்கள்.

இதற்குக் கைலாஸ பிரஸ்தாரமென்று பெயர்.* ஞானமும் தவமும் உறுதிப்பட்டவுடன் மகாமேரு யாத்திரை செய்ய வேண்டும். அதற்கு மேரு பிரஸ்தாரமென்று பெயர். இவ்விதமாக ஒவ்வொருவனும் மூன்று யாத்திரைகளைச் செய்து கடைசியில் ஈசன் பதத்தை வானப்பிரஸ்தாச்சிரமத்திலேயோ சந்நியாசாச் சிரமத்திலேயோ அடையவேண்டும்.

---

* கைலாச பர்வதத்தைச் சுற்றுவது மிகக் கஷ்டமாகும். சுற்றுகிற பூமி சுமார் 12,000 அடிக்கு மேலிருக்கிறது. பனிக்கட்டி எப்பொழுதுமிருக்கிறபடியாலும் நாம் சுவாஸிக்கிற ஆக்ஸிஜன் என்கிற பிராணவாயு வெகு லேசாக இருப்பதாலும் யாத்திரை செய்வது சிரமமென்று ஹிமாலயப் பிரதக்ஷிணஞ்செய்தால் கைலாசப் பிரஸ்தாரமாகு மென்றும் நினைத்து, பக்தர்கள் முற்காலத்தில் ஹிமாலயத்தைச் சுற்றிவந்திருக்கிறார்கள். ஹிமாலயம் தென் கிழக்கில் தொடங்கி வடமேற்காகச் சுமார் 1,200 மைலும், தென்வடக்குச் சுமார் 300 முதல் 500 மைல் வரை அகலத்திலுமிருக்கிறது. பூராவாகச் சர்வே செய்து மக்கள் வசிக்கக்கூடிய இடங்களில் பலர் வாழ்கிறார்கள். அதில் வடகிழக்கில் கிம்புருஷ கண்டமென்கிற திபேத்து தேசமிருக்கிறது. ஸம்ஸ்கிருத கிரந்தங்களிலும் வெகு அபூர்வமான பல சாஸ்திரங்கள் அங்கு உள்ளன. சில புஸ்தகங்கள் அச்சுக்கும் வந்திருக்கிறது. நம் ஸ்ரீகாஞ்சீ முதலான இடங்களிலிருந்து பெரியோர்களிற் சில மகா வித்துவான்கள்; ஆறாவது ஏழாவது நூற்றாண்டுகளில் திபேத்து தேசம் போய் உபாத்தியாயர்களாகவிருந்து காலங்கழித்ததாகச் சரித்திரமிருக்கிறது.

இவ்விதம் யாத்திரை செய்யாதவனுக்கு ஆரியன் என்ற பெயர் பொருந்தாது. [ஆரியன் என்ற சொல்லுக்குப் பல பொருளுண்டேனும் யாத்திரைக்காரன் என்பதே சிறந்த தாகும்.]

இம்மூன்று யாத்திரைகளையும் ஒருவன் தன் வாழ் நாளிற் செய்ய முடியாவிட்டால் ஒன்று இரண்டு யாத்திரை களையாவது செய்து வந்தான். ஹிமவத் யாத்திரை செய்ய வும் கஷ்டம் ஏற்பட்டவுடன் பூபிரஸ்தாரத்தையாவது செய்து கடைசியில் ஸ்ரீகாசியில் மரணத்தை யடைந்து வந் தான். அதையும் காலக்கிரமத்தில், வீட்டுப்பற்றுதலினுல் நடத்த முடியவில்லை.* தவிரவும். இக்காலத்தை யொப்ப யாத்திரா சௌகரியம் முன்னுட்களில் இல்லை யென்பது யாருக்கும் தெரிந்ததே. காசியாத்திரை சென்றவர்களிற் பெரும்பாலோரைத் திரும்ப அக்காலத்தில் பார்க்க முடி. யாது.

வேத கதைகளுள் ஒன்றில் ஒரு ரிஷி 'நான் மகாமேரு வைப் பார்க்க முடியவில்லை; ஆனுல் அதைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறேன்' என்றும், அவரே பிறருக்குச் சொல்லும் பொழுது, 'நான் நேரே போய்ப் பார்த்திருக் கிறேன்' என்றும் கூறுகிறுர் (தைத்திரியாரண்யகம்). சுமார்

---

* ஸூத சம்ஹிதை முதலான சாஸ்திரப் பிரகாரம் ஒருவன் தன் மரணத்தை மூர்த்தி தலந் தீர்த்தங்களில் முறையே சிறந்த க்ஷேத்திரங்களில் நடத்தவேண்டும். வீட் டில் மரணத்தையும் உத்திரக்கிரியைகளையும் நடத்தக் கூடாது.

20 வருஷங்களுக்கு முன் வரை மேருவைக் காணப் போனவர்களிற் பலர் இறந்து போய்விட்டார்கள். இப்பொழுது பௌதிக சாஸ்திரிகள் பூமியையும் ஆகாசத்தையும் ஒரு அங்குலமும் தவருமல் சர்வே செய்து சகல யாத்திரைக்கும் அனுகூலங்களைச் செய்திருக்கின்றனர்; ஆகையால், யாரும் வட மேருவிலிருந்து தென் மேருவுக்கும்,* அப்படியே கிழக்கு மேற்காகவும் பூப்பிரதக்ஷிணம் செய்யலாம். வியாபாரிகளும் கலா வல்லபரும் நாள்தோறும் மேற்படி யாத்திரையைச் செய்து வருகிருர்கள். முற்காலத்தில் கஷ்டப்பட்டு யாத்திரை செய்தவர்கள் விஷயம் நமக்கு ஒரு கதையாகத் தோன்றும். இக்காலத்தில் பணத்திஞல் இம்மூன்று யாத்திரைகளையும் சுலபமாக நடத்தலாம்.

பூபிரஸ்தாரம் என்ருல், நம் பரதக்கண்ட மட்டுமன்று; பூமியையே சுற்றுதல் ஆகும். ரூ 3,000-மும் நான்கு மாத அவ்காசமும் கிடைப்பின் பூப்பிரதக்ஷிணம் செய்யலாம். கூட' ரூ 3,000 இருந்தால் ஆகாயப் பிரதக்ஷிணமும் சிரமமில்லாமல் செய்ய முடியும். நம் முன்ஞேர்கள் கால் நடையாக யாத்திரை செய்தார்கள். அனேக வருஷங்கள் கழிந்தன. இப்பொழுதும் அப்படியே நடத்தலாம். ஆஞல்

---

* தென் மேருவைக் குறித்து நம் சாஸ்திரங்களில் வர்ணிக்கப்படவில்லை. அதை யமன் வஸதி ஸ்தானமென்று சிலர் சொல்லியிருக்கிருர்கள். தத்வ சாஸ்திரிகளும் அந்தப் பிரதேசத்தை நன்ருகச் சர்வே செய்யவில்லை. ஆண்டுதோறும் தக்ஷிணயனத்தில் அவ்விடம் போக முயற்சி செய்து வருகிருர்கள்.

வீணில் வெகு காலம் கழியும்; யந்திரங்களின் உதவியால் மேற்படி யாத்திரைகளை, ஸ்ரீகாசிக்கு ரயில்வண்டி மூலமாக ஒரு மாதத்திற்குள் போய்வருவதுபோல ஒரு வருஷத்தில் பூமியிலிருக்கிற புண்ணிய க்ஷேத்திர தீர்த்தங்களை யெல்லாம் எளிதில் தரிசித்து வரலாம்.

முதலிற் செய்யவேண்டிய இரண்டு யாத்திரைகளைச் செய்த பிறகு, நான் மகாமேரு யாத்திரையைச் செய்த விவரத்தை இந்தக் கட்டுரை மூலமாகத் தெரிவிக்கிறேன். நான் இளமையில் பள்ளிக்கூடத்தில் வேதாந்தம் படிக்கும்பொழுது உபநிஷதத்தில் சூரியசலன சம்பந்தமாகச் சில வாக்கியங்கள் வந்தன. சூரியன் கிழக்கே உதித்து மேற்கே அஸ்தமிப்பதையும், தெற்கே உதித்து வடக்கே அஸ்தமிப்பதையும், மேற்கேயும் வடக்கேயும் உதித்து கிழக்கேயும் தெற்கேயும் அஸ்தமிப்பதையும், குறித்தவை. சூரியன் உதிப்பதுமில்லை அஸ்தமிப்பதுமில்லை, ஒரே நிலைமையிலே எப்பொழுதும் இருக்கிறான் என்பதையும் படித்தேன் (சாந்தோக்ய உபநிஷத் மூன்றாம் அத்தியாயம்.) உடனே நான் என் உபாத்தியாயரை இதை விவரித்துச் சொல்லக்கேட்டேன், அவரும் என்னைப்போல் பரதகண்ட மத்திய பாகத்தில் வசித்துவந்த படியினாலும், லோகயாத்திரை செய்யாதவராகையாலும் கதை ரூபமாக ஏதோ மறுமொழி சொல்லிவிட்டார். எனக்கு மட்டில் வேதத்தில் உண்மையே சொல்லப்பட்டிருக்குமென்ற நம்பிக்கையிருந்தது; பிறகு பூகோள ககோள சாஸ்திரங்களைப் படித்துத் தத்வசாஸ்திரிகளைச் சந்தித்து விசாரித்ததுண்டு; அப்பொழுது, முன்சொல்லிய வேதவாக்கியம் யதார்த்தமென்று பூகோள, ககோள படங்

களைக்கொண்டு மெய்ப்பித்தார்கள். பிறகு ருக்வேதம் முதலானவற்றிலுள்ள சூரிய மந்திரங்களையும் பாரதம் முதலான இதிகாசங்களையும் ஆராய்ந்து படிக்கும்பொழுதும், ஆரியபட்டர் எழுதின வான சாஸ்திரத்தைப் பார்க்கும்பொழுதும் எல்லாம் உண்மையென விளங்கின. பூமி, கோழி முட்டை மாதிரி உருண்டையாக இருக்கிறதென்பது எல்லாருக்கும் தெரியுமே. அதன் கீழ்மேல் குறுக்களவு சுமார் 8,000 மைலும் தெற்கு வடக்கு நீளம் 8,000 மைலும் இருக்கின்றன. வடக்குக் கடைசிக்கு மகாமேருவென்று பெயர். அந்த இடத்திற்குக் காந்தமுள் இழுப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்களே. அவ்விடத்துக்குப் போகமுடியாது. ஆகாய விமானத்தையாவது கப்பலையாவது காந்த சக்தி சமீபத்தில் வரவிடுவதில்லை. அப்படிப்பட்ட இடம் சுமார் 150 மைல் சுற்றளவுள்ளது. அதிலிருந்து சுமார் 400 மைல் தெற்கேயுள்ள இடங்களுக்கு ஆர்க்டிக் இடங்கள் என்று பெயர். அஃதாவது 66-வது டிகிரி முதல் 80 டிகிரி வரை. இவ்விடத்திற்கு நம்பெரியோர் உத்தர குரு வென்று பெயர் வைத்திருந்தார்கள். இவ்விடத்தில் உத்தராயணத்தில் மேமீ 14வ முதல் ஆகஸ்டுமீ 30வ வரை சூரியன் உதயாஸ்தமனமில்லாமல் எப்பொழுதும் விளங்குகிறான். அப்படியே தக்ஷிணாயனத்தில் (நவம்பர்மீ முதல் பிப்ரவரிமீ வரை) சூரியனே காணப்படுவதில்லை. அந்தந்த ஸ்தானத்திற்குத் தகுந்தபடி நம் பூர்விகர் மூன்று இரவு யாகம் முதல் நூறு இரவு சேர்ந்திருந்த காலம் வரை யாகஞ் செய்ததாக வேதங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. சதராத்திரிக் கிரது செய்த இடத்தை நாம் இப்

பொழுது 'ட்ரோம்சோ' என்கிற இடமாகிய 72 ஆவது டிக்ரியில் பார்க்கலாம். அவ்விடத்தில் சரியாக நூறு தினங்கள் ஒரே இரவாகச் சூரியனே இல்லாமல் இருக்கிறது. இதற்கு நேரே வடக்கில் மகாமேரு இருக்கிறது. அந்த இடத்திற்குத்துருவஸ்தானமென்று பெயர். இந்தப் பூமியானது சமமாக ஆகாசத்தில் மிதக்கவில்லை. வடபக்கம் போகப்போகச் சிறிது உயர்ந்திருக்கிறது; ஆகையால் வடதிசைக்கு உத்தரம் என்று பெயர் வந்தது. ['உத்' என்றால் 'மேல்' என்பது பொருள்.] தக்ஷிணம் கொஞ்சம் பள்ளமாகக் காணப்படுவதால் தென்மேருவை நரகமென்றும், யமபட்டண மென்றும், பூமிக்குச் சிலகோடி மைலுக்குக் கீழே யிருக்கிறதென்றும் சிலபுராணங்களிற் கூறப்பட்டிருக்கிறது. அப்படியே உத்தரமேருவை, தேவர்கள் வஸதிஸ்தானம் என்றும், சூரியன் முதலானவர் புண்ணிய பூமியென்று பிரதக்ஷிணஞ் செய்கிறார்களென்றும், ஸம்ஸாரத்தைத் தாண்ட இது காரணமாக இருப்பதினால் இந்த இடத்திற்கு உத்தரம் (தாண்டவைப்பது) என்றும் சொல்லப்படுகிறது. இந்த 'ட்ரோம்சோ' என்ற இடத்தில் மே மாதம் 14உ இரவு 11-45-க்கு மேற்குத் திசையில் சூரியன் உதித்து, நவம்பர் மாதத்தில் கிழக்கே அஸ்தமனமாகிறான். ஆகையால், முன் வேதத்திற் குறிப்பிட்ட வாக்கியமானது உண்மையாமன்றோ? வடதேசங்களில், 'பாதி இரவு சூரியன்' என்று சூரியனைச் சொல்வது வழக்கம். மேமீ 14உ இரவு நான் அந்தப் 'பாதி இரவு சூரியன்' உதிப்பதைப் பார்க்கலானேன். இரவு சுமார் 11-மணிக்கு நான் மேற்கே பார்த்துக்கொண்

டிருக்கையில், மேல் கடலிலிருந்து ஒளிப் பிழம்பொன்று தோன்றுவது தெரிந்தது; உடனே கொஞ்சம் மேலே வந்து வடக்கே அது ஓடிவிட்டது. அங்கு, சூரியன் நம் தேசத்திற் போல ஆகாயத்தில் குறுக்கே போவதில்லை. ஆகாயத்தின் ஓரமாகவே செல்லுவான். ஆகையாலேயே, சாஸ்திரங்களில் 'குயவன் பானைசெய்கிற சக்கரம் போலச் சூரியன் சுற்றுகிறான்' என்று வர்ணிக்கப்பட்டுள்ளது.* அப்படிச் சுற்றுவதனால் சூரியன் நிறம் சுவர்ணமயமாகவே யிருக்கும். நல்லவெண்மை நிறம் அன்று. ஆகையால் எப்பொழுதும் 'மகாமேரு சூரியன்' பொன் வர்ணமென்று வேதங்களில் புகழப்படுகிறான்; (ஹிரண்மயன்). மேருப் பிரதேசத்தில் சூரியனுக்குத் தாமிரம், அருணம், பப்ரு, சுமங்களம் என்ற நாலு வர்ணங்களுண்டென்று வர்ணிக்கப்படுகிறது.† ஏழு வர்ணம் சொல்லிய வேத வாக்கியங்களை, நம் தேசங்களில் சூரியனைக் கண்டு வர்ணித்ததாகக் கொள்ளவேண்டும். 'சூரியன் தங்க வர்ணம்; ஹிரண்ய மீசை; பொன் மயிர்; கால்முதல் தலைவரை ஸ்வர்ண தேஜஸ்' என்று சொல்லிய வாக்கியங்கள் எல்லாம் மேருப்பிரதேச சூரியனைக் குறித்தவைகளாகும். இதை உத்தேசித்துத்தான் மகாமேரு ஸ்வர்ண பர்வதமென்று புராணங்களில் அலங்கரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

பௌதிக சாஸ்திரமும் தத்வ சாஸ்திரமும் அறியாதவர் சிலர், மகாமேருப்பிரதேசங்களில் நம் பூர்விகர் வாழ்ந்திருக்க முடியாதென்று சொல்வார்கள். அதற்குக் காரண

* குலால சக்கிர பிரமவத். (திலகர் ஆர்க்டிக் புஸ்தகம்).

† ருத்திராத்தியாயம்.

மாவது, அங்கே எப்பொழுதும் பனிமழை பெய்வதும், பல மாதங்கள் 24 மணியிலும் சூரியன் விளங்குவதும், பிற மாதங்களில் சூரியனே இல்லாமல் எப்பொழுதும் இரவாய் இருப்பதுமேயாமென்பர்.

பூதபௌதிக சாஸ்திரிகளின் சித்தாந்தமாவது, இந்த உருண்டை வடிவமுள்ள பூமி பலகோடி வருஷங்களுக்கு முன் தோன்றிய காலத்தில், இதன் வடகோடியில் முதலில் அதிக சூடு உண்டாயிற்று; அது, அங்கிருந்து முறையாக எல்லாவிடங்களிலும் பரவியது என்பதாம். ஆகையால் இப்பொழுதுள்ள நிலை, பல்லாயிரம் வருஷங்களுக்கு முன் மகாமேருப் பிரதேசத்தில் இல்லை. முன் ஒரு காலத்தில் அதிக சூடு அப்பிரதேசங்களில் நீண்ட காலம் இருந்ததென்பதற்கு அடையாளமாக இப்பொழுது மகாமேருவைச் சுற்றிச் சுமார் 200 மைலுக்குள் நிலக்கரி அகப்படுகிறது. உஷ்ணப் பிரதேசங்களிலேயே நிலக்கரி கிடைக்கக்கூடுமென்பது உண்மையன்றோ? உஷ்ணத்தினால் அளவற்ற மரங்களும் செடிகளும் உண்டாகி, பூகம்பமாதிகளால் மரம் முதலானவை பூமிக்குள் புதைபட்டு அழுகி ஆயிரக்கணக்கான வருஷங்களுக்குப் பிறகு நிலக்கரியாக மாறுகின்றன; ஆகையால் மேருப்பிரதேசம் ஒரு காலத்தில் அதிக சூடுள்ள இடமென்று தெரியவரும். இப்பொழுதுகூட, அப்பிரதேசத்தில் எப்பொழுதும் சூரியன் காணப்படும் காலமாகிய நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்குள் இரண்டு அல்லது மூன்று முறை தானியம் கறிகாய் முதலியன பயிர் செய்து அவற்றைக் குளிர்காலத்தில் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

சில இடங்களில் புகையிலைகூடப் பயிரிடப்படுகிறது. புகையிலைச் செடிக்கு அதிக சூடு வேண்டுமன்றோ? குளிர் மிகுந்த தக்ஷிணாயன காலங்களில், ஐரோப்பா தேசங்களில் இருக்கிற மரம் செடி முதலியன தங்கள் இலை முதலியவற்றை இழந்து கொப்பு மட்டில் மிஞ்சி நிற்பதை யாத்திரைக்காரர் பார்க்கலாம். உத்தராயணத்தில் அவை எவ்வளவு அழகாகத் தழைத்துப் பூத்து வளர்ந்திருக்கிறதென்பதையும் காணலாம்.*

மேருவைச்சுற்றியுள்ள இடங்களில் வாழ்வோர் ஆறுமாத சூரியன் காலமே ஆரோக்கியக்குறைவு உள்ளதென்று சொல்லுகிறார்கள். குழந்தைகளுக்கும் உடலுழைப்பு உள்ளவர்களுக்குமே சிறிது நித்திரை அக்காலத்தில் வருகிறது. பிறருக்கும் முக்கியமாய் வயது முதிர்ந்தவருக்கும் நோயாளிகளுக்கும் தூக்கம் வருவதில்லை. அவர்கள், எப்பொழுதும் இரவாக இருக்கும்படி ஏன் உலகத்தை ஈசன் படைக்கவில்லை என்று கவலைப்படுகிறார்கள். நீங்கள் லாகோர், பெஷாவர் முதலான வடமேற்குத் திசைகளில் நவம்பர் முதல் ஏப்ரல் வரையுள்ள மாதங்

* மனிதருடல், பிறந்தது முதல் எவ்வித சீதோஷ்ணத்தில் பழக்கப்படுகிறதோ அவற்றிற்குத் தகுந்தபடி இசைகிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஹிமாலயப் பிரதேசத்தில் தீபேத் முதலான கிம்புருஷ கண்டத்தில் வசிக்கிற மக்கள், பனிமழை பெய்வதை எப்பொழுதும் பார்த்து ஆநந்தமடைகிறார்கள்; ஆனால் தென் இந்தியாவிலோ (தக்ஷிண தேசத்தில்) மனிதர்கள் பனிக்காலத்தில் சரீரத்தை மூடிக்கொண்டு குளிரினால் கஷ்டப்படுகிறார்கள். எல்லாம் வழக்கத்தைப் பொறுத்துள்ளன.

களில் யாத்திரை செய்து வழக்கமிருந்தால், இந்த ஆறுமாத யாத்திரையை ஸ்வர்க்கலோக யாத்திரையென்றும் வெயில் கால யாத்திரையை நரகலோக யாத்திரை யென்றும் சொல் லுவீர்கள். ஆகையால் வேதத்தில் 'அப்பா! நீ நூறு சர தங்கள் (பனிக்காலங்கள்) விருத்திசெய்து ஜீவிக்கவும்' (சதம் ஜீவ சரதோ வர்த்தமான:) என்று வாழ்த்தியிருக்கிற ஆயிரக் கணக்கான மந்திரங்களைக் காணலாம். பனிக்காலத்தில் செய்யும் கிரியைகளுக்கும் தியானங்களுக்கும் பலனதிகம். ஒரு இரவு முதல் தொடர்ந்த நூறு இரவு வரை (சதராத்ரக்கிருது) செய்த யாகங்களும் பண்டையோர் நடத்திவந்தனரென்பதைச் சிரௌத சூத்திரங்களால் தெரிந்து கொள்ளலாம். அப்படியே நாம் தக்ஷிண தேசம் வந்தவுடன் தியானம் முதலானவைகளுக் கும், சந்நியாஸம் வானப்பிரஸ்தம் முதலான ஆச்சிரமங்களுக் கும், பனிமிருந்த ஹிமாலயத்தை அடையவேண்டு மென்று சாஸ்திரங்கள் கூறியிருக்கின்றன.* வைத்திய சாஸ்திரப்படி, சரீர ஆரோக்கியாபிவிருத்தி முதலியன குளிர்தேசத்தில் உள்ளபடி உஷ்ண தேசத்தில் இல்லை. சரீர அழகும் அப்படியே.

சீதோஷ்ணம் சமமாயுள்ள தக்ஷிணதேசம் வந்த வுடன் தியானம் செய்வதற்கு இரவே நலமுள்ளதென்றும், தூக்கத்தினால் விழிப்பு இல்லாதவர்கள், காலையிலும் மாலை யிலும் தியானம் செய்ய வேண்டுமென்றும் சொல்லப்பட் டுள்ளன. இதற்குத்தான் சந்தியாவந்தனம் முதலான பெயர் கள் கொடுக்கப்பட்டுள்ள தென்பதை நாம் அறியவேண்டும்.

* உதிசீம் பிரவிவேசாசாம் கதபூர்வாம் மகாத்மபி:

நம் பூர்விகர்களின் கால நியமமானது, இரவு 12 மணி தொடங்கி மறுநாள் இரவு 12 மணி வரை ஒரு தினம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதை இப்பொழுதும் ஐரோப்பியர் முதலானவர்கள் அனுபவத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள். நம் பூர்விகர் தக்ஷிணம் வந்தவுடன் கிரியைகளை மிகுதியாக்கிக் கர்ம காண்டத்திற்கு அதிக கௌரவம் கொடுக்கலாயினர். அத்தகைய கருமங்கள் செய்ய அவர்களுக்கு அதிக வெளிச்சம் வேண்டியிருந்தது; அதனால், சூரியோதயம் முதல் அஸ்தமனம் வரையுமுள்ள காலத்திற்கு தேவகாலம் என்றும், இரவுக்கு அசுரகாலம் என்றும் பெயர் வைத்து வேதகாலத்தை அவர்கள் மாற்றிவிட்டார்கள். ஈசுவரதியானமும் மனவளர்ச்சியும் மக்களுக்கு மிகவும் அவசியமானவை; ஆகையால், சூரியன் உதிப்பதற்கு முன்னும் அஸ்தமனத்திற்குப் பின்னும், கிரியைகளுக்குத் தடையின்றி தியான நிஷ்டையில் இருக்க வேண்டுமென்று சாஸ்திரங்கள் விதித்திருக்கின்றன. ஆனால், சூரியன் உதயாஸ்தமனம் சமமாக இல்லாத வடக்கு, வடமேற்குப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களுடைய தேசத்தை தேவபூமி யென்றும், தக்ஷிண தேசத்தைக் கர்மபூமி யென்றும் இரண்டாகப் பிரித்து, அந்தந்தத் தேசங்களில் வசிக்கிறவர்கள் அந்தந்தத் தேசங்களுக்குத் தக்கபடி அனுஷ்டிக்க வேண்டுமென்று தர்மசாஸ்திரக்காரர்கள் விதி யேற்படுத்தினர்கள். திருஷ்டாந்தமாக, மனுதர்ம சாஸ்திரத்தில் பிராத ஸ்நானம் விதிக்கப்படவில்லை. மேரு, ஹிமாலயப் பிரதேசங்களிலும், குடிக்கக்கூடத் தண்ணீர் கிடையாத சிந்து காந்தாரம் முதலான மருப் பிரதேசங்களிலும் பிராதஸ்நானம்

செய்ய முடியாது. தென் தேசத்தில் நதி முதலானவை மிகுந்திருக்கிறபடியினால், ஸ்நானம் செய்த பிறகே கர்மத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லிய விதி வாக்கியங்களை நாம் பார்க்கலாம். ஸ்நானமானது அழுக்கைப் போக்கவே யென்று வேதம் கூறுகிறது.*

வேதத்திற் கூறிய சத்ராத்ரம் முதலான யாகங்களை நடத்தத் தொடர்ச்சியான நூறு இரவு நமது பரதகண்டத்தில் இல்லாததனால், அவற்றிற்குப் பிரதியாகச் சில கர்மங்களைச் செய்யும்படி கூறி, மேற்கண்ட யாகங்களைக் கிருதயுகாதி கிரியைகள் என்று ஒதுக்கி விட்டார்கள்.† வேத மந்திரங்களைக் காலத்திற்குத் தக்கபடி மாற்றக்கூடாமையால், மகாமேருப் பிரதேசத்தில் காணப்படுகிற சூரியாஸ்தமனத்தை வர்ணிக்கும் வாக்கியங்களைக் காவேரி தீரத்தில் காணும் சூரியனுக்கு வர்ணிக்கும்பொழுது, அந்த மந்திரங்களுக்கு நேரான பொருள் கிடைப்பதில்லை. திருஷ்டாந்தமாக, "சூரியனே, உன் மண்டலமானது ஸ்வர்ண பாத்திரத்தினால் மறைக்கப் பட்டிருக்கிறது; (ஈசோபநிஷத் 15-வது வாக்கியம்).....................உன்னை அநியாயமாகச் சில மாதங்கள் அசுரர்கள் நீருக்குள் அடைத்துவிட்டார்கள். அருணோதயமாயிற்று. சூரியனே!

---

* மலநிர்மோசனம் பும்ஸாம் ஜலஸ்நாநம் தினே தினே.

† சாஸ்திரங்களில் கிருதயுக தர்மங்களைக் கலியுகத்தில் அனுஷ்டிக்கக்கூடாதென்றும் செய்ய முடியாதென்றும் சொல்லப் பட்டிருகிறது.

நீ வெளி வருவாயென்று உன்னைத் தியானிக்கலானேன். சில தினங்களாகியும் நீ வெளி வராமலேயே இருக்கிறாய்; போகட்டும், இப்பொழுதாவது (மார்கழி மாதத்தில்) பௌர்ணமியன்று வந்தாயே."* என்று இவ்வண்ணம் வர்ணிக்கப் பட்டிருக்கிறது. இப்படியே மாசி மாதத்தில் வரும் பீஷ்ம பஞ்சமி முதலானவைகளைக் குறித்து மகா பாரதத்தில் சூரிய சம்பந்தமாக விஸ்தாரமாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. வேதத்தில் சூரியனைக் குறித்துச் சொல்லியிருக்கிற வர்ணனைகளையும், சூரியன் இல்லாத மாதங்களில் அந்தத் தேசங்களில் வெளிச்சம் எப்படி யுண்டாகிற தென்பதையும், மக்கள் எந்த வெளிச்சத்தினால் தொழிலைச் செய்கிறார்கள் என்பதையும், பகல் இரவு என்ற வேறுபாடு எப்படி உண்டாகிற தென்பதையும் விரிவாக மகாபாரதத்தில், வனபர்வத்தில், (163-165 அத்தியாயங்களில்) அர்ஜுனன் மகாமேருவுக்குப் போய் அவ்விடத்தில் சில காலம் வாசம் செய்த பிறகு திரும்பி வந்து தன் தமையனாகிய தருமபுத்திரனிடத்தில் வருணித்திருப்பதை பார்க்கலாம். அந்த

---

* அன்றைய தினம் சூரியன் முதலில் காணப்படுவதை வடக்கில் சில டிகிரியிலிருந்து பார்க்கலாம். அதைக் குறித்துத்தான் கீதையில் ஸ்ரீகிருஷ்ண பகவான், 'மாதங்களில் மார்கழி மாதம் நான்' (பகவத்கீதை 10-வது அத்தியாயம்) என்று கூறுகின்றார். நாம் மார்கழி மாதத்தில் விடியுமுன் செய்கிற திருப்பள்ளி யெழுச்சிப் பூசை இதை உத்தேசித்து வந்ததே.

வர்ணனையையும், இப்பொழுது அவ்விடங்களுக்குச் சென்று நேரே பார்த்துப் படம் எடுத்திருப்பதை யும் ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டும் சரியாகவே இருக் கும். உண்மையைக் கூறும் வான சாஸ்திரமும் கணித சாஸ்திரமும் இதற்கு ஒத்திருப்பதனால், பிற மத நூல் களை யொப்பச் சந்தேகமோ, பிழையோ இருக்கமுடியாது. வைகுண்டமும் நரகமும் பூமியிலிருந்து மூன்றுகோடி மைலுக்கு மேலும் கீழும் இருக்கிறதென்று ஒரு புராணம் கூறுமானால் அதை நம்புகிறோம்; ஆனால் கணிதசாஸ் திரம் அப்படிப்பட்டதன்று. பாஸ்கராசாரியார் சுமார் 1000 வருஷங்களுக்குமுன் சொன்ன விஷயத்தை நான் மகாமேரு யாத்திரையில் நேரில் அறிந்தேன். 66-ஆவது டிகிரியைத் தாண்டி வடக்கே போகும்பொழுது வரவர இரவு குறைய மிகுந்தநேரம் சூரியனைப் பார்க்கலானேன். இது நேரிற் கண்டது.

இனி, நான் மகாமேரு யாத்திரை செய்த விவரத்தைத் தெரிவிக்கிறேன்:—பண்டைநாளில் அர்ஜ்ஜுனனைப்போல் நம் பரதகண்டத்திலிருந்து மகாமேருவிற்கு நடந்தும் போக லாம்; மோட்டாரிலும் போகலாம். நானோ சில விடங் களில் கப்பலிலும், பலவிடங்களில் ரயில் வண்டியிலும் வேறு சில விடங்களில் ஆகாய விமானத்திலும் யாத்திரை செய்தேன். போய்வரச் சுமார் பதினையாயிரம் மைல் ஆயின.

நான் பம்பாயிலிருந்து புறப்பட்டேன். அதிவேக மாய்ச் செல்வதும் சகல சௌகரியங்களையும் அநுபவிக்கக் கூடியதுமான இடாலியன் ஸ்டீமராகிய விக்டோரியா

என்னும் கப்பலில் ஏறினேன். நம்மவரிற்பலர் கப்பல்களைப் பார்த்திருப்பார்களாதலினால், நான் அதைக்குறித்து வர்ணிக்க வில்லை. பம்பாயிலிருந்து மாலை 4-30 மணிக்குக் கப்பல் புறப்பட்டது. கப்பல் தங்கும் அடுத்த இடம் ஏடன். அது பம்பாய் ராஜதானியைச் சேர்ந்தது. நேர் மேற்கில் 1,659 மைல் தூரத்தில் உள்ளது; அங்குப் போய்ச்சேரச் சரியாக மூன்று தினங்கள் ஆயின.

இந்தியாவை விட்டுப் புறப்பட்டு வெளித் தேசங்களுக்குச் செல்கிறவர்கள், முதலில் சர்க்காரிடம் பார்க்கப்போகிற தேசங்களெல்லாவற்றிற்கும் அநுமதிச் சீட்டுப் பெற வேண்டும். அதற்குப் 'பாஸ் போர்ட்டு' என்று பெயர். சிறு புஸ்தக வடிவான அந்த அநுமதிச் சீட்டு நம் கையில் எப்பொழுதும் இருக்கவேண்டும். அது தவறிவிட்டால் யாத்திரைக்குத் தடைநேரும். ஆதலால் அப் புஸ்தகத்தை மிகவும் ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டும். கப்பலில் ஏறினவுடன் அந்தப் பாஸ்போர்ட்டைக் கப்பல் அதிகாரிகள் வாங்கி வைத்திருப்பர்; இறங்குகிற இடத்தில் அதைத் திருப்பிக் கொடுப்பார்கள். கப்பலில் ஏறினதும், போஜன சாலைத் தலைவரிடம், 'நான் இன்ன உணவை உண்பவன்; இன்னின்னவை சேர்க்கமாட்டேன்,' என்று விவரமாக எழுதிக் கொடுக்கவேண்டும். கொஞ்சங்கூடத் தவறுதல் இல்லாமல் அந்தப் போஜனசாலை அதிகாரி நடத்துவார். நம் தேசத்து மக்களாகிய மாணவர்களும், வியாபாரிகளும், பிறரும் அதிகமாக மேனாட்டுக்கு யாத்திரை செய்கிறபடியினால், கப்பல்காரர்களுக்கு நம்முடைய வழக்கம் தெரிந்திருக்கிறது. அதற்குத் தக்கபடி வேண்டிய சாமான்களை

யும் கறிகாய் பழம் முதலியவைகளையும் வாங்கி வைக்கிறார்கள். சாமான்களை வைக்கப் பனிக்கட்டியினால் மூடப்பட்ட குளிர்ந்தஜோரறை கப்பல்களில் இருக்கிறது. அதில் பால், பழம் முதலான சாமான்களை வைத்திருந்தாலும் அவை கெட்டுப்போகா; வைத்தபடி அப்படியே யிருக்கும். சாதாரணமாய் நாள்தோறும் காலை, பகல், மாலை ஆகிய மூன்றுவேளை உணவு கொடுக்கப்படும். அதற்கு மேலாகவோ காலந் தவறியோ போஜனம் வேண்டுமானால், முன்னதாகத் தெரிவிக்க வேண்டும்.

நாள்தோறும் காலையில் நமது கடியாரத்தைக் கப்பல் கடியாரத்தைப் பார்த்துத் திருத்திவைத்துக் கொள்ளவேண்டும்; ஏனென்றால், நாள்தோறும் 24 மணி நேரத்தில் பூமி ஒரு தடவை சுற்றுவதனாலும், நாம் மேற்குத்திக்கை நோக்கிப் போகிறதினாலும் நமது கடியாரத்தில் மணி குறைந்தே காணப்படும். நமக்கு நேர் கீழே, பூமியின் அடிப்பாகத்தில் அமெரிக்காக் கண்டம் இருக்கிறபடியினால் இந்தியாவில் சூரியோதயமாகுங்கால் அமெரிக்காவில் சூரியாஸ்தமனத்தைப் பார்க்கலாம். அப்படியே இவ்விடத்தில் பகலாயிருக்கும்பொழுது அமெரிக்காவில் நடுநிசி காலமாயிருக்கும். இம்மாதிரி அந்தந்தப் பூபாகங்களிலிருக்கிற தேசங்களின் காலம் அந்தந்தப் பாகங்களின் பகல் இரவு கணிதக்கணக்கின்படி இருக்குமென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். இந்தியாவுக்கும், வடமேற்கு திசையிலிருக்கும் லண்டன் பட்டணத்துக்கும் சுமார் 6 மணிநேரம் கால வித்தியாசம் உண்டு; இந்தியாவிலேயே கிழக்கே யுள்ள கல்கத்தாவிற்கும் மேற்கேயுள்ள பம்பாய் நகருக்கும் சுமார் ஒரு மணி

நேரம் சூரியோதய வித்யாசமிருக்கிறது. நாம் கப்பலில் நேர் மேற்கே இருக்கிற ஏடனுக்குப் போகிறபடியினால், நாள்தோறும் அரைமணி குறைந்துவரும்.

ஏடனிலிருந்து கொஞ்சம் வடமேற்காகச் சுமார் 1,200 மைல் தூரத்தில் போர்ட் ஸேட் என்கிற துறைமுகம் இருக்கிறது. அந்த இடத்தைச் சேருமுன் உள்ள சமுத்திரத்திற்குச் 'சிவப்புக்குடாக்கடல்' (Red Sea) என்று பெயர். அதைச்சேர மூன்று நாள் ஆகும். அதில் கடைசி நூறு மைலுக்கு ஒரு கால்வாய் வெட்டியிருக்கிறார்கள். அது வழியாகக் கப்பல் போகவேண்டும். அந்த நூறு மைலைக் கடக்கச் சுமார் 12 மணி நேரம் ஆகும். இந்தக் கால்வாய் வெட்டுமுன் ஆசியாக் கண்டமும் ஆப்பிரிக்காக் கண்டமும் ஒன்றாக இருந்தன. கப்பல்களும் ஆப்பிரிக்காக் கண்டத்தைச் சுற்றி லண்டன் முதலான பட்டணங்களுக்குப் போய்க் கொண்டிருந்தன. அவ்வழியாகப் போகும் போது லண்டன் போய்ச் சேர வெகுநாள் பிடிக்கும். இந்தக் கால்வாய் வெட்டப்பட்டபின் குறுக்கு வழியாகக் கப்பல்கள் போகத் தொடங்கின. அதனால் ஐரோப்பாக் கண்டத்துக்கு நாம் 12 தினங்களுக்குள் இப்போது போய்ச் சேருகிறோம். இந்தக் கால்வாய் ஆரம்பிக்கும் பிரதேசத்திற்கு சூயஸ் என்று பெயர்; இவ்விடத்தில் ஒரு துறைமுகமும் இருக்கிறது.

இவ்விடத்திலிருந்து சுமார் 100 மைல் தூரத்துக்குள் தென்மேற்குத் திசையில் ஈஜிப்ட்டுக்குப் பிரதானமான கேய்ரோ என்கிற பட்டணம் இருக்கிறது. இந்தப்பட்டணம் நயில் நதியின் கரையில் உள்ளது. பள்ளிக்கூடத்திற்

படித்தவர்கள் நயில்நதியைக்குறித்து நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கலாம். சுமார் ஐயாயிர வருஷத்திற்கு முன் ஈஜிப்ட் மிகுந்த நாகரிகத்தை அடைந்திருந்ததாம். சிலர், பத்தாயிர வருஷகாலம் கடந்த உயர்ந்த நாகரிகச் சின்னங்கள் நயில் நதிக்கரையில் காணப்படுவதால், இவ்விடந்தான் பூமியில் முதல் நாகரிகப் பிரதேசம் என்று சொல்லுகிறார்கள். பாரோவா போன்ற சில ராஜாக்கள் முன்னம் அங்கே இருந்தார்கள். *அந்த ராஜாக்கள் இறந்தவுடன் அவர்கள் சரீரத்தையும், அவர்கள் அநுபவித்த சகல சாமான்களையும் பூமியிற் பெரிய கல்லறைகள் கட்டி அவற்றிற் புதைத்து வைத்திருந்தார்கள். இவ்விதம் சரீரத்தைப் பாதுகாத்து வைத்திருப்பதை சாந்தோக்கிய உபநிஷத்தில் எட்டாவது பிரபாடகத்தில் எட்டாவது கண்டத்தில், "அரசர்கள் தங்கள் சரீரத்தையே ஆத்மாவாகப் பார்ப்பதனால், இறந்தவுடன் சரீரத்தை வெகு அலங்காரங்கள் செய்து ரக்ஷிக்க விரும்புகிறார்கள்," என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் உண்மையை இப்போதும் ஈஜிப்டில் பார்க்கலாம்.

நான் சூயஸ் துறைமுகத்தில் ராத்திரி 12 மணிக்குக் கப்பலை விட்டு இறங்கி மோட்டாரில் 4 மணி நேரத்துக்குள் கெய்ரோ பட்டணம் போய்ச் சேர்ந்தேன். உலகத்தில் ஏழு ஆச்சரிய பொருள்கள் இருப்பதாக நீங்கள் பள்ளிக்

---

* ஈஜிப்ட் தேசத்துப் பாரோவா ராஜாக்கள் சரித்திரத்தைக் குறித்து ரிக்வேதத்தில் சொல்லியபடி 5,000–6,000 வருஷங்களுக்கு முன் ஆண்டு வந்த செய்தியும் அவர்கள் பெயர்களும் குறிப்பிட்டு ஆராய்ச்சி செய்து வித்வான் ஒருவர் புஸ்தகம் யெழுதி வருகிறார். இல்லுஸ்ட்ரேடட் வீக்கிலீ ஆப் இந்தியா பேபர் 7–7–35 முதல் பார்க்க.

கூடத்தில் படித்திருக்கலாம். அதில் முக்கியமானதற்கு பிரமிட் என்று பெயர். இது நயில் நதிக்கரையில் இருக்கின்றது. இறந்தவர்களைப் புதைத்து வைத்த கல்லறையே இது. மூன்று இப்பொழுது காணப்படுகின்றன. இவற்றில் பெரியது கிறிஸ்து பிறப்பதற்கு முன் 3,650-ம் வருஷத்தில் கட்டப்பட்டதாகச் சரித்திரங்களினுல் தெரிய வருகிறது. நாள்தோறும் லக்ஷம் ஜனங்கள் வேலை செய்து 20 வருஷ காலத்தில் கட்டி முடித்ததாகச் சரித்திராசிரியர் கருதுவர். அடியில் 764 அடி அகலம்; முடி 480 அடி உயரத்தில் இருக்கிறது. இந்தக் கட்டடத்தின் சிற்பவேலைகளைப் பார்க்கவேண்டியது அவசியமே; .[இதன் படம் என்னிடம் உண்டு; ஆயினும், அதிகச் செலவேற்படுவதினுல், இதையும் என் யாத்திரையில் பிறஇடங்களில் எடுத்த படங்களையும் இதில் பதிப்பித்து வெளியிடக்கூட வில்லை.] பின்னர் பொருட் காட்சிச் சாலைக்குப் போனேன். அதில் முன் சொன்ன பாரோவா ராஜாக்களின் கல்லறைகளிலிருந்து எடுத்த அலங்காரத்துடன் கூடிய சவங்களும், அவர்கள் பூண்ட ஆபரணங்களும் நாற்காலி முதலான தங்கச் சாமான்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. விலையுயர்ந்த இந்த சாமான்களையும் இவற்றின் அற்புதமான வேலையையும் என்னுல் வர்ணிக்க முடியாது. ஒவ்வொரு கல்லறைச் சாமான்களையும் கோடிக் கணக்காக மதிப்பிட வேண்டுமே யொழிய லக்ஷக்கணக்கில் சொல்ல முடியாது. இதைப் பற்றி நன்ருகத் தெரிந்துகொள்ள விரும்பினுல், இதைக் குறித்து எழுதப்பட்டிருக்கிற புஸ்தகங்களை வாங்கிப் படித்தறியலாம்.

திரும்பவும் கெய்ரோவிலிருந்து, வடமேற்கே சுமார் 100 மைல் தூரத்திலிருக்கிற போர்ட் ஸேட் என்கிற துறை முகத்திற்கு ரயில் வண்டியில் மாலையே வந்தேன். அதற்குள் எங்கள் கப்பலும் சூயஸ் கால்வாய் வழியாக மெள்ளச் சுமார் 12 மணி நேரத்தில் 100 மைலையும் தாண்டி வந்திருந்தது. உடனே அந்தக் கப்பலில் ஏறி மேடிட்டரேனியன் கடல் வழியாக, வடமேற்கில் 1,118 மைல் தூரத்தில் இருக்கிற இடாலி தேசத்திலுள்ள நேபில்ஸ் பட்டணம் வந்து இறங்கினேன். இவ்விடம் வந்து சேர மூன்று தினங்கள் ஆயின. இவ்விடத்திலிருந்து திரும்பவும் ரயில் வண்டியில் யாத்திரை.

நேபில்ஸ் நகரைப் பற்றிய பழமொழி ஒன்று உண்டு. அஃதாவது 'மரணமடையு முன் மனிதன் நேபில்ஸ் பட்டணம் பார்க்க வேண்டும்' என்பதாம். அது வளைவுள்ளதொரு கடற்கரையில் ஒரு மலைக் குன்றின் மேல் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டணத்திற்குத் தெற்கே எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் வஸுவியஸ் என்கிற எரிமலை ஒன்று சுமார் 18 மைல் தூரத்தில் இருக்கிறது. இப்போது உண்டாயிருக்கும் கலைகளின் உதவியால் அந்த மலையில் ஏறி எரிகிற அக்கினியைப் பார்க்கலாம்; மேலே கிளம்பும் கந்தகப் புகையையும் கையினுல் பிடிக்கலாம். அந்த மலைக்குப் போக, 6 மைல் மோட்டாரிலும், பிறகு 6 மைல் மின்சார ரயிலிலும், உலோகக் கயிறு மூலமாக டிராம் மாதிரியுள்ள ஒருவகை வண்டியில் 6 மைலும் ஏறிச்செல்ல வேண்டும். அப்போது தீ எரிகிற இடத்துக்கு ஒரு பர்லாங்கு சமீபத்தில் வருவோம். பின்னர்

அங்கே மேற் பார்வைக் கென்று அமர்த்தப் பட்டிருக்கும் போலிஸ்காரன் உடன் வந்து தீ எரிகிறதைக் காண்பிக்கிறான். மலையில் சுமார் 4,000 அடி உயர முள்ள மேல் தட்டில் தீ எரிகின்றது. எரிவாய் சுமார் இரண்டு மைல் சுற்றளவுள்ளதாயிருக்குமென்று தோன்றுகிறது. ஒவ்வொரு காலங்களில் ஒவ்வொரு பக்கங்களில் அதிகமாக எரிகிறது. சில இடங்களிலிருந்து கருப்புப் புகை அடர்த்தியாகக் கிளம்புகிறது. சில காலங்களில் அக்கினிப் பிரவாகம் சுற்று வட்டத்திலுள்ள கிராமங்களையும் சிறு நகர்களையும் நாசம் செய்வது வழக்கமாம். அப்படிப்பட்ட பிரவாகம் அடிக்கடி நேபில்ஸுக்கும் நேர்ந்திருக்கும் செய்தியைப் பத்திரிகைகள் வாயிலாக அறிந்திருக்கலாம். அந்த எரிமலைக்கு மேற்கே 25 மைல் தூரத்திலிருந்த பாம்ப்பே பட்டணமானது இந்தப் பிரவாகத்தினால் கி. பி. 79-ம் ஆண்டில் அழிந்து இப்போது சில நூற்றாண்டுகளுக்கு முன் வெட்டி எடுக்கப்பட்டது; பார்க்க வருகிறவர்களுக்குத் தகுந்த சகல சௌகரியங்களும் அங்கு செய்துவைத்திருக்கின்றனர். நேபில்ஸிலிருந்து ரயில் வண்டியிலும் மோட்டாரிலும் பாம்ப்பே பட்டணத்திற்குப் போகலாம். அப்பட்டணம் சுமார் 25 மைல் தூரத்தில் இருக்கிறது. சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்த நாகரிகத்தைப் படித்துத் தெரிந்து கொள்ளச் சரித்திரக்காரர்கள் அடிக்கடி போகிறார்கள். 176 தெருக்கள் இருந்திருக்கின்றன. கிரேக், ரோம நாகரிகம் இரண்டும் கலந்திருக்கிறது. அந்தப் பட்டணத்தின் நடுவில் சூரியன் கோயில் ஒன்று உண்டு. அதற்கு ஜூபிடர் ஆலயம்

என்று பெயர். ஜூபிடர் என்பது வேதத்தில் 'தியௌஸ் பிதா' என்ற சொல்லின் சிதைவாம். நம் ஆரியர்களுடைய புராதனமான நாகரிகத்தை கிரேக்கர் பின்பற்றினர். அவர்கள் மூலமாக ரோம் தேசத்தார் கைக்கொண்டார்கள். கிறிஸ்து மதம் பரவ ஆரம்பித்தவுடன் இந்த வைதிக பூஜைச் சடங்குகள் எல்லாம் மெள்ள மெள்ள மாறிவிட்டன. அவ்வாறு மாற்றம் அடையச் சுமார் ஆயிர வருஷங்கள் கழிந்தன. பாம்ப்பே கோயிலை நீங்கள்பார்த்தால் இதை மலையாளத்திலுள்ள ஒரு கோயிலென்று சொல்லுவீர்கள்; நேபில்ஸ் பட்டணத்தில் பவழ வியாபாரிகள் அதிகம். பவழம் கடைந்து வர்ணம் ஏற்றுகிற இரண்டு பெரிய யந்திர சாலைகளை நானும் பார்த்தேன். பிறகு இவ்விடமிருந்து சுமார் 4 மணி நேரத்தில் 120 மைல் தூரம் உள்ள ரோம் ராஜதானிக்கு ரயில் வண்டி மூலமாகப் போய்ச் சேர்ந்தேன். இந்த தேசமானது, மைசூருக்கும் பூனாவுக்குமிடையிலுள்ள வழிபோல் மலைப்பிரதேசமாக இருக்கிறது. இனி ரோமாபுரியைப்பற்றி விவரிப்போம்.

உலகத்தின் பண்டைய நாகரிகங்கள் இப்பொழுது ஐந்து இடங்களில் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று நம் நாட்டில் பஞ்சாப் தேசத்திலும், இரண்டாவது பாபிலோன் என்று சொல்லுகிற மத்திய ஆசியாப் பிரதேசத்திலும், மூன்றாவது கிரீஸ் தேசத்திலும், நான்காவது ரோம் தேசத்திலும், ஐந்தாவது இடாலி தேசத்திலும் உள்ளன. அவற்றில், முதலிரண்டும் ஒரு மாதிரியாகவும், சற்றேறக்குறைய ஒரே காலத்ததாகவும் இருக்கின்றன. மூன்றாவதும் நான்காவதும் ஒரு மாதிரியாகவும் ஒரே காலத்தினதாயும்

தோற்றுகின்றன. ஐந்தாவது ஒரு தனிப்பட்ட நாகரிகமாகக் காணப்படுகிறது. இவ்வாறு கி. மு. ஏழாயிரம் முதல் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்வரை இருந்தவைகளாகக் காணும் நாகரிகம் ஐந்தும் பூமிக்குள் புதைபட்டுக் கிடந்து இப்பொழுது வெளி வந்திருக்கின்றன. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்த நாகரிகத்தைப்பற்றி, பூமியிலிருந்து வெட்டி யெடுக்கப்படும் சாமான்களைக் கொண்டு சரித்திர வாசிரியர் பல சரித்திரங்களை எழுதிவருவதைப் புத்தகங்கள் மூலம் நீங்கள் பார்த்திருக்கலாம். பஞ்சாப், பாபிலோன், ஈஜிப்ட் ஆகிய இந்த மூன்று தேசங்களிலும் உள்ள புராதன நாகரிக இடங்கள் இப்பொழுது காடாக இருக்கின்றன. கிரீஸ், ரோம் ஆகிய இரண்டு மட்டும் நாடாகவே இருந்துவருகின்றன. தவிரவும் இங்கே முன்னுளிற் கட்டப்பட்டிருந்த கட்டடங்களிற் சில பூமிக்குள்ளும், சில மேலுமாக இருக்கின்றன.

வெகு காலமாக ரோம் தேசத்தை ஆண்டுவந்த அரசர் பலர் போர் வீரர்களாகவும் வேதாந்திகளாகவும் இருந்து வந்தார்கள். அப்படிப் பிரசித்தி அடைந்திருந்த காலங்களில் நமது பரதகண்டத்துக் கணித சாஸ்திர வித்வான்கள் அநேகர் ரோமாபுரிக்குப் போய்ச் சில காலம் அங்கே வசித்திருக்கிறார்கள். அவர்களிற் சிலர், அந்தத் தேசத்து வித்வான்களைத் தங்கள் குருவாகக் கொண்டாடி, தாங்கள் எழுதிய சம்ஸ்கிருத கிரந்தங்களில் ரோமகாசாரியர்களுக்கு நமஸ்காரம் சொல்லியிருக்கிறார்கள். சுமார் 1,500 வருஷங்களுக்கு முன் வராகமிகிரர் என்பார் தாம் எழுதிய பிரகத்ஜாதகத்தில், 12 ராசிகளின் பெயர்களில் பாதிக்குமேல் ரோம் பாஷைப்

பெயரைக்கொடுத்து விட்டார். மேஷத்துக்கு 'க்ரிய' என்றும், ரிஷபத்துக்கு 'தாவுரி' என்றும், ஸிம்ஹத்துக்கு 'லேய' என்றும் இம்மாதிரி பெரும்பாலான பெயர்களைக் கணித சாஸ்திரத்திலும் ஜோதிஷ சாஸ்திரங்களிலும் நாம் காணலாம். ஒன்பதாவது நூற்றாண்டில் வந்த பட்டோத் பலர் என்பவரும் தம் வியாக்கியான புஸ்தகங்களில் 'இது ரோமகாசாரியர் அபிப்பிராயம்,' 'இது ரோமக சித்தாந்தம்,' என்று அடிக்கடி எழுதியிருக்கிறார். ரோமர்கள் பெரிய வியாபாரிகளாகவும் இருந்தனர்; அதனால், அவர்கள் அடிக் கடி தென்னிந்தியாவுக்குக் கப்பல் மார்க்கமாக வந்து ஏலம் மிளகு முதலான சாமான்களை மலையாளத்திலிருந்து வாங்கிச்சென்று தங்கள் தேசத்திலிருந்த தங்க நாணயங் களைக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள். இப்பொழு தும் நம்நாட்டுப் பல்வேறிடங்களில் அகப்படுகிற தங்க நாணயங்கள், ரோம் தேசம் சுமார் இரண்டாயிரம் வருஷங் களுக்கு முன்னம் அடைந்திருந்த நாகரிகத்தை ஒருவாறு தெரியப்படுத்துகின்றன.

ரோமாபுரி ஏழுமலைக்குன்றங்களுக்கு நடுவில் அமைக் கப்பட்டிருக்கிறது. நடுவில் தைபர் என்கிற ஒரு நதியும் ஓடுகின்றது. இஃது ஒரு அழகான பட்டணம் ஆகும். கிறிஸ்துவின் முக்கிய சிஷ்ய பரம்பரை மடாதிபதியி னுடைய மூல ஸ்தானமும் இதுவே. கிறிஸ்துவின் பிரதம சிஷ்யர் பெயர் ஸேயின்ட் பீடர் என வழங்கும். அவர் கையில் மோக்ஷநகரவாசற் கதவின் சாவியை குரு கொடுத்து விட்டுப் போனதாகக் கிறிஸ்தவர்களிடையே ஒரு செய்தி வழங்கி வருகிறது. ஆகையால் ஸேயின்ட் பீடர் கோயிலி

லும், அதை யடுத்திருக்கிற மடத்திலும் பரம்பரையாக வருகிற கிறிஸ்தவ குருக்கள் உடுத்துக்கொள்ளுகிற ஆடைகளிலும் தங்கத் திறவு கோலின் அடையாளம் இருப்பதை இப்பொழுதும் பார்க்கலாம். ஸேயின்ட் பீடர் கோயிலானது, பூலோகத்தில் உள்ள விலையுயர்ந்த உத்தமமான கட்டடங்களில் ஒன்றாகும். இது கட்டப்பட்ட விவரத்தையும் இதன் கட்டடச் செலவு முதலானவைகளையும் குறித்துச் சித்திரப்படங்களுடன் பல புத்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இந்தக் கோயிலை அடிமுதல் கோபுரம் வரை ஏறிப்பார்க்கச் சுமார் நான்கு மணி நேரம் ஆகும். மேலே கடைசி அங்கணத்தில் ஒரு பக்கத்தில் நின்றுகொண்டு மெள்ளச் சப்தம் செய்தால், அந்த ஒலி எதிர்ப்பக்கத்தில் தெளிவாகக் கேட்கும். இது சப்த சாஸ்திரம் படித்த நிபுணன் ஒருவன் கட்டிய அங்கணமாகும். இம்மாதிரி நம் இந்தியாவில், பீஜப்பூரில் துருக்கர் கட்டிய ஒரு கோபுர அங்கணமுண்டு; இஃது ஒரு அற்புத தத்துவ சாஸ்திரத் திறமையாகும்.

ஸ்ரீ கிறிஸ்து மஹாமுனிவரின் உருவச் சிலையும் அவரது 12 சிஷ்யர்களின் உருவச் சிலைகளும் உயர்ந்த வெள்ளைக் கற்களால் அமைக்கப் பட்டு மேற்கூறிய கோயிலில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. அந்தக் கோவிலின் மத்திய பாகத்தில் ஸ்ரீ கிறிஸ்துவின் உருவச் சிலையும் அவர் மாதா மேரியின் சிலையும் சில இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. எப்பொழுதும் அணையாத் தீபத்துடன் வெகு விமர்சையாக பூஜையும் நடந்து வருகிறது. 12 சிஷ்யர்களின் உருவங்கள் முதல் மாடியில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தங்க வர்ணத்தினுல் சித்திரங்கள் சுவர்களிலேயும் மேல் பாகங்களிலேயும் எழுதப்பட்டிருத்தலால் கோவிலுக்குள் நுழையும் பொழுது மகிழ்ச்சியுண்டாகிறது. பக்தர்கள் எப்பொழுதும் வந்து நமஸ்காரஞ்செய்து தமது தலைகளை ஸ்ரீ கிறிஸ்துவின் கால் கடை விரலில் தொட்டுவிட்டு ஜபஞ் செய்து போகிருர்கள். சில பிம்பங்களுக்குப் பூஜை செய்கிற சில குருக்கள் உட்கார்ந்து கொண்டு ஒரு நீளப் பிரம்பினுல் பக்தர்கள் தலையில் 'உன் பாபம் போயிற்று' என்று தட்டுவார்கள். சில பக்தர்கள் தினந்தோறும் செய்த எந்த ரகஸிய பாபங்களையும் குருவின் முன் ஒப்பித்து ஞான ஸ்நானத்துடன் மன்னிப்புப் பெறுவார்கள். நகரத்தைச் சுற்றி கொஞ்சம் தூரத்திலிருக்கிற பெரியோர்கள், தினந்தோறும் தாங்கள் வசிக்கும் இடத்திலிருந்து இந்த கோவில் கோபுரத்தை தர்சனஞ் செய்து மகிழ்வார்கள். ஸெயின்டு பீடர் கோவிலை விட சிறிதான கோவில்கள் நகரத்தைச் சுற்றி அங்கங்கே யிருக்கின்றன. அதில் ஒரு கோவிலில் பிம்பத்திற்குக் கீழ் 32 படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு படியிலும் கீழேயிருந்து முதல் படி முதல் பக்தர்கள் உட்கார்ந்து கொண்டு ஜபஞ் செய்து அடுத்த மேல் படிக் காரர்களைப் பார்த்து காத்துக் கொண்டிருக்கிருர்கள். அவர்கள் மேல் படி போனவுடன் இவர்களும் அடுத்தபடி ஏறுவார்கள். இப்படி 32 படிகளையும் ஏறச் சுமார் 20 நிமிஷம் முதல் 30 நிமிஷங்கள் வரையிலாகும். இதற்கு முக்தி சோபானம் என்று பெயர்.

ஸெயின்டு பீடர் கோயிலுக்கு அருகிலிருப்பது ஸ்ரீ குருவின் மடம். அதற்கு 'வேடிகன்' என்று பெயர்.

இப்பொழுது அதன் தலைவராகிய ஜகத்குருவானவர் சுமார் 70 வயது உள்ளவர்; சிறந்த தபசி. இவர் மிகவும் கௌரவம் வாய்ந்தவர். உலக மக்களில் சுமார் மூன்றில் ஒரு பங்கின ராகிய கிறிஸ்தவர்களுக்கு இந்த மடாதிபதி பரம்பரைக் குருவாவர்; நிறைந்த ஸம்பத்துள்ளவர்; ஆதலால் இவ் வுலகில் இவர் ஒரு முக்கிய ஸ்ரீமான் ஆவார். அவருடைய தரிசனம் எளிதிற் கிடைப்பது இல்லை; தவிரவும் கிறிஸ்து வர்களே யன்றி அயலார் அவரைத் தரிசிப்பதாயினும் தூரத்திலிருந்து மண்டியிட்டுக் கும்பிட வேண்டுமென்பது வழக்கத்திலிருந்து வருகிறது. பணமில்லாமல் சிஷ்யர் கொடுக்கும் காணிக்கையால் வாழ்ந்து வருகிற நமது மடாதிபதிகளிற் பலர் எவ்வளவோ ஆடம்பரத்தையும் கர்வத்தையும் வெளியில் காண்பிக்கிற பொழுது, உலகத் தில் பெரும்பாலோருக்கு முதல் ஸம்பன்னராக இருந்து வருகிறவரும் 'போப்' என்ற பெயர் வழங்கப் பெற்றவரு மான இக் கத்தோலிக் மடாதிபதிக்கு இவ்வித ஆடம்பரங் களும் பிறவும் இருப்பதில் என்ன ஆச்சரியம்! மடத்தை ஒட்டி ஒரு பெரிய புஸ்தகசாலையும் ஒரு மியூஸியமும் (பொருட்காட்சிச் சாலை) இருக்கின்றன. புஸ்தகசாலை யென் ருல், இப்பொழுது விளங்கிவருகிற சாதாரணப் புஸ்தகசாலை யன்று. கிறிஸ்து பிறக்கு முன் நூற்றுண்டுகளாக வாழ் ந்து வந்த கிரேக், ரோம் வித்வான்கள் எழுதிவைத்துப் போன எழுத்துச் சுவடிகள் இவ்விடத்தில் வைத்து நன்ருய்ப் பாதுகாக்கப் பட்டு வருகின்றன. அவை தீயினுல் எக்காலத்திலும் அழியாத வகையில் யந்திரப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. புகைப் படம் பிடிக்கும் யந்திரங்

கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், அவற்றில் கிடைத்தற் கரிய கிரந்தங்களைப் படம் பிடித்துப் பல பிரதிகள் செய்து வெவ்வேறிடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகை யினால் அங்குள்ள நூல்களுக்கு அழிவு நேர இடமே யில்லை. புராதன நாகரீக சரித்திரம் எழுதுவோர் பலர், பல தேசங்களிலிருந்து இவ்விடம் வந்து, தினந்தோறும் லைப்ர ரியில் உட்கார்ந்து நேரே இரண்டாயிர வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட சுவடிகளைப் படித்துப் புஸ்தகங்கள் தயாரிக் கிறார்கள். அவர்களுக்காக ஒரு நேர்த்தியான அறை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அப்படியே பொருட் காட்சிச் சாலையிலும் சித்திரங்கள் எழுதுகிறவர்களுக்கு எல்லாச் சௌகரியங்களும் செய்து கொடுக்கப்பட்டிருக் கின்றன. இந்த விசித்திரமான காட்சிச் சாலையில் 16ம் ளும் என்று ஒரு பாக மிருக்கிறது. அதில் ஸ்ரீகிறிஸ்து மதப் படி ஆடம், ஈவ் என்று சொல்லப்பட்ட ஆதி மாதா பிதாக் களுடைய சரித்திரம் தொடங்கி கிறிஸ்து தேவ லோகம் ஏறிய வரையுள்ள சரித்திரங்களை பதினைந்தாவது நூற்றாண் டில் ஒரு அவதார புருஷராகக் கொண்டாடப்பட்ட மைகேல் ஆஞ்சிலோ சில்பியினால் எழுதப்பட்ட சித்திரங்களிருக்கின் றன. இவைகளைப் பார்க்க வேண்டியது அவசியமே.

மடாதிபதியான போப் குருவைத் தரிசிப்பது மிக வும் எளிதன்று என்பதை முன்னமே குறிப்பிட்டுள்ளோம். வாரத்தில் குறிப்பிட்ட நாட்களில் ஒரு காலம் குறிப்பிடப் படும்; அப்போது ஜனங்கள் கூட்டங் கூட்டமாக மடத்துக் குப் போய்க் காத்திருப்பார்கள். தூரத்திலிருந்தே அவரு டைய தரிசனம் பெறலாம்; வித்வான்களுக்கும் ஸம்பன்

னர்களுக்கும் மாத்திரம் சமீபத்தில் தரிசனம். ராஜாக்களும் பிரஸித்தி வாய்ந்தவர்களும் அவரைத் தொடும் பாக்கியம் பெறுவார்கள்; அஃதாவது அவர் கையில் போட்டிருக்கிற குருபரம்பரையாக வந்த மோதிரத்தை அவர்கள் முத்த மிடு வார்கள். ஆனால் எல்லோரும் மண்டியிட்டு நமஸ்காரம் செய்யவேண்டும். அதற்கு இஷ்ட மில்லாதவர்களுக்கு போப்பின் தரிசனம் கிடைக்காது. தவிர, காணிக்கையும் உண்டு. இந்தக் காணிக்கையினால் தான் இம்மடமானது அபரிமிதமான ஸம்பத்துடன் கூடி விளங்குகிறது.

அவர்கள் மடத்துப் புஸ்தகசாலையில் இருந்த சில இந்திய ஏட்டுச்சுவடிகளுக்கு ஒரு ஜாப்தா (லிஸ்டு) இலவச மாகத் தயாரித்து நான் கொடுத்த படியினாலும், ரோம் யூனிவர்ஸிடி மாணவர்களுக்கு உபந்நியாசம் செய்ய என்னைக் கேட்ட படியினாலும், யுனிவர்ஸிடி அத்யக்ஷர் (சான்ஸலர்) நேரே போப்பினிடத்தில் இருக்கிற கார்டினல் அவர்களுக்கு என் வருகையை எழுதினதினாலும் எனக்கு போப்பின் தரிசனத்துக்கு அனுமதி கிடைத்தது. தவிர, நான் இந்தியாவிலிருந்து சென்ற சாஸ்திரியாகவும், வைதிக னாகவும் இருந்ததனால் மேலே கூறிய நிபந்தனைகள் யாதும் இல்லாமல் எளிதில் த்ரோன்ரூம் என்ற அறையிற் சென்று அவரைத் தரிசித்தேன். அவரும் உபசாரத்துடன் என் கைகளைத் தொட்டு இழுத்துக் கொண்டு சுமார் 10 நிமிஷங்கள் பேசினார். இந்தியாவிலிருந்து வந்த ஒரு ஏழை வைதிகப் பிராமணனை அவர் அவ்விதம் உபசரித்ததானது எல்லோ ருக்கும் வியப்பை யளித்தது. அவருடன் சிறிது நேரம் சம்பாஷித்ததிலிருந்து அவர் ஓர் உத்தமர் என்று உணர

லானேன். ஆயிரக்கணக்கான பக்தர்கள் கீழே தரிசனத்துக்காகக் காத்துக்கொண்டிருந்தபடியால் விரைவில் விடை பெற்றுத் திரும்பிவிட்டேன். போப் குருவால் ஒரு இந்திய சாஸ்திரி சமமாக உபசரிக்கப்பட்டார் என்ற செய்தியை ராய்ட்டர் தந்தி உத்தியோகஸ்தன் ஒருவன் 'வெடிகன்' ஆபிஸர் மூலமாகத் தெரிந்து கொண்டு எங்கும் பத்திரிகைகளுக்குத் தெரிவித்து விட்டான்; அச்செய்தி ரோம் பத்திரிகைகளிலும் அன்று மாலையிலேயே வெளியாயிற்று. அது முதல் நான் வெளியே செல்லும் போதெல்லாம், 'இவர் கீழ்தேசத்து உபதேசகர்; போப்பின் உபசாரம் பெற்றவர்,' என்று ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். டிராம் முதலான இடங்களில் என்னைக் கண்டால் எழுந்து உபசாரம் செய்யலாயினர்.

ரோமாபுரியில் புராதன நாகரீகத்தைக் காட்டும் இடங்களை யெல்லாம் பார்த்தபின்னர் சுமார் 35 மைலுக்கு அப்பால் இருக்கிற 'லேக் அப் நேமி' என்ற இடத்தைப் பார்க்கச் சென்றேன். சுமார் 2,000 வருஷத்திற்கு முன் பூகம்பத்தினால் இரண்டு கப்பல்கள் அவ்விடத்தில் கடலில் மூழ்கிப்போயின; பிறகு மேடிட்டு அந்தச் சமுத்திரம் ஒரு பெரிய குளமாக மாறிவிட்டது. அதிலிருந்து இரண்டு கப்பல்களையும் இப்பொழுது எடுத்துக் கரையில் வைத்திருக்கிறார்கள். சரித்திரக்காரர்கள் அதைப்பார்ப்பது அவசியமே. அந்த இடத்தையும் பார்த்துவிட்டுத் திரும்பிய பின்னர், ரோமாபுரியைவிட்டு ஸ்விட்ஜர்லாந்துக்குப் புறப்பட்டேன்.

ரோமாபுரியை விட்டுப் புறப்படும் பொழுது நிகழ்ந்தனவற்றை இவ்விடத்திற் சொல்லுவது அவசியமாகும். மேற்கொண்ட ஒழுக்க முறைகளைத் தெரிவிக்கிறேன்.

நான் நீண்ட காலமாகச் சில பெரியோர் உபதேசத்தினால் இரவு 9 மணிக்கு தூங்கச் செல்வேன். காலை சுமார் 4 மணிக்குள் எழுந்திருப்பேன். இது வழக்கத்தில் வந்து விட்டதாலும் ஈசுவர கிருபையினாலும் இப்பொழுதும் நடந்து வருகிறது. பிறகு யோகாப்பியாஸஞ் செய்வது வழக்கம். பிறகு தந்ததாவனம் முதலானவை; அதன் பிறகு குளிர்ந்த ஜலத்தில் ஸ்நாநம். உடனே ஜபம், ஸூர்ய நமஸ்காரம் பூஜை முதலானவை செய்வேன். ஸூர்யன் உதித்தது முதல் ஸூர்யாஸ்தமனம்வரையில் வேலை; ஆகார நியமமாவது:—சில வருஷங்களுக்கு முன் என் உத்யோக விஷயமாக வட இந்தியாவிலும், ஹிமாலய பர்வதத்திலும் வெகு வருஷங்கள் யாத்திரை செய்ய நேர்ந்தபடியால் சீதளப் பிரதேசத்துக்குத் தக்கபடியும், பிராணயாமத்திற்குத் தகுந்த படியும் உணவை ஏற்படுத்திக் கொண்டேன். பிறகு வெகு காலமாக "ஸ்வாத்தியாயப்ரவசனே ச" என்கிற தைத்திரீய உபநிஷத் வாக்கியப்படி படிக்கவும், படித்ததை வெளியிடவும் வேண்டும் என்கிற விதிக்கு ஏற்ப யாத்திரை செய்கிற இடங்களில் கேட்கிறவர்களுக்குப் பாடம் சொல்லுவது வழக்கம்; அப்போது படிக்கிறவர்கள் தேகத்திற்கு ஏதாவது அனாரோக்கியமிருந்தால் அதை உடனே பிராணயாம அப்பியாஸத்தினால் போக்குவது வழக்கம். இதைச் செய்ய ஆகார நியமம் முக்கியமாகும்.

நீங்கள் இந்தியா பூராவும் யாத்திரை செய்து வட தேசத்து மனிதர் சரீரத்தையும், தென் தேசத்தார் சரீரத்தையும் பார்த்தால் உடனே வித்யாஸத்தைக் கண்டுபிடிக்கக்கூடும். வட தேசத்தார் சரீர வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்

திற்கும் அவர்கள் உண்ணும் ஆகாரமே காரணமாகும். தென் தேசத்தில் உப்பு, புளி, மிளகாய் முதலானவை எப்படியாவது அளவு மீறி சாப்பாட்டுடன் சேர்ந்து, ரத்தத்தை விஷமாக்குகின்றன; ஸாம்பார், ரஸம், மோர் முதலான திரவபதார்த்தங்களால், அன்னம் சவைத்துச் சாப்பிட ஸௌகரியப்படாமல் விழுங்க நேருகிறது; இவ்வழக்கத்தால் உணவு வயிற்றில் போனவுடன், அஜீரணந் தோன்ற வியாதியை உண்டாக்குகிறது.

வட நாட்டார் உணவு கோதுமை, கேழ்வரகு, சோளம் முதலானவற்றின் மாவினால் செய்யப்பட்ட ரொட்டி யாகையால் அதைப் பற்களினால் நன்றாகச் சவைத்து விழுங்க முடியும்; தென் தேசத்து ஆகாரத்தைப் போல் உடனே விழுங்கிவிட முடியாது. சவைத்துச் சாப்பிடுகிற பொழுது கடைவாய்ப்பல் மூலமாக “சலைவா” (Saliva) என்கிற ஒரு திரவநீர் சேர்ந்து வயிற்றுக்குள் போகிறதினால் உடனே சாப்பாடு ஜீரணமாகி விடுகிறது.

மனிதன் சரீரத்தில் தொண்டை முதல் அபானம் வரை, சுமார் 35 அடி முதல் 40 அடி வரை ஒரு குழாய் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் சவைக்கப்பட்ட உணவு தொண்டைக்குள் போனவுடன் வயிற்றில் வேறு 2 திரவ நீர்களுடன் சேர்ந்து சிறுவயிறென்ற பெயருடைய சுமார் 30 அல்லது 35 அடிகள் அடங்கிய இடத்தில் ஜீர்ணமாகி, ஆகார சத்து எல்லாம் ரத்தமாக மாறிச் சக்கை மலமாக அபான வழியே வெளியில் போகின்றது. (அநுபந்தத்தில் எழுதிய அன்னக் குழாய் படத்தை பார்க்க.)

இந்த "ஆகாரத்தை நான்கு விதமாக" நான் ஜீர்ணஞ் செய்கிறேனென்று பகவத் கீதையில் 15வது அத்தியாயத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறியிருக்கிறார்.

முதலில் கடைவாயில் "சலைவா" (Saliva) என்கிற ஜலத்தினால் ஜீர்ணம். இரண்டாவது வயிற்றில் இரண்டு திரவ பதார்த்தங்களுடன் சேர்ந்து ஜீர்ணம். மூன்றாவது சிறு வயிற்றில் பூராவாக ஜீர்ணம். நான்காவது அது ரத்தமாக மாறி, சரீரத்தில் இந்திரியங்கள், மனம் முதலானவைகளுடன் சேர்வது ஒரு ஜீர்ணம்; ஆக நான்கு வித ஜீர்ணமும் ஈசுவரனால் செய்யப்படுவன; "நான் செய்கிறேன்" என்று ஸ்ரீகிருஷ்ண பகவான் சொன்னதின் கருத்து இதுவேயாகும்.

இப்படி நாம் சாப்பிடுகிற ஆகாரமானது ரத்தமாக மாறச் சுமார் 4 மணி முதல் 6 மணி நேரமாகும். ஆகையால் நம் சாஸ்திரங்களில் மத்தியானம் ஒருவேளை ஆகாரமும், முன் இரவில் ஒருவேளை ஆகாரமுமே கூறப்பட்டுள்ளன; அதிலும் ஒரு வேளை ஆகாரத்தை யுண்பவன் யோகி என்றும் இரண்டு வேளை யுண்பவன் ரோகி யென்றும் கூறுவதுண்டு. எவ்வளவு நேரம் ஜீர்ணஞ் செய்கிற யந்திரக் கருவிகளுக்கு வேலை கொடாமலிருக்கிறோமோ அவ்வளவு ஆரோக்கியமும், நீண்ட ஆயுளும் உண்டாகும்.

அடிக்கடி சாப்பிடுவதனால் கருவிகளுக்கு நோயும், உப்பு, புளி முதலான விஷபதார்த்தங்களால் ரத்தக் கெடுதலும் உண்டாகின்றன. ஆதலால் வியாதியும், அல்பாயுஸும் நேருகின்றன. வட நாட்டார் மாதிரி ஸத்துள்ள ஆகாரம் புசித்தால் ஒரு வேளை யுணவே மனிதனுக்குப் போதுமான

தாகும். அதிலும் பழவர்க்கம், கிரைகள், காய்கறி முதலி யவை சாப்பிட்டு வழக்கமானுல் சரீரத்திற்கு மரண பரியந்தம் நோயே வரமாட்டாது.

இதுவே எனக்கு வெகு கால வழக்கமான உணவு; ஆதலால் எந்தத் தேசத்தில், எந்தக் காலத்தில் யாத்திரை செய்தாலும், ஆசாரக் குறைவில்லாமலும், சீதோஷ்ணங்க ளால் உபத்திரவமில்லாமலும் வசிக்க முடிகிறது.

பனிக்கட்டியின் மேல் படுத்திருந்தாலும் சீத உபத்திர வம் உண்டாவதில்லை; இஃது எனக்கு மாத்திரமன்று. இப் படியே வெகு ஸாதுக்கள், ஹிமாலய முதலிய இடங்களில் வாஸஞ் செய்கிருர்கள்.

ஆகார நியமத்தினுல் ஆனந்தமாக அவர்கள் காலத்தைக் கழித்து வருகிருர்கள். சீதோஷ்ணம் ஆடு மாடுகளை வருத் தாததற்கு தழை முதலிய ஆகாரமே காரணம்.

நான் ரோமாபுரி ஹோட்டலில் இறங்கியவுடன் ஹோட் டல் தலைவருக்கு என் ஆகார நியமங்களைக் குறித்தும், பிரா தஃகாலத்தில் சீதஜல ஸ்நானத்தைக் குறித்தும் நோடீஸ் கொடுத்தேன்; தினந்தோறும் புதிய பச்சைக் காய், கறி, பழம், பால், முதலானவைகளைப் புசிப்பதைப் பார்த்த அந்தத் தேசத்தாருக்கு இது புதிதான அனுபவமானதினுல் என்னி டத்தில் ஒரு அபூர்வமான தெய்வ பக்தி உண்டாயிற்று; ஆகையினுல் நான் தங்கியிருந்த இடத்தை ஒரு வாரத்திற்குப் பிறகு விட்டு வரும்பொழுது எஜமானன் முதல் வேலைக்காரர் கள் வரைக்கும் எல்லாரும் அந்தத் தேச வழக்கப்படி மண்டி

போட்டு நமஸ்காரம் செய்து தமது தலையைத் தொட்டு அனுக்கிரகஞ் செய்யச் சொன்னார்கள். எஜமானன் முதலானவர்கள் என் ஞாபகார்த்தமாக ஏதாவது கொடுக்கச் சொன்னார்கள். நான் அவர்கள் எந்த மதத்தினரென்பதைக் கேட்டு உடனே அவர்களுடைய வாழ்க்கையுடன் ஸம்ஸ்கிருதத்தில் ஒரு சுலோகம் செய்து, அததற்குரிய பொருளை இங்கிலீஷில் மொழிபெயர்த்து ஒவ்வொரு ஓலையில் என் பெயருடன் எழுத்தாணியினால் எழுதி மஞ்சளைத் தடவி அனுக்கிரகித்துக் கொடுப்பேன். அதை அவர்கள் தங்கள் தங்கள் பூஜை ஸாமான்களுடன் சேர்த்து வைத்துக் கொள்ளுவார்கள். இவர்களிற் சிலரும் கலாசாலை மாணவர் சிலரும் தங்கள் பக்தியைக் காண்பிக்க ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து வழியனுப்புப் பாட்டை பாடி வாழ்த்துவதுமுண்டு.

கேட்கிறவர்களுக்கு 'இப்பெரியோர் கீழ் நாட்டிற் றோன்றிய ஒரு ஆசாரியர். குளிர்ந்த ஜலத்தில் காலையில் நாலு மணிக்கே ஸ்நானம் செய்கிறவர். பால், பழங்களினால் ஜீவிக்கிறவர்' என்று புகழ்ந்து கூறுவார்கள். இதைக் கேட்கும் ரயில் பிரயாணிகளுட் சிலர், நானிருக்கிற இடத்தை விட்டு, கௌரவத்தைக் காட்ட வேறு வண்டிக்குப் போய் விடுகிற வழக்கமும் உண்டு. இவ்விதம் நான் திரும்பிப் பம்பாய் வருகிற வரையில், கப்பல்களிலும், ரயில்களிலும், ஆகாய விமானத்திலும் நடந்தது. எல்லாம் ஈசன் செயல்.

உபசாரத்தைப் பெற்றுக் கொண்டு ரோமாபுரியை விட்டு மறுதினம் காலை, மேற்கேயிருக்கிற மிலான் (Milan) என்ற ஒரு பிரஸித்த நகரம் வந்தேன். அது சுமார் 200 மைல்

இருக்கலாம். அவ்விடமிருந்து ஸ்விஸர்லாண்டு (Switzerland) என்கிற ஜகத் பிரஸித்தியான தேசத்தில் லூஸேன் (Lausanne) என்கிற நகரம் வந்தேன். வரும் பொழுது 12 மைல் நீளம் மலை குடைந்திருப்பதைத் (tunnel) தாண்டினேன். அது உலகில் மிகப் பெரியது ; மனிதனால் செய்யப் பட்ட ஆச்சரியப் படத்தக்க வேலையாகும். 150 மைல் சுமார் இருக்கலாம்.

ஸ்விஸர்லாண்டு தேசமானது யூரோப் மாகாணத்தில் மத்திய பூமி யென்று சொல்லலாம். அத்தேசம் பூராவாகவும் பனிக்கட்டியுடன் கூடிய மலைகளினாலும், பெரிய ஏரிகளினாலும் சூழப்பட்டுள்ளது. வெயிற் காலத்தில் பனிக்கட்டிகள் உருகி ஏரிகளில் சேரும். பனிக்காலத்தில் ஒரே பனியாக நாடுமுழுது மிருக்கும். இந்தப் பனிக் காலத்தில் எல்லா நாட்டு மக்களும் இங்கு விளையாட வருவார்கள். அமெரிக்கா தேசத்தாரே பெரும்பாலோர் ஆண்டுதோறும் வருகிறார்கள். நீங்கள் மத்திய ஹிமாலயாவைப் பார்த்திருந்தால் அது போன்றதெனச் சில இடங்களைச் சொல்லலாம். ஆனால் ஹிமாலய பர்வதத்தில் எட்டாயிரம் அடிக்கு மேல் பனி உறைகிறது. ஐரோப்பாவில் நாலாயிர அடிகளுக்கு மேலேயே பனி கட்டியாக மாறுகிறது. சுமார் 7,000 அடிக்கு மேல் காற்று லேசாக மாறிவிடும். நமக்கு அவ்விடத்தில் மூச்சுவிடச் சிறிது சிரமம் உண்டாகும். ஆகையால் ஓடி விளையாட முடியாது. ஸ்விஸர்லாண்டு பிரதேசங்களில் மலைகள் எல்லாம் ஆறாயிரம் அடிகளுக்கு மேற்படாதனவாகையால் ஓடி விளையாடினாலும் மூச்சு முட்டாது. தேகத்திற்குச் சிரமமுமிராது. பனிக் கட்டிகள் உருகி அருவியாகப் பல இடங்களில் விழுவ

தால் அந்த அருவியிலிருந்து மின்சார சக்தியை (எலக்டிரிஸிடி) உண்டாக்கி அதைத் தொழில்களுக்குப் பயன் படுத்துகிறார்கள். ரயில் வண்டிகளெல்லாம் இந்தச் சக்தியினாலேயே ஓடுகின்றன. அந்நாட்டில் தொழிலாளிகளினால் உண்டாக்கப் படும் பொருள்கள் மிகுதியாகும். அந்தத் தேசத்தில் குருகுல பாடசாலைகள் பல உண்டு. பார்ப்பதற்கு மிகச் சிறந்த நாடு. தீராத வியாதிகளைப் போக்க சில வைத்தியசாலைகளும் அங்கு உண்டு; தேசத்தின் அழகையும், ஆரோக்கியத்தையும் கண்டு மகிழ அயல் நாட்டுப் பிரபுக்கள் பலர் மரண காலம் வரை வசிக்க அவ்விடம் வருகிறார்கள். இந்தியர்களைத் தவிர பிற தேசத்தார் ஏரியில் படகில் விளையாடுவதையும் பனிக்கட்டியில் மேலே யிருந்து கீழே சாடுகிற ஸ்கீயிங் (Skying) என்கிற விளையாட்டுக்களையும் பார்க்கலாம். இது பூமியில் ஒரு விசித்திர தேசமே.

ஸம்ஸ்கிருத புஸ்தகசாலையும் பண்டிதர்களு மில்லாத ஸ்விஸர்லாண்டிற்கு நான் போன நோக்கம் "ஆச்சர்யமான பூப்பிரதேசங்கள் எல்லாம் என் அம்சம்" என்று ஸ்ரீதஸம் ஹிதையிலும், "எந்த எந்த இடங்களில் அதிகாரமும் பலமும், செல்வமும், முயற்சி முதலானவைகளு மிருக்கின்றனவோ அவைகளை என் அம்சமாகத் தெரிந்து கொள்" என்று பகவத் கீதையிலும் கூறியுள்ளதை நினைத்தே. என்னிடத்தில் பல வருஷம் வேதாந்தம் படித்த சீடரும், ஸமீப காலத்தில் ஸ்வர்க்க யாத்திரை செய்தவர்களுமான கனம் கொச்சி மகாராஜா அவர்கள் பார்யையுமான, ராணி அவர்கள் பர்த்தாவியோகத்தினால் துக்கத்துடன் ஸ்விஸர்லாண்டில் லூஸேன் நகரத்தில் வசித்து வருவதைப்

பார்த்து முடிந்த அளவு அவர்களுக்கு ஆறுதல் சொல்ல விரும்பியும் அவ்விடம் போக நேர்ந்தது.

அங்கிருந்து பாரீஸ் நகரம் 200 மைல் இருக்கலாம். இந்த நகரமானது பரம்பரை அரசர்களால் ஆளப்பட்டு இப்பொழுது குடியரசாக இருக்கிறது. இந்த நகர், வித்யா சாலையில் நீண்ட நாளாக ஸம்ஸ்கிருத பாஷை வளர்ந்து வேத சாஸ்திரங்கள் பல அச்சிடப்பட்டு 100 வருஷ காலமாக வித்வான்கள் பலருக்கு இருப்பிடமாகும். இப்பொழுது அவ்வித்யாசாலை ஸம்ஸ்கிருத பேராசிரியர் கனம் ஸில்வான் லேவி (Sylvain Levi) என்ற பெயர் பெற்ற வயதான கிருகஸ்தர் ஒருவர். நம் பூர்விக ரிஷிகளையொப்ப அவர் விளங்கி வருகிறார். ஷெவித்தியாசாலை மாணவர்களுக்காக நான் உபந்யாஸஞ் செய்ய நேர்ந்தது. அப்போது வேதஸ்வரங்களைப் பற்றிய ஆராய்ச்சி நிகழ்ந்தது. அதை உடனே கிராம்போனில் ரிகார்ட் செய்ய விரும்பினர். அப்படிச் செய்ய உடன் பட்டேன். உடனே அந்நாட்டு வழக்கப்படி அதற்கு தக்ஷிணை கொடுக்க விரும்பினார்கள். உணவுக்குச் சிறிதுவகையிருந்தால் கல்வியை விற்கக்கூடாதென்று நம் ஆபஸ்தம்பர் கூறியபடி நான் நீண்ட காலமாகக் கல்வியை விற்று வாழ்வதை நிறுத்தி விட்டேன். கிராமபோன் ரிகார்டிற்காகக் கிடைத்த ரூபாயை அந்நகரத்தில் ஏதேனும் தருமத்திற்கு உபயோகித்துக் கொள்ளக் கொடுத்து விட்டேன். ஐரோப்பாக் கண்டத்திலிருக்கிற வித்யா சாலைகளில் உபந்யாஸஞ் செய்வதற்கு முன்னமேயே, டிக்கட் வைக்கக் கூடாதென்றும், எனக்கு விருந்து முதலானவை செய்யக் கூடாதென்றும் கேட்டுக்

கொள்ளுவது என் வழக்கம். எல்லாப் பாடசாலைப் புலவர்களும் அப்படியே நடத்திவந்தார்கள். இது நம் தேசத்தினிடம் மேற்குத் திசையாருக்கு மிக்க கௌரவத்தை உண்டாக்கியது. பிறகு செல்வத்திலும் அரசாங்கச் சிறப்பிலும் முதன்மையான லண்டன் நகரம் போய்ச் சேர்ந்தேன். பாரிஸுக்கும் லண்டனுக்கும் 200 மைல் இருக்கலாம். இங்கிலாந்து பாரிஸுக்கு வடமேற்கேயுள்ள ஒருதீவு. ஆகையால் 25 மைல் ஒருசிறு கடலைத் தாண்ட வேண்டும். நான் போனவுடன் அவ்விடத்தில் வாரப்பத்திரிகை யொன்றில் காலையில் நாலு மணிக்கே தண்ணீரில் நான் ஸ்நானம் செய்வதையும், என் ஆகார நியமத்தையும் நாள்தோறும் என் வேலைக்காக வண்டியில்லாமல் நடந்து போவதையும் குறித்து கட்டுரை யொன்றை ஒருவர் எழுதியிருந்தார். அதைப் படித்த பலர் என்னைப் பார்க்க வந்தார்கள். என் தலையில் ஒரு பட்டுத் தலைப்பாகையும் கழுத்தில் ஒருசால்வையும் அணிந்திருப்பதைப் பார்த்து ரஸ்தாவிலும், ஆபீஸுகளிலுமுள்ளவர் கௌரவத்துடன் நடத்தலாயினர். ரயில் வண்டியிற் செல்லும் பொழுது ஒரு வெண்கலக் கூஜாவும் என்னிடம் இருக்கும். லண்டனில் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு இந்நாட்டைப் போலக் கௌரவமே கிடையாது. வியாபாரிகளுக்கும், முயற்சியுள்ளவர்களுக்குமே சிறந்த கௌரவம். உத்யோகஸ்தர்களுக்கு நம் தேசத்தைப் போல ஆயிரக்கணக்கில் சம்பளமும் இல்லை; வித்வான்களுக்கு எல்லாவிடங்களிலும் அதிக சிறப்புண்டு; பிரிட்டிஷ் மியூஸியம் லைபிரேரியில் நம் தேசத்து புஸ்தகசாலைகளில் இல்லாத அபூர்வ கிரந்தங்கள் பல சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. அப்படியே இந்தியா ஆபீஸ்

புஸ்தகசாலையிலும், இந்தியர் ஏட்டுப் பிரதிகளை கவனியாதிருந்த காலத்தில் மேனாட்டார் இந்தியாவிற்கு வந்து கிராமம் கிராமமாகச் சுற்றிச் சுமார் 50 வருஷத்துக்குள் ஐரோப்பாவின் முக்கிய நகரங்களில் லைபிரிகளை ஸ்தாபித்து ஸம்ஸ்கிருத மொழியைத் தம் முயற்சியாலேயே படித்து ருக்வேதம் முதல் காவ்யம் வரையில் அம்மொழி நூல்களைப் பிழையில்லாமல் பதிப்பித்தும் அவரவர் தேச பாஷையில் மொழி பெயர்த்தும் அவ்வந்நாட்டுப் பத்திரிகைகளில் வைதிக விஷய விசாரஞ் செய்துமிருக்கிறார்கள். இந்தியாவின் பூர்விக நாகரிகத்திற்கும், சரித்திரத்திற்கும் உலகத்தில் உயர்ந்த கௌரவம் உண்டாகச் செய்திருப்பதை யாரும் அறிவார்கள். இந்தக் கௌரவம் வேறு எந்த ஜனஸமூகத்திற்கும் இல்லை. ஆனால் இப்பொழுது நம் இந்தியர்கள் சாஸ்திரம் காவ்யம் முதலானவைகளை மிகுதியாகப் படிக்கிறார்களே ஒழிய வேதார்த்தங்களையும் சௌதார்த்தங்களையும் படிப்பதில்லை. அதனால் நாம் மேனாட்டு வித்வான்களுடன் வாதம் செய்ய முடியாது. இதைக்குறித்து நம் தேச வித்வான்கள் மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் நீங்கள் அறிந்திருக்கலாம். தென் இந்தியர்கள் மேனாட்டு வித்வான்களுக்கு உச்சாரண சுத்தமில்லை என்று சொல்லுவது வழக்கம்; நீங்கள் வங்காளம் முதலான தேசங்களில் போய் அவர்களுடன் ஸம்ஸ்கிருதம் பேசினால் அவர்கள் உச்சாரணம் ஆங்கிலேயருச்சரிப்பதைச் சிறப்பாக்கிவிடும். லண்டனில் தேம்ஸ் நதிக்கரையில் சில ஆச்ரமங்களில் யோகம், தியானம் முதலானவைகளைப் பயின்றவர்கள் பிறருக்குப் பயிற்சி செய்விக்கிறார்கள். அவ்விடங்களுக்கு நானும் போயிருந்தேன். நான் மொழி

பெயர்த்து வெளியிட்ட லலிதாஸஹஸ்ரநாம பாஷ்யம் முதலானவைகளைப் படித்திருந்ததினால் அவ்விஷயமான ஆராய்ச்சிகளை என்னுடன் பலர் பல இடங்களில் நடத்தினர். நான் லண்டன் போன நோக்கம் இந்தியா ஆபீஸ் உத்யோகஸ்தரைப் பார்க்கவே. "காடலாகஸ் காடலாகோரம்" என்ற ஜாபிதா ஒரு ஜர்மன் வித்வானால் தொகுக்கப்பட்டிருந்தது. அதுமூலமாகப் பழைய ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து வேலைகள் செய்யப்படுகின்றன. திருஷ்டாந்தமாக "ஸாயணாசார்யர் வேதபாஷ்ய கர்த்தா" என்ற பெயரை எடுத்தால் அதன் கீழ் அவர் எந்தக் காலத்திலிருந்தார், எந்த எந்தப் புஸ்தகங்களை எழுதினர் என்று ஆதாரத்துடன் அவர் சரித்திரம் விரிவாகக் கூறப்பட்டிருக்கும். ஏதாவது ஒரு அரிய பெயரையெடுத்து "பகவான் வாசஸ்பதி: பாஷிய காரர்" என்பதைப் பார்த்தால் உடனே அவர் அதர்வவேதத்திற்குப் பாஷ்யம் செய்த வரலாறு முதலியன அதில் குறிக்கப்பட்டிருக்கும். ஏட்டுப் பிரதிகளை ஆராய்கிறவர்களுக்கு இந்தப் புஸ்தகம் ஒரு சிறந்த கருவியாகும். இந்த "காடலாகஸ் காடலாகோரம்" எழுதினவர் ஜர்மன் தேச மகாவித்வான். இவர் பெயர் ஆபிச்ரட்டு என்று வழங்கும். இவர் 1903ம் வருஷம்வரை கிடைத்த ஏட்டுப்பிரதிகளுக்கு முறையான ஜாபிதா எழுதினவர். 1904ம் வருஷம் முதல் இதுவரை (30 வருஷகாலமாக) இந்தியாவில் பல இடங்களில் பழைய ஏட்டுப் பிரதிகள் பல கிராமங்களில் கிடைத்து உள்ளன. அவை அங்கங்கேயுள்ள புஸ்தகசாலைகளில் சேமித்துவைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஆபிரச்ட் காடலாகில் வாராத பல நூல்கள் அடங்கியிருக்கின்றன. இவற்றைச் சோதித்து

வெளியிட வேண்டுவது அவசியம். இதைச் செய்ய நம் இந்தியா கவர்ன்மெண்டாரால் இயலவில்லை; ஏனென்றால் இந்த ஸம்ஸ்கிருத ஏட்டுப் பிரதிகள் அமெரிக்கா, ஐரோப்பா, இந்தியா என்னும் மூன்று தேசங்களிலுள்ள பொதுப் புஸ்தக சாலைகளிலும் ஒவ்வொருவருக்கே யுரிய புஸ்தகசாலைகளிலும் அடங்கியுள்ளன; அப்புஸ்தகசாலைக்குரியார் உதவி வேண்டும். அவர்கள் உதவியைப்பெற லண்டனிலிருக்கிற இந்தியா மந்திரியாலேயே முடியும். அம்மந்திரியை ஸந்தித்து "காடலாகஸ் காடலாகோர"த்தைப் பூர்த்திசெய்யவேண்டிய அவசியத்தைத் தெரிவித்துக்கொள்வதுதான் என் யாத்திரையின் முக்கிய கருத்து. இரண்டு தினங்கள் இந்தியா மந்திரியுடன் ஸம்பாஷித்தேன். அவர் இந்திய அரசாங்கத்தாருக்கு எழுதி என்னையும் டில்லியில்போய் கல்வி இலாகா அதிபதியையும், ஸெக்ரிடெரியையும் நேரிற்பார்க்கும்படி ஷெ ஆபீஸர் சொன்னார். அதன் பலனே இப்பொழுது சென்னை ஸர்வ" கலாசாலையார் அக்காரியத்தை மேற்கொண்டிருப்பதாக அறிகிறேன்.

பிறகு எனக்குப் பழக்கமுள்ளவரும் ஐதாராபாத்தில் ரெஸிடெண்டு உத்யோகம் பார்த்து உதவிச்சம்பளம் பெற்று இங்கிலாந்தின் தென்மேற்குப் பாகத்தில் கிரைஸ்ட் சர்ச் என்னும் ஊரில் வஸிப்பவருமான கனம் ப்ரேஸர் துரையவர்கள் என்னை அவர்கள் கிராமத்துக்கு வரும்படி அழைத்திருந்தார். அதற்கு இணங்கி உதவிச்சம்பளம் பெற்று, சீமையில் வாழும் மக்களின் காலப்போக்கைத் தெரிந்துகொள்ள விரும்பினேன்; ஒருதினம் 102 மைலிலுள்ள அவர்கள் கிராமத்துக்குப் போனேன். நம்தேசத்தில் உபகாரச்சம்பளம்

பெற்றவர்களில் பலர் தம் கிராமஞ்சென்று காலத்தைப் பய னுள்ளதாகச் செய்யாமல் வீண் வம்பளப்பிலும், சீட்டுமுத லான வேடிக்கைகளிலும், கழிப்பதை நாம் பார்க்கிறோம். இதற்கு மாறாக அவ்விடம் உதவிச் சம்பளம்பெற்றவர் நடக் கிறார்கள். அந்தத்தேசத்தில் ஒரு சிறு கிராமம் இருந்தால் அவ்வூரார் கிராமச்சாலை, மாதாகோவில், வைத்தியசாலை பள்ளிக்கூடம், பஞ்சாயத்துச் சபை இவ்வளவையும் ஒழுங் காக நடத்தவேண்டும். அவற்றின் செலவுக்குத் தகுந்தபடி வீட்டுவரி நிலவரிகளைப் போடவேண்டும். இவ்வளவையும் நடத் துவோர் கிராம முக்கிய மெம்பரே ஆவார். ஸர் பிரேஸர் (என் நண்பர்) தினந்தோறும் கிராம முக்கிய ஊழியங்களை மேல் பார்க் கிறதினால் அவர்களுக்குச் சில சொந்தக் காரியங்களைக் கூடப் பார்க்க அவகாசமே கிடைக்கிறதில்லை, நாடோறும் வேலைக ளிருப்பதால் தேகாரோக்கியத்துடனிருக்கிறார். இவ்விதம் ஒவ் வொரு கிராமமும் போட்டிபோட்டு வேலை செய்கின்றன. அதனால் கிராமங்களெல்லாம் சுத்தமாகக் காணப்படுகின்றன. இங்கிலாந்தில் புகழ்பெற்ற சிறந்த வித்தியாசாலையுள்ள ஆக்ஸ் போர்ட் என்கிற நகரத்தைப் பார்க்கப் போயிருந்தேன். அவ் விடமுள்ள ஸம்ஸ்கிருத புஸ்தகசாலை அதிகப் பிரஸித்திபெற் றது. ஸமீபத்தில் கூட நேப்பால் மகாராஜா அவர்கள் சுமார் 6,000 எட்டுப் பிரதிகளை அப்புஸ்தகசாலைக்குக் கொடுத்திருக் கிறார். இங்குள்ள உயர்தர கல்லூரியில் தான் மியாக்ஸ் முலர் என்ற (இப்பொழுது ஸ்வர்கலோகத்தில் வாஸம் செய்கிற) புகழ்பெற்ற ஸம்ஸ்கிருத வித்வான் சுமார் 80 வருஷங்களு க்கு முன் ருக்வேத பாஷ்யம் முதலானவைகளை ஆராய்ந்து வெளியிட்டார். இப்பொழுது அவருடைய சீடர்கள் பலர்

அநேக கலாசாலைகளில் உபாத்யாயர்களாக வாழ்ந்து வருகிறார்கள். ஐரோப்பிய நாகரிகத்தைச் சிறிது அறிவது வாசகர்களுக்கு மகிழ்ச்சியைத்தரும். எவ்விடம் போனாலும் ரஸ்தாக்களும், வீதிகளும், அதிக துய்மையாக இருக்கும். ரயில்வண்டியில் பரிசுத்தத்தைத் தவிர அங்குச் சிறிது அழுக்குக்கூடக் காணமுடியாது. இரைச்சல், கூப்பாடு முதலானவைகளும் இல்லை. கண்ட விடங்களில் எச்சில் துப்புதல் முதலான அசங்கியங்களை செய்தால் உடனே தண்டனை கிடைக்கும். காகிதங்களைக் கிழித்து வெளியிற்போடக்கூடாது. ஆகையால் குளிர்ந்த அத்தேசத்தில் தொத்து வியாதி அதிகமாகப் பரவுவதில்லை. இம்முறையை இந்தியர் கைக்கொண்டால் நம்மிற் பலரை வருத்தும் தொத்து வியாதிகளை நீக்கிக்கொள்ளலாம். லண்டனில் மாடம் டோஸோ என்கிற ஒரு புண்ணியவதி முன் இருந்தவர்களுடையவும் இப்பொழுது பிரசித்தி பெற்றிருக்கிறவர்களுடையவும் சரீர அளவுப்படி மெழுக்கினால் உயிரோடிருப்பவரை யொப்ப உருவங்கள் அமைத்து ஒரு காட்சிக் கட்டடத்தை லக்ஷக்கணக்கான பணம் செலவில் அமைத்திருக்கிறார்கள். அதை ரஸிகர்கள் பார்க்க வேண்டுவது அவசியம்; அதில் கவிஞர் வகுப்பில் ஷேக்ஸ்பியர் முதல் பிரசித்த கவிகள் பலர் உருவங்கள் அவரவர்கள் அந்தஸ்துக்குத்தகுந்தபடி அமைக்கப்பட்டிருக்கின்றன. ஜனசமூக நன்மைக்குப் பாடுபடுகிற வகுப்பில் முதலில் மகாத்மா காந்தியின் உருவம் உட்கார்ந்திருக்கும். பிறகு முசுலோனி உருவம் நின்று கொண்டிருக்கும். அப்புறம் ஹிட்லர் உருவம்; அப்படியே பிறவகுப்பிலும் பலவற்றைப் பார்க்கலாம்.

குருக்களின் வகுப்பின் முதலில் கனம் ரோம் போப்பின் மெழுகு சிலை. நான் ரோமில் தரிசித்த போப்புக்கும் இந்த உருவத்திற்கும் வேறுபாட்டைக் காணமுடியவில்லை. அப்படியிருக்க மகாத்மா காந்தியின் உருவமானது, சில வருஷங்களுக்கு முன் அமைக்கப்பட்டபடியினால் இப்பொழுதுள்ள நிலைக்கு முற்றும் மாறாக இருத்தலால் அதை மாற்றவேண்டுமென்று அந்த அம்மாளிடம் தெரிவித்தேன். அந்த விதுஷியும் இவ் விஷயத்தைக் குறித்துச் சில சித்திர விற்பன்னர் முன்னமே தெரிவித்தன ரென்றும் உடனே அதை மாற்றுவது சிரமமென்றும் அதிகப் பணச் செலவு நேருமென்றும் காலக் கிரமத்தில் மாற்றிவிடுவதாகவும் தெரிவித்தாள். இக் காட்சியைப்பார்க்க நாடோறும் பள்ளிக்கூட மாணுக்கர்களும் தொழிலாளிகளும் வருகிறார்கள். இந்த அதிசயத்தைப் பார்க்கவேண்டியது அவசியமாகும்.

லண்டனைவிட்டு ரயிலிற் சுமார், 200 மைல் வடக்கேயுள்ள நியூகாஸில் நகருக்குச்சென்று அவ்விடத்திலிருந்துசுமார் 700 மைல் வடகடலைக் கப்பல் மூலமாகக் கடந்து நேரே கிழக்குதிக்கிலிருக்கிற நார்வே யின் பிரதான நகரமான ஒஸ்லோ போய்ச்சேர்ந்தேன். அவ்விடத்து வித்தியாலய ஸம்ஸ்கிருத பண்டிதர் பிரஸித்தி பெற்றவர். அவர் பெயர் ஸ்டேன் கோனோ என வழங்கும். இந்தப் பண்டிதர் மூலமாக மகாமேரு யாத்திரா ஸௌகரியங்கள் கிடைத்தன.

இவ்விடத்திலிருந்து நாள்தோறும் கம்பியில்லாத் தந்தி மூலம் மகாமேரு வில் பனிக்கட்டி மிகுதிக் குறைவுகளும்,

சூரியன் பிரகாசிப்பதும் இல்லாததும் அறியலாம். அங்கிருந்து புறப்பட ஒருவாரமாயிற்று; நாள்தோறும் ஸ்டேன் கோனோவுடன் வேதாந்த விசாரணை செய்வது வழக்கம். இந்த வித்வானுடைய ஆசாரத்தையும் ஞானத்தையும் நோக்கினால் நம் ரிஷிகளுள் இவரை ஒருவராகக் கொள்ளலாம். இங்குள்ள கடல்நீர் தக்ஷிணாயனத்தில் பனிக்கட்டியாக மாறிவிடும். அதன்மேல் மக்கள் நடந்து செல்லுவதுமுண்டு. நான் யாத்திரை செய்தது உத்தராயண மாகையால் பனிக்கட்டிகள் கரைந்து நீராகப் பெருகி ஓடியது; சில இடங்களில் பனிக்கட்டியின் மேல் நடப்பதுமுண்டு; என்னை மேருப்பிரதேசத்துக்கு வழியனுப்ப ஷெ பண்டிதர் தம் சிஷ்யர்களுடன், ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்; சம்பாஷணை முழுதும் ஸம்ஸ்கிருதத்திலேயே நடந்தது; இரவு 8-30க்கு ரயில்வண்டி புறப்பட்டது. நம் தேசத்தில் மாலை 3 மணிக்குத் தோன்றுவதுபோல ஆதித்தியன் மேற்கு திக்கில் காணப்பட்டான். எங்கள் சம்பாஷணை முடிகிற வரை ரயில்வே கார்ட் தூரத்திலிருந்து பெருந்தன்மையுடன் கவனித்துக் கொண்டிருந்தார். பிறகு அவர் நம் பண்டிதர் சமீபம் வந்து ரயில் வண்டியை விடலாமாவென்றுகேட்டார். உடனே பண்டிதர் கடியாரத்தைப் பார்த்து "ஓ! 10 நிமிஷம் அதிகமாகிவிட்டதே." என்றார். அதற்குக் கார்ட் துரை "அதனால் குற்றம் ஒன்றுமில்லை. கீழ்நாட்டு வித்வானை ரயில் வண்டியில் உட்காருவித்து அவர்களுடைய அனுமதியைப் பெற்று வாருங்கள். பிறகு நான் வண்டியை ஓட விடுகிறேன்" என்றார். இதை இவ்விடத்தில் தெரிவிக்கும் காரணம் மேல்த் தேசத்தில் ஸம்ஸ்கிருத வித்வான்களுக்குப் பொதுஜன

ஆதரவு எவ்வளவு என்பதை விளக்குவதற்காகவே. பிறகு மாணவர் வழியனுப்புப் பாட்டை நார்வே பாஷையிற் பாடி எனக்குத் தம் குருவுடன் வணக்கம் கூறினர். கார்டு துரைக்கு ரயிலைவிட அனுமதி கொடுத்தார்கள். நண்பர்களே! இவ் விஷயம் இந்தியாவில் நடக்கக்கூடுமாவென்று யோசியுங் கள். பிறகு கார்டு துரை என் வண்டிக்குள் வந்து உபசாரம் சொல்லி, சூடு குழாயைத் திறந்தார். எனக்கு வெப்பமே கூடாது. பல வருஷங்கள் மத்திய ஹிமாலயாவிலும் வட தேசத்துக் குளிரிலும் வைகறையில் தண்ணீரில் ஸ்நானம் செய்து வழக்கமாகையால் சூட்டறைக்குள் பேராலும் ஆரோக்கியக்குறைவு வந்துவிடும். ஆதலால் அவர்களைப் பிரார்த்தித்து, சூட்டுக்குழாயை மூடிவிட்டு ஜன்னல்களை யும் திறக்கச்சொன்னேன். காலையில் ஸ்நானத்திற்காக் ஸ்நான அறையில் தண்ணீர் நிரப்பிவைக்கச் சொன்னேன். அவருக்கு இவை வியப்பைத் தந்தன. இரவு முழுதும் பனிக்கட்டியின் மேல் ரயில்வண்டியோடிற்று; பார்க்கப் பார்க்க ஆச்சர்யம். அப்படிச் சுமார் 300 மைல் போகவேண் டும். காலை 8 மணிக்கு ட்ரோண்ரியம் என்கிற கடற்கரை நக ரம் வந்து சேர்ந்தேன். இவ்விடத்திலிருந்துதான் மகாமேரு ப்பிரதேசத்திற்குப் புறப்படவேண்டும். மகாமேருப் பிரதே சத்திற்கு ஆர்க்டிக் ப்ரதேசம் என்று பெயர் வழங்குகிறது. இவ்விடத்திலிருந்து மகாமேரு சுமார் ஆயிரம் மைல் தூரத்தில் இருக்கிறது.

இனி, கீழ் எழுதும் விஷயத்தைச் சிறிது நன்றாகக் கவனி யுங்கள். இந்தப் பூமி தோன்றி த்ரவ பதார்த்தமாக இருந்து கெட்டியாகும்பொழுது வடக்கு மேருவிலிருந்து

சூடுவந்து வியாபித்ததாகப் பௌதிக சாஸ்திரிகள் கூறுவர். இவ்விடம் கந்தக பூமியாகவேயிருக்கிறது. கந்தகமிருந்தால் தான் தீப்பற்றியெரியும். தீ மலையைக் குறித்து முன் நேபிள்ஸ் நகரை வர்ணிக்கும்பொழுது சொல்லியிருக்கிறேன். இவ்விடங்களில் அநேக எரிமலைகள் எரிந்து அணைந்திருக்கின்றன. சில இடங்களில் இன்னும் எரிந்துகொண்டுமிருக்கின்றன. மேருநுனிச் சூட்டினால் நேரே தெற்கில் சுமார் ஆயிரம் மைலுக்கும் கிழக்குமேற்கில் சுமார் நூறு மைல் அகலத்துக்கும் இடையிலிருக்கிற கடல்நீர் வருஷமுழுவதும் பனிக்கட்டியாவதில்லை. சீதோஷ்ணமும் சுமார் 15 டிகிரிக்கு மேலும் போவதில்லை, கீழாவதுமில்லை. இந்தப் பாகத்தை விட்டு மேலைக் கடல் நீர் பனிகாலத்தில் சுமார் ஆயிரம் மைல் பனிக்கட்டியாக மாறும். அப்படியே கீழ்பாகத்திலும் சீதோஷ்ண டிகிரியும் அநேகமாக மத்யஸ்தானமாகிய 32வது டிகிரியிலிருந்து ஒன்றுவது டிகிரிக்கும் கீழே போய்விடும். அப்படியே உத்தராயணத்தில் 70 முதல் 80 டிகிரி வரையேறும். நம் தேசமானது ஆகாசத்தில் மத்திய ரேகைக்கு வடக்கேயிருப்பதினால் 32வது சம டிகிரியிலிருந்து கோடை காலத்தில் சுமார் 125 டிகிரி வரை உஷ்ணம் ஏறும். சீதகாலத்தில் 60 முதல் 90 டிகிரி வரையில் இறங்கும். வடக்கே போகப்போக காசி, லாகூர், ஹிமாலயம் முதலான இடங்களில் பனி காலத்தில் 32க்குக் கீழே 25 டிகிரிவரை இறங்கும். அதற்கும் வடக்கே போகப்போக டிகிரி குறையுமென்று அறிக. மகாமேருநுனியிலிருந்து தென்பாகம் வருகிற சூட்டினால் அவ்விடம் கடல் நீர் பனிக்கட்டியாக உறையாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. அதனால் அந்த ஜலத்திற்கு

"கல்ப் ஸ்ட்ரீம்" என்று பெயர். இதன் வழியாகப் பன்னிரண்டு மாதங்களிலும் சிறு கப்பல்கள் ஆர்க்டிக் பிரதேசங்களுக்குச் செல்லுகின்றன. குளிர் காலத்தில் மேலைக் கடலிலிருக்கிற காட் என்னும் ஒரு ஜாதி மீன்களும் வேல் என்ற ஒரு ஜாதி மத்ஸியங்களும் தாம்முட்டையிட்டு குஞ்சு பொரிக்கக் கொஞ்சம் சூடு வேண்டுமாகையால் சுமார் ஆயிரம் மைலுக்கு மேலுள்ள தூரத்திலிருந்து இவ்விடம் வருகின்றன. அவைகளைப்பிடித்து காட் லிவர் ஆயிலும், வேல் ஆயிலும் உண்டாக்குகின்றனர்; அதற்காக வியாபாரிகள் டிஸம்பர் மாதம் முதல் மார்ச்சு மாதம் வரை இவ்விடம் வருகிறார்கள். அவர்கள் வஸதிக்காக அரசாங்கத்தார் மூலமாக அங்கங்கே தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் கோகர்ண முதல் பம்பாய் வரை கடலில் மிகச் சிறு மலைகளைப் பார்க்கலாம். அதைப்போல் ஆர்க்டிக்ப்பிரதேசம் தோன்றுகிறது. இவ்விடத்து மலைகளெல்லாம் எப்பொழுதும் பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கும். இந்தியாவில் அப்படியில்லை. ட்ரோண்ரியத்திலிருந்து யாத்திரை செய்த கப்பல் தபால் கொண்டு போவது; ஆகையால் ஒவ்வோரிடத்திலும் தபாலைக் கொடுத்து வாங்கச் சுமார் ½ மணி நேரம் வரை நிற்கும். அப்பொழுது நான் கீழே யிறங்கி அந்தந்தக் கிராமங்களைச் சுற்றிக் கொண்டு வருவேன். தலையில் தலைப்பாகையும் கழுத்தில் சால்வையும் அணிந்து கொண்டுள்ள மஞ்சள் நிற மனிதனை அத்தேசத்தார் பார்த்திராததினால் என்னைப் பார்த்து வியப்புற்றனர். சிலர் கப்பல் அதிகாரியினிடத்தில் போய் என் வரலாற்றை வினவியது முண்டு. கப்பல் ஏறின முதல் நாளில் அதிகாரியை

ஸந்தித்து மறுநாள் காலையில் தண்ணீரில் ஸ்நானத்திற்கு ஏற்பாடு செய்யச் சொல்லப் போனேன். தண்ணீரில் வைகறையில் ஸ்நானம் செய்தலென்பதை அவர் கேட்டிராத வர்; ஆதலால் அஞ்சி ஏதாவது தீமை உடலுக்கு வந்தால் தாம் அதற்குப் பொறுப்பேற்க நேருமாகையால் நான் எவ்வளவு தூரம் பிரார்த்தித்தும் தண்ணீரறைச் சாவியைக் கொடுக்க முடியாது என்று மறுத்து விட்டார். அவரது மனைவியிடத் தில் சென்று சிறிது நேரம் வேதாந்தம் பேசிக்கொண்டிருந்த பிறகே இந்தியாவில் குளிர் காலத்திற்கூடப் பலர் கங்கை முதலான நதிகளில் வைகறையில் நாலு மணிக்கு ஸ்நானம் செய்யும் வழக்கத்தையும் இந்துக்களின் ஆசாரத்தை யும் சொல்லி உறுதிப்படுத்தினேன்; அவ்வம்மை தயையால் தண்ணீரறைச் சாவியை வாங்கி மறுநாள் வைகறையில் ஸ்நானம் செய்தேன். பிறகு ஜபம் பூஜை முதலிய எல்லாம் முடிந்து வெளியில் வந்தவுடன் எனக்கு ஸ்நானத்தினால் கெடுதல் உண்டா வென்று பார்க்கப் பலர் வந்தார்கள். பால், பழம் பச்சைக் காய்கறியாகிய உணவைப் பார்த்து நான் ஒரு ஸித்த புருஷன் என்றும் கீழ் நாட்டில் அவதரித்திருப்பதாகவும் சொல்லலாயினர்* என்னைப்போல் இந்தியாவில் கோடிக் கணக்கானவருண்டென்று சொல்லியும் அவர்கள் நம்பவில்லை. இதை வழக்கத்தினால் சம்பாதிக்கலாம். இஃது ஒன்றினாலேயே

---

* கிருஸ்து அவதாரமானவுடன் கீழ் நாட்டிலிருந்து சில பெரியோர்கள், பிறந்த குழந்தையைத் தர்சிக்க ஒரு நக்ஷத்திர வுதவியால் ! வசிக்கிற ஒரு மாட்டுக் கொட்டிலுக்கு நேரே நின்று கண்டதாக பைபில் கதையைப் படித்த பக்தர்கள் கீழ் நாட்டு வேதியர்களுக்குக் கௌரவம் கொடுக்கிறது வழக்கம்.

மோக்ஷம் கிடைத்து விடாதென்று நான் அடிக்கடி அவர் களுக்குத் தெரிவிப்பேன். என்ன சொன்னாலும் அவர்கள் அவைகளை அங்கீகரிக்கவில்லை. பிறகு மெள்ள மெள்ள 66வது கோடு (லாடிடியூட்) தாண்டினேன். கணித சாஸ்திர வித்வா னாகிய பாஸ்கராசாரியர் சுமார் ஆயிரவருஷங்களுக்கு முன் எழுதிய சித்தாந்த சிரோமணி என்னும் நூலில் 66வது கோடு தாண்டி வடக்கே போகப்போகப் பகல் நேரம் மிகுதி யாகவும், மேருவில் ஆறு மாதம் ஒரே பகலாகவும் இருக்கும் என்று கூறியது ஞாபகத்திற்கு வந்தது; பகல் அதிகரிக்க லாயிற்று. ட்ரோம்ஸோ என்கிற இடத்தில் 68வது கோட்டில் மேமீ 14உ இரவு 11-45 மணிக்கு மேற்கு நோக்கி நின்று ஸூர்யன் வரவை எதிர் பார்த்தேன். ஈசுவர கிருபையினால் அன்று வானில் மேகம் பரவுவதும் பனி விழுவதும் இன்றி இருந்தது. மேலைக்கடலிலிருந்து ஒரு ஒளிப்பிழம்பு தோன்றி உடனே வடக்கே ஓடிவிட்டது. இதைத்தான் 'பாதி ராத்திரி உதயஸூர்ய' னென்றும் மேற்கிலுதித்து, கிழக்கில் அஸ்தமனமாகிறதென்றும் வேதம் கூறுவது. இந்த ட்ரோம்ஸோவில் பாதிராத்திரியில் உதித்த ஸூரியன் உடனே அஸ்தமனமாகாமல் ஸரியாக நூற்றொரு நாட்கள் வானில் குயவன் சக்கரத்தையொப்பத் தணிந்து சுற்றிக் கொண்டு ஆகஸ்ட்டுமீ கடைசியில் கிழக்கே அஸ்தமன மடைகிறான். அப்படியே தக்ஷிணாயனத்தில் 101 நாட்கள் சூரியன் ஒளியின்றி ஒரே இரவாக இருக்கும். இந்த இடத் தில்தான் முன்னையோர் சதராத்திரக்கிரது நடத்தியதாகச் ச்ரௌத சூத்திரங்கள் கூறுகின்றன. 101 நாட்கள் ஒரே இரவாயிருக்கிற வேறோரிடம் இதற்கு நேரே கீழ்ப் பூமியிலா

கும். அந்தப் பூமி அமெரிக்காவின் வடபாகத்தில் ஆர்க்டிக் பிரதேசத்தில் அலாஸ்கா என்கிற இடமாகும். ஆரியர் அந்தப் பிரதேசத்தில் பண்டைய நாளில் வசித்து வந்ததாகச் சரித்திரங்களினுல் விளங்கவில்லை; ஆகையால் இந்தப் பிரதேசங்களிலேயே ஓரிரவு முதல் நூறு இரவு வரையில் நம் பெரியோர் யாகம் நடத்தியிருக்க வேண்டும்; இதை மனத்திற் கொண்டு ருக்வேதத்தைப்படித்தால் அதில் வர்ணித்திருக்கிற சூரிய வர்ணங்கள், ஆறுமாத சூரியனும், ஆறுமாதச் சூரியனில்லாத காலமும், பலவித உதய காலமும் மூன்று முதல் ஐந்து வரையிலுள்ள ருதுக்களும் கணித சாஸ்திர முறைப்படி நன்கு விளங்கும். ஆர்க்டிக் ப்ரதேசத்தில் ஸூரியன் எப்பொழுதும் குறைவின்றி இருப்பதால், பூமியில் உள்ள நிலங்களில் தானியங்கள் மும்முறை விதைத்து அறுவடை செய்யப்படுகிறது. ஆகையால் உணவுப் பண்டங்களுக்குக் குறைவேயில்லை. தக்ஷிணாயனத்தில் ஒரே பனிமழை; அப்பொழுது பயிர்த்தொழில்கள் நடப்பதில்லை. கைத்தொழில் வேலைகள் நடக்கும். ஒரே ராத்திரி காலங்களில் ஸூர்ய ஒளியே இல்லாததால், சந்திரனுடைய நிலவாலும் விடியற் கால (அருணோதய) ப்ராகாசத்தினுலும், மகாமேருவிலிருந்து ஒரே ஒளிப்பிழம்பு தெற்கே பார்த்து வீசும் பிரகாசத்தினுலும் ஆரோரு போரியாலிஸ் இருட்டே தெரிவதில்லை. நம் தேசத்தில் ஸூர்யனை மறைத்து இருளுடன் மழை பெய்யும் காலத்துப் பகல்போல இருக்கும். ஆனுல் ஒளி அடிக்கடி மாறும், இவ்விடத்தில் ஒரு ஆப்ஸர்வேடரி (நக்ஷத்திர யந்திரசாலை) வைக்கப்பட்டிருக்கிறது. கணித சாஸ்திரம் வான சாஸ்திரங்கள் படிக்கும் ஐரோப்பியர்,

அமெரிக்க மாணவர், பள்ளிகூடப் படிப்பு முடிந்தவுடன் ஒரு வருஷம் இவ்விடம் வந்து பயிற்சிபெற்றுப் போவதை வழக்க மாகக் கொண்டிருக்கின்றனர். அவர்களில் ஜர்மன் தேசமாண வருடன், ஸூர்யன் நாடோறும் மாறும் வர்ணங்களைக் குறித்துப் படவுதவியுடன் நான் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது இதற்கு அடுத்தது உருக்கின தங்க வர்ணம் நாளைக்குப் படத்தில் வருமென்று நான் சொன்னவுடன் அவருக்கு ஆச்சரிய முண்டாயிற்று; 'எப்படி ஐயா, தங்க ளுக்கு இவ்வளவு நிச்சயமாய் தெரியும்' என்று என்னைக் கேட்டார்; உடனே நான் உத்தராயண முதலில் தாமிர வர்ணமும், பிறகு அருணம், அப்புறம் பப்புரு நிறம்,கடைசியில் ஸுமங்ல (உருக்கின தங்கவர்ண) மென்று ஸ்ரீருத்திரத்தில் கூறியிருப்பதைச் சொன்னேன்; உடனே அம்மாணவர் வியப் புற்றார். ருக்வேதத்தில் ஸூர்யனுக்குத் தங்க வர்ணத் திற்கு மேலான வெண்மை நிறத்தை வர்ணிக்கவில்லை என்பது ஆர்க்டிக் ப்ரதேச சூரியனைக் குறிப்பதாகும். இதற்கு நேரே வடக்கில் மேருநுனி இருக்கிறது. இந்த இடத்திலிருந்து தான் பௌதிக நூல் வல்லார் மேருநுனியைக்காணப் போய்க் காலமடைந்தார்கள். அவர்களது யந்திரம் முதலிய வைகளை ஞாபகார்த்தமாக இவ்வூர்க் கோவிலில் வைத்திருக் கிறார்கள். இதுமுதல் வடக்கே சென்றால் அவிச்சின்ன சூரி யனைப்பார்க்கலாம். ஆகையால் உதயாஸ்தமனம் இல்லாத ஸூர்யனைச் சில விரதக்காரர் உபாஸிக்கவேண்டுமென்று வேதத்திற் கூறியதை அநுஷ்டிக்க விரும்பினால் அவர்கள் இந்த ஸ்தானத்தை அடையவேண்டும். என் வாழ்நாள் முழு தும் கண்ணுக்குக் கண்ணாடி யில்லாமலும் கண்ணாடி போட்

டிருப்பவர்களை யோகப்பயிற்சியின் பலனை எடுக்கும் படியும் செய்திருப்பதுண்டு. நாம் அதை உபயோகியாத தினால் ஸம்ஸ்கிருதத்தில் கண்ணிலணியும் கண்ணாடிக்குப் பெயர் இல்லை; நாள்தோறும் சுமார் 10 மணிவரை பகலில் ஏட்டுச் சுவடியில் உள்ள சிறிய எழுத்துக்களைப் படித்து காலங்கழித்து வருவேன். ஒருநாள் பகலில் சூடான ஓரிடத்தில் ஏட்டுப் பிரதியை ஆராய்ந்து படித்துக்கொண்டிருக்கும் பொழுது சூரிய ஒளி மூளையில் (ஸன் ஸ்ட்ரோக்) விழக் கண்களுக்குக் கெடுதல் நேர்ந்தது. கர்மவிபாக சாஸ்திரப் படி உதயாஸ்தமனமில்லாத ஸூர்யனைத் தர்சித்து அவனைப் பார்த்துக் கொண்டே சூர்ய அஷ்டாக்ஷரத்தை* சில ஆயிரம் ஜபித்துப் பிறகு ஸ்ரீருத்திரத்தினாலும், "வயஸ் ஸுபர்ணா"† என்கிற மந்திரத்தினாலும் புரச்சரணை செய்து விரத ஸமாப்தி செய்வதாக ஸங்கல்பித்தேன். உடனே யாத்திரையை ஆரம்பித்து ஆர்க்டிக் பிரதேசம் வந்தேன்.

---

* "க்ரிணி: சூர்ய: ஆதித்ய: ஓம்." துர்நீரை உறிஞ்சுகிறவன்; சக்தியைக் கொடுக்கிறவன்; அதிதி புத்திரன்; ஈசுவரன்." என்பது பொருளாம்.

† "வயஸ்ஸுபர்ணா உபஸேதுரிந்த்ரம் ப்ரியமேதா ரிஷயொ நாதமானா: । அபத்வாந்தம் ஊர்ணுகி பூர்த்தி சக்ஷு: முமுக்த்தி அஸ்மான் நிதயேவ பத்தான்." வயதில் முதிர்ந்த ரிஷிகள் லோகோபகாரத்தின் பொருட்டு ஈசுவரனிடத்திற் சென்று யாசித்ததாவது:—அத்தியாசையினால் கட்டப்பட்டிருக்கிற எங்களுடைய கண்ணிலிருக்கிற இருட்டை விலக்கு; சக்தியைக் கொடு; (கெட்ட பார்வையிலிருந்து) விடுதல் செய்—என்பது பொருளாகும்.

நாள்தோறும் கப்பல் எஜமானனைப் பார்த்து "ட்ரோம்ஸோ" போனவுடன் சூரியன் மேகத்தாலும், பனி மழைகளினாலும், மறைபடாமல் எனக்கு தர்சனங்கிடைக்குமாவென்று ஆவலுடன் கேட்பேன்; அப்பொழுதெல்லாம் அவரும் கப்பலில் அமைத்திருக்கிற யந்திரத்தைப் பார்த்துக்கொண்டே கால நிலைமையை முன்னேயறிந்து சொல்லமுடியாதென்று கூறுவார். நானோ இந்தியாவிலிருந்து சுமார் 8,000 மைல் வரை யாத்திரை செய்து பெருஞ்சிலவில தை நிறைவேற்றப் போனவன் "அவிச்சின்ன சூரிய" தர்சனமில்லாமல் திரும்பினால் இதைவிட மனோதுக்கம் எனக்கு வேறு என்ன வேண்டும். எனக்காகக் கப்பலை நிறுத்த முடியுமா? ஒரு நாள் மாலை என் மனத்தில் ஈசுவர கிருபையினால் ஒன்று தோன்றிற்று; அஃதாவது ஸூர்யனை நினைத்து 'ஸூர்யனே! நீ நாளை முதல் மூன்று தினங்கள் மேகம் முதலியவற்றால் மறையாமல் தரிசனம் கொடுத்து என் விரதத்தை முற்றுப் பெறச் செய்யாவிடில் என் சாபத்துக் குட்பட நேரும்; ஈசுவராதிகளெல்லாம் பக்தர் சாபத்தால் தசாவதாரம் எடுக்க நேர்ந்ததை ஞாபகப் படுத்துக்கிறேன்' என்று சொல்லிவிட்டு என்னறைக்குள் போய் சிரம பரிகாரஞ் செய்து கொண்டேன். சில மணி நேரத்துக் கெல்லாம் கப்பல் தலைவன் என்னிடம் ஓடி வந்து "ஸூரியன் இனிப் பிரகாச மாகுவான்; யந்திரமும் அப்படியே தெரிவிக்கிறது. தாங்களும் தங்கள் விரதத்தை நிறைவேற்றலாம்" என்று சொன்னான். நான் அவரை ஒரு தேவ தூதனாக நினைத்து உடனே விரதத்தை மேற்கொண்டேன். கப்பல் போகக் கூடிய "வடக்கு முக்கு" என்று ஒரு இட மிருக்கிறது.

அதையடைந்த பிறகு கொஞ்சம் தென் கிழக்காகக் கர்கிஸ் என்றச் சிற்றூர் போய்ச் சேரவேண்டும். அதுதான் யாத்திரா முடிவு இடம். இவ்விடத்தில் நிலக்கரி கிடைக்கிறது. ஆகையால் ஒரு காலத்தில் இந்த இடம் நம் தேசம் போல அதிக வெப்பமுள்ளதாய் மரம் செடிகள் நிரம்பப்பெற்று பூகம்ப முதலானவற்றால் அழிந்து ஆயிர வருஷக்கணக்காக அப்படியே யிருந்திருக்க வேண்டுமென்று நம்பலாம்.

சில காலங்களில் வருஷம் பூராவும் சூர்ய வொளியின்றி பனி மழையால் உணவுக்கு வேண்டிய பயிர் முதலாயின உத்பத்தியாகாமல் போனதினால் நம் முன்னோர் இதை விட்டு, தெற்கே சென்றார்களென்று சாந்தோக்கிய உபநிஷத்தில் முதல் அத்தியாயத்தில் கூறியிருக்கிறது. வடக்கு நுனியிலிருந்து மேரு நுனிக்கு சுமார் 190 மைல் இருக்கிறதென்று ஆராய்ச்சியாளர் சொல்லுகிறார்கள். அந்த இடம் எப்படியிருக்கிறதென்பதைப் பார்க்க அறிஞர்களால் முடியவில்லை. ஆகாய விமானமாவது, கப்பலாவது அவ்விடம் போகவியலவில்லை. மேருநுனியை நெருங்கின விமானமும் கப்பலும் கிழக்கேயிழுக்கப் பட்டு, சுமார் 500 மைலுக்கு அதிக தூரத்தில் தள்ளப்படுகின்றன.

(வடக்கே காட்டுகிற முள்ளை) நீங்கள் சாதாரணமாகப் பார்த்திருப்பீர்கள், மேரு நுனிக்குப்போனால் அந்த முள் எந்தப்பக்கம் திரும்புமென்று தெரியவேண்டும். இது நான் ரகஸ்யம். இந்த வடக்கு நுனியிலிருந்து கொஞ்ச தூரத்தில் வடமேற்காக ஸ்விஸர்பர்கு தீவு இருக்கிறது. அவ்விடத்திலிருந்து மேருநுனி சுமார் 200 மைலுக்குள்ளேயே இருக்கக்கூடும்; அங்கிருந்து மேரு நுனிக்குப்

போனாலும் முன் நேர்ந்த கதிதான். ஆண்டுதோறும் உத்தராயணத்தில் மேல் நாட்டுப்பேரறிஞர் பலர் முயற்சி செய்து கொண்டே வருகிறார்கள். ஏதாவது ஒரு தடை நேருகிறது. அதனாலேயே தைத்திரிய ஆரணத்தில் ஒரு ருஷி மற்றொருவரைப்பார்த்து "நான் மேருவைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேனே ஒழிய பார்த்ததில்லை" என்றார். அதற்கு மற்றொருவர், "நான் நேரே பார்த்தேன்" என்றார்; அவர் மகான்; நாம் மனிதர்; ஆகையால் மேருவைப் பார்க்க முடியாது. நான்கு தினங்களில் சூரியனைத் தரிசித்து ஜபம் செய்து திரும்பவும் ட்ரோம்ஸோவுக்கு வந்தேன்.

சில வருஷங்களுக்கு முன் இந்தியாவிலிருந்து ஒருவர் சூரியோபாஸனை செய்ய இங்கு வந்து ஏழு தினங்களில் விரதத்தை முடித்ததாக அங்குள்ளவர் சொல்லக்கேட்டேன். அவர் யார் என்ற விவரம் தெரியவில்லை. இவ்விடத்தில் ஒரு ஸூர்ய மந்திரம் கட்ட விருப்பமுண்டு. அவ்வெண்ணம் இறைவன் திருவருளாலேயே முற்றுப்பெற வேண்டும். கோயில் கட்டவும் அதைப் பாதுகாக்கவும் சில லக்ஷ ரூபாய்கள் வேண்டியிருக்கும். அஃது எந்தப் புண்ணியவானால் நிறைவேறுமோ? அப்படி ஓரிடமிருந்தால் சூரியோபாஸகர் சிரமமில்லாமல் அவ்விடத்தில் விரதத்தை நடத்தலாம். யாத்திரையில் தடை நேராதபடி புறப்பட்டது முதல் போய்ச் சேருகிறவரையில் 108 உபநிஷத்துக்களையும் மும்முறை அர்த்தத்துடன் பாராயணம் செய்வதானேன்.

நம் பெரியோர் உத்தரகுரு வென்றும் துருவஸ்தானமென்றும் மகாமேரு வென்றும் கூறியிருக்கிற க்ஷேத்திரத்

த்தைத் தரிசனம் செய்து விட்டு, ட்ரோன்ஜியம் என்கிற இடம் திரும்பினேன். போய்வரச் சுமார் 2,000 மைல் களிருக்கலாம். அவ்விடத்திலிருந்து ரயில் வண்டியில் ஸ்வீடனுக்குத் தலைநகரான ஸ்டாக்ஹோம் (Stockholm) வந்து சேர்ந்தேன். இது நேர் தெற்கே யிருப்பது. சுமார் 100 மைல் வருகிற வரையில் வண்டி பனிக் கட்டியின்மேல் வரநேர்ந்தது. பிறகு ஏறக்குறைய ஸம தளத்தில் 250 மைல் வந்தது. ஸ்டாக்ஹோம் பட்டணம் பால்டிக் கடலின் வட கரையின் கீழ் அமைக்கப்பட்டிருப் பது. இவ்விடத்தில் நோபில் என்னும் வித்யாபிமானி சில காலத்திற்கு முன் வாழ்ந்துவந்தார்; அவர் மகா வித் வான்களுக்குப் பரிசு கொடுக்க பெரும்பொருளையும் ஒரு பெரிய கட்டடத்தையும் கட்டிவைத்துப் போயிருக்கிறார். இந்தப் பரிசு பெற்றவர்களில், டாக்டர் ரவீந்தரநாத் டாகூர் அவர்களும், டாக்டர் ஸி. வி. ராமன் அவர்களும் இந்தியர் ஆவார்கள். இவ்விடத்திற்கு 12 மைல் தூரத்தில் வித்தி யாசாலையுடன் கூடிய உப்சாலா என்ற நகரம் ஒன்று இருக் கிறது. இஃது ஒரு பழைய இடமாகும். இவ்வூர் மண்ணின் கீழே பூர்விக ஆரியர் ஸாமான்கள் புதை யுண்டு கிடக்கின்றன. ஸ்வீடன் தேசத்தில் இப்பொழுது வாழ்ந்துவரும் அரசர் வயது முதிர்ந்தவர். அவர் தம்பி, சுமார் 70 வயது சென்றவர். சிறந்த வேதாந்தி. அயல் தேசத்து வித்வானாவது வேதாந்தியாவது அவ்விடம் வந் தால் அவர்களைத் தன் அரண்மனைக்கு அழைத்து உபசாரம் செய்வது அவர் வழக்கமாகும். ஸாது சுந்தரஸிங் என்ற கிறிஸ்தவ இந்திய யோகி, இங்குள்ள ராஜாவின் ஸகோதரரு

டன் சில காலம் வஸித்தாராம். இவ்விடத்தில் இரவு 10 மணிக்குமேல் இரண்டுமணி வரை (அதாவது சுமார் நாலு மணி நேரம்) ஆகாயத்தில் சூரியன் காணப்படமாட்டான். அந்த நாலுமணி நேரமும் இருளும் இல்லை. இந்த இரவுகளுக்குப் 'பிரகாச இரவு' என்று பெயர். இந்தப் பிரகாச இரவை, தெற்கிலும் தென்கிழக்கிலும் சுமார் ஆயிரம் மைல்வரையிற் பார்த்தேன். ஸ்டாக்ஹோம் நகரத்திலிருக்கிற ஸேவன் ஹீடன் என்ற வித்வான், சுமார் 30 வருஷங்களுக்கு முன் இந்தியாவிற்கு வந்து ஹிமாலயா முழுவதையும் ஸர்வே செய்து ஒரு புஸ்தகம் டிரான்ஸ் ஹிமாலயா என்ற பெயருடன் வெளியிட்டார். இவர் ஹிமாலயாவில் மானஸ ஸரோவரத்தை ஸர்வே செய்து ஆழத்தைப் பார்க்கும் பொழுது நானும் அவருடன் அவ்விடமிருந்தேன். அவர் இப்பொழுது சைனு (China) வின் பக்கத்தில் ஸர்வே செய்து கொண்டிருக்கிறதாக அவர் ஸகோதரி மூலம் அறிந்தேன். இவ்விடத்திலும் பிற நகரங்களைப்போல் பார்லிமெண்டில் அங்கத்தினரான ஒரு பெருமாட்டி என்னை அழைத்து ஷெ ஸபை நடப்பதைப் பார்க்கச் செய்தாள். இந் நகரம், நாலு பக்கத்திலும் கடல் நீரால் சூழப்பட்டிருப்பதனுல் பார்க்கப் பார்க்க வெகு நேத்திரானந்தத்தைக் கொடுக்கிறது. இங்கிருந்து நேரே தெற்கிலிருக்கிற ஜர்மனியின் தலைநகரான பர்லின் சென்றேன். சுமார் 500 மைல் தூரம் தெற்கே போகும்பொழுது பால்டிக் ஸமுத்திரத்தைத் தாண்ட நேர்ந்தது. யாத்திரிகர் எல்லோரும் ரயில் வண்டியில் உட்கார்ந்திருந்தோம். ஸமுத்திரம் வந்த

வுடன் ரயில் வண்டிகள் நேரே கப்பலில் ஏற்றப்பட்டன. கடலின் தென்கரை சுமார் 80 மைல் இருக்கலாம். நாலு மணி நேரத்தில் ஒரு தீவையும் கடந்து மறுகரை போய்ச் சேர்ந்தோம். பிறகு ஜர்மன் ராஜ்யம். இதே ரயில் பர்லினுக்கு நேரே போய்ச் சேர்ந்தது. ஒரு நாடு விட்டு மறுநாடு போகும் பொழுது ரயிலிலேயே சுங்கச்சாவடி சோதனைக்காரர்கள் அவரவர்கள் எல்லையில் யாத்திரைக்காரர்களிடம் வந்து அவரவர் பாஸ் போர்ட்டை வாங்கிப் பரிசோதித்தும், பெட்டிகளைத் திறந்து சாமான்களைச் சோதித்தும் போவது வழக்கம். ஏதாவது வரி விதிக்கும் ஸாமான்களிருந்தால் வரியும் வசூலிப்பார்கள். ஒவ்வொரு நாட்டுக்கும் வெவ்வேறு நாணயமுண்டு. ஐரோப்பாக் கண்டம் நம் இந்தியாவை விடச் சிறியது; ஆதலால் அடிக்கடி ஒரு நாடு விட்டு அடுத்த நாடு வரும் பொழுது சுங்கச் சாவடியாட்களின் சோதனை நடக்கும். ஏதாவது தவறுதல் நேர்ந்தால் உடனே அந்த யாத்திரைக்காரனைக் கீழே யிறக்கி விடுவார்கள். சோதனையும் மிகக் கடுமையாக நடக்கும். இந்தச் சோதனைத் துன்பம் எனக்குக் கொஞ்சங்கூட வில்லை. ஒரு யோக்கியதா பத்திரம் என்னிடத்தில் உண்டு. அதில், நான் "இந்தியாவில் ஒரு வைதிகப் பிராம்மணன்; ஆகார நியமம் உள்ளவன்; புகையிலை முதலானவைகளை நிந்திக்கிறவன்; ஒரு ஆரியன்; வித்வான்; எல்லோராலும் உபசரிக்கத்தக்கவன்" என்று எழுதியிருந்தது; ஒவ்வொரு கஸ்டம்ஸ் ஆபீஸரும் என்னையும் என் தலைப்பாகை, சால்வை முதலானவற்றையும் பார்த்ததும், யோக்கியதா பத்திரத்தைப் பார்த்ததும் எழுந்திருந்து வந்தனம் சொல்லி

வினயத்துடன் போய் விடுவார்கள். என்னிடத்தில் ஒரு சிறு தோல் பெட்டி, ஒரு ஷர்ட், ஒரு வேஷ்டி, ஒரு சிராய், பாராயணம் செய்யும் உபநிஷத் புஸ்தகம், விபூதி குங்குமம், ஒரு ஓலையேடு, எழுத்தாணி, பூஜை ஸாமான்கள் ஆகிய இவைகளே யிருக்கும்; கையில் ஒரு கூஜாவும், குடையும் உண்டு; பெட்டியில் ஒரு காசுகூடக் கிடையாது. பெட்டிக் குப் பூட்டும் சாவியுமில்லை. ஆகையால் திருடர் பயமில்லை. நிபந்தனைக்குட்பட்ட ஸாமான்கள் என்னிடத்தில் எதுவும் இல்லாததினால் சுங்கச்சாவடி அதிகாரிகள் என்னைத் துன்புறுத்த இடமே இல்லை. சிலர் தம்மை வாழ்த்திச் செல்ல என்னை வேண்டுவர். பாஸ் போர்ட்டை மட்டில் தவறுமல் எப்பொழுதும் கையில் வைத்துக் காப்பாற்ற வேண்டும். தவறினால் யாத்திரை தடைப்படும். அப்பொழுது நாம் பிரிட்டிஷ் கான்ஸலிடம் போய் அங்கேயிருந்து நம் செலவில் இந்தியாவிற்குத் தந்தி கொடுத்து, பாஸ்ப்போர்ட் வருவித்துக்கொள்ள நேரும். ரூபாய் செலவு, துக்கம், தாமதம் முதலானவை உண்டாம். இதில் கவனத்துடனிருத்தல் யாத்திரைக்காரர் கடமையாகும். நாம் படுக்கை கொண்டு போகக்கூடாது, கொண்டுபோனால் அதைச் சுகாதார முறைப்படி நாம் உபயோகப் படுத்த இயலாது. அந்தந்த் தேச ஓட்டல்களில் உள்ளதும் சுகாதார முறைப்படி சுத்தம் செய்ததுமான படுக்கையையே பயன்படுத்த வேண்டும். ஆகையால் பம்பாயிலிருந்து கப்பல் ஏறும் பொழுது படுக்கையை அவ்விடத்திலேயே விட்டுப் போதல் நலம். தொத்துவியாதிகள், துணிகள் மூலமாகப் பரவுகின்றன வென்று அதிகாரிகள் தடுப்பார்கள். ரூபாய் இருந்தால் திருடர் பயம் உண்டு. குக்ஸ் ஆபீஸில் இந்தியாவில்

செலவுத் தொகையைக் கட்டிவிட்டால் அந்த ஆபீஸி லிருந்து ஒரு சீட்டுக்கொடுக்கப்படும்; போகிற இடங்களில் அந்தச் சீட்டை அந்த அந்த நகரங்களிலிருக்கிற குக்ஸ் ஆபீஸில் காண்பித்தால் அவர்கள் ஹோட்டல் முதலானவற் றிற்காகும் செலவை நேரே கொடுத்துக் கணக்கு வைத் துக்கொள்ளுவார்கள். ஹோட்டல்காரன் நமக்கு வந்தனம் மட்டில் சொல்லுவான். அப்படியே ரயில் டிக்கட்டிற் கும் கப்பல்கள் டிக்கட்டிற்கும், அவ்வாபீஸாரே கொடுத் துவிடுவார்கள். ஆகையால் நாம் ஒரு துறவியைப்போல் கவலை யின்றி யாத்திரை செய்யலாம். இதுதான் என் வழக்கமும்; சுருட்டு மூக்குத்தூள் முதலான பழக்க மிருந் தால் துன்பம் நேரலாம். உடல் நலக்குறைவும் ஈசுவர கோபமும் உண்டாகும்.

ஜர்மனி தேசத்தில் பல நகர்களில் வித்தியாசாலைகளும் புஸ்தக சாலைகளுமிருக்கின்றன. ஆதியில் ஜர்மனியில்தான் ஸம்ஸ்கிருத ஏடுகளும் வித்தையும் ஸம்பாதிக்கப்பட்டன. மாக்ஸ்மூலர் முதலான மகாவித்துவான்கள் ஜர்மனி தேசத் திற் பிறந்தவர்களே. இவ்விடத்தில் ஸம்ஸ்கிருத ஏட்டுச் சுவடிகள் மிகுதியாக உண்டு. முன்னிருந்த கேய்ஸர் சக்கிர வர்த்தி இவ்விடத்தில் ஸம்ஸ்கிருத வளர்ச்சிக்குக்காரணமான வரென்கிறார்கள். இது வரையில் அகப்படாத சில அபூர்வ கிரந்தங்களை இந்தியா கவனக்குறைவுடனிருந்த காலத்திற் சேகரித்துக்கொண்டு ஜர்மன் சேத்தில் அச் சிட்டுப் பிரசுரித்திருக்கிறார்கள். இந்தத்தேசத்து வித்து வான்களால் தான் இந்தியாவிற்கு இப்பொழுதிருக்கிற வித்யா கௌரவம். பர்லினில் (Berlin) உள்ள புத்தகசாலை

உலகில் சிறந்ததாகும். இவ்விடம் உள்ள ஸம்ஸ்கிருத பண்டிதரும் சிறந்த படிப்பாளியாவார். என்னை உபந்யஸிக்க அங்குள்ள வித்வான்கள் வேண்டினர்; நானும் ஒப்பினேன். உபந்யாஸம் கேட்ட அவர்கள் மிகவும் பாராட்டினர். இங்குக் கைத் தொழில் யந்திரசாலைகளும் பல உண்டு. கெய்ஸர் சக்கிரவர்த்தியின் அரண்மனையைப் பார்ப்பது இன்றியமையாததாகும். அது வியப்பையும் மகிழ்ச்சியையும் உண்டாக்கக் கூடியது. கெய்ஸர் யுத்தத்தின் பிறகு அயல் நாட்டில் வாழ்ந்தாலும் அவரிடத்தில் மக்களுக்குள்ள அன்பு குறையவில்லை. பெரிய மகானுக அவர் இருந்தார். இப்பொழுது தௌர்ப்பாக்கியசாலியாக இருக்கிறார்; ஈசன் செயல்.

பிரேக் (Prague) என்ற ராஜதானி, சுமார் 150 மைலில் தென் கிழக்கில் உள்ளது; இவ்விடத்தில் உலகப் பிரஸித்தி பெற்ற ஸம்ஸ்கிருத பண்டிதர் விண்டர்னிட்ஸ் என்பவர் வித்தியாசாலையில் இருக்கிறார். இவர் எழுதிய வேத ஆராய்ச்சி நூல்கள் பல இந்திய ஸர்வ கலாசாலையாரால் உயர்தரபட்டப் பரீட்சைப்பாட புஸ்தகமாக விளங்கி வருகின்றன. இந்தப் பண்டிதருடன் நான் சில காலம் டாக்டர் ரபீந்திர நாத் டாகூரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற சாந்தி நிகேதனில் தர்ம வேலை செய்தேன். அவருக்கு இப்பொழுது முதிர்ந்த வயது. இந்தியாவிற்குத் திரும்ப வந்து ஏதாவது புஸ்தகம் எழுதி முடிவுக் காலத்தைக் கங்கைக்கரையில் கழிக்கவேண்டுமென்பது அவர் விருப்பம். ஆனால் அதைச் செய்ய ஸௌகரியமில்லை. நான் அவரை விட்டுப் பிரியும் பொழுது "நாம் இரண்டு பேரும் திரும்பவும் இப்

பிறப்பில் சந்திக்க முடியாது; என்றாலும் பரலோகத்தில் சந்திப்போம்" என்று கண்ணில் நீர் ததும்பத் தெரிவித்தார். அதற்கு நான், "தாங்கள் ரிஷிகளில் ஒருவரைப்போல் அவதரித்திருப்பதால் மறுபிறப்பாவது பரலோகமாவது இல்லை; பிர்மத்தில் ஐக்கியமாகிறவர்களில் ஒருவர்; ஆகையால் நான் பரலோகத்திலும் தங்களை ஸந்திக்க முடியாது" என்று சொல்லிப் பிரிவதாலுண்டான துக்கத்துடன் பிரேக் நகரை விட்டேன்.

அடுத்த ராஜ்யம் வியாதி நிவிருத்திக்கு ஜகத் பிரஸித்தமான வியன்னா நகரம். சுமார் 150 மைல் நேர் கிழக்கில் இருக்கிறது. இது, மகாநதியாகிய டியானூப் நதிக்கரையின் மேல் அமைக்கப் பட்டிருக்கிறது; இதை ஒரு அழகான நகரமென்று ஐரோப்பாவில் சொல்லுகிறதுண்டு. நான் அந்நகரம் போகும் பொழுது ராஜகரச்சண்டைகளிருந்ததினால் வித்தியா சாலையானது மூடப்பட்டிருந்தது. அதனால் புத்தகசாலையைப் பார்க்க முடியவில்லை. ஸம்ஸ்கிருத பண்டிதர் கீகர் என்பவரை அவர் வீட்டிற்போய்ப் பார்த்தேன்; அவர் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். அவரது ஆசிரியர் கீல்ஹாரன் என்ற அபர பாணினி யாவார். அவர் இந்தியாவில் பண்டிதராக விருந்து வியாகரண மகாபாஷ்யத்தை அச்சிட்டவர். இப்பொழுது அவர் மாணவர் கீகர் ஸ்ரீபாணினி சரித்திரம் எழுதிக்கொண்டு வருகிறார். டியானூப் நதிக்கரையிலும் சூழ்ந்த மலைகளிலும் மிகவரிய ஓஷதிகளும் செடிகளும் வளர்ந்திருக்கின்றன; அதனால் வைத்திய சாஸ்திரிகள் சகல வியாதிகளையும் குணமாக்குகிறார்களென்ற புகழ் வந்த

தென்று மக்கள் சொல்லுகிறார்கள். பிறகு நேர்கிழக்கிலிருக்கிற பூடாபாஸ் நகரம் சுமார் 150 மைல் இருக்கலாம். டியானூப்நதி பட்டணத்தின் நடுவிற்போவது, கங்கை மாதிரி தோற்றுகிறது. அதில் மாலையில் ஸ்நானம் செய்து சந்தியாவந்தனாதிகளை முடித்தேன். இதைப் பார்க்கப் பலர் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள். இதுமுதல் கீழ்நாட்டில் ஸம்ஸ்கிருத புத்தக சாலைகளும் ஸம்ஸ்கிருத பண்டிதர்களும் இல்லை. பிறகு பெல்கிரேட் நகரம் சுமார் 120 மைல் நேரே கிழக்கு. இந்த நகரம் டியானூப் நதிக்கும் சேவ் நதிக்கும் இடையே அமைக்கப்பட்டிருப்பது. பூமி எல்லாம் கோதுமை பயிராகி அறுவடை காலமாக இருந்தது. அதிலிருந்து நேர் கிழக்கே சுமார் 250 மைலுக்கு அப்புறம் நிஷ் என்ற பெரிய ரயில்வே ஸ்டேஷனை அடைந்தேன். இவ்விடமிருந்து ஒரு ரயில் வடகிழக்காகத் துருக்கி ராஜ்யத்திற்குப் போகிறது. இதுதான் ஐரோப்பாவின் கீழ்த்திசை. மற்றொன்று தென்கிழக்காகக் கிரீஸ் தேசம் போகிறது. அந்தத் தேசத்தை ஐரோப்பாவின் கீழ்த் துவாரம் என்பார்கள். நிஷ்ஷிலிருந்து நான் நேரே கிரீஸ் தேசம் வந்தேன். சுமார் 220 மைலிருக்கும். கிரீஸ் தேசத்தின் தலை நகருக்கு ஏதன்ஸ் என்று பெயர். ஆரியர்களுக்கு அடுத்தது கிரேக்க நாகரிகமாகும். இந்தத்தேச மனிதர்களுக்கு யவனர்களென்று நம் பூர்விக ஸம்ஸ்கிருத கிரந்தங்களில் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. ஆரியர்களல்லாதவர்களுக்கு மிலேச்சர்களென்பது பொதுப்பெயர். தசரதர் ஸ்ரீராமனுக்குப் பட்டம் கட்ட மிலேச்சாசாரியர்களைக் கூட வருவித்து அபிப்பிராயங் கேட்டதாக ராமாயணம் அயோத்தியா காண்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

காளிதாஸ மகாகவி, தன் சாகுந்தல நாடகத்தில் யவன ஸ்திரீகள் வேட்டைக்காக நியமிக்கப்பெற்றிருந்தனரெனச் சொல்லுகிறார். மகா பாஷ்யத்தில் பதஞ்சலி யானவர், 'யவனர் அயோத்தியைத் தகைத்தார்கள்' என்று ஒரு உதாகரணத்தினால் குறிப்பிட்டிருக்கிறார். சுமார் 2,200 வருஷத்திற்கு முன் அலெக்ஸாண்டர் என்கிற கிரேக்க வீரன் ஸிந்து நதி முகப்புமூலமாக இந்தியாவுக்கு வந்து பஞ்சாப் தேசத்தை வென்றதாகச் சரித்திரமுண்டு. மகஸ்தனிஸ் என்கிற கிரேக்க வித்வான் பாட்னாவில் சில வருஷங்கள் சந்திரகுப்தன் சபையிலிருந்து இந்திய வரலாற்றைத் தன் பாஷையில் எழுதி வைத்துப்போனான். அதில் தாம்பிரபர்ணி நதியைக் குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறது. நம் பண்டிதர்கள் சிலர் கிரீக் தேசத்திற்குப்போய் அந்தக் காலத்தில் அவர்களுக்குப் பாடஞ் சொன்னதாகச் சரித்திரம். ஆகவே கிரீஸூக்கும் இந்தியாவுக்கும் பண்டைக் காலம் முதல் தொடர்புண்டு. அவர்கள் குலதைவம் (தியௌப்பிதா) ஜூபிடர் ஆவார். இப்பொழுது கிரீக்கின் தலை நகரமான ஏதென்ஸிலும் அதைச்சுற்றிலுமுள்ள பட்டணங்களிலும் பூர்வகால நாகரிக கட்டடங்கள் பாதி இடிந்தும் இடியாமலுமிருக்கின்றன. அவற்றையும் பார்க்கலாம். அவற்றுள் அஷ்டவஸூக்கள் கட்டடம் கெடாமலிருக்கிறது. அஷ்டவஸூக்கள் கட்டடம் இந்தியாவில் இல்லை. முற்காலத்தில் வைதிக தேவதைகளுக்குக் கோவில் கட்டவில்லை. வெகு காலத்திற்குப் பிறகு புராணத்தில் சொல்லிய தேவதைகளுக்குக் கோவில்கள் ஏற்பட்டன. ஆகையினால் ஆயிர வருஷங்களுக்கு முன் இந்தியாவில் கோவில் இருந்ததென்று சாஸனங்கள் மூல

மாகச் மெய்ப்பிக்கவியலாது. கிரேக்கர் சில்ப வேலையில் மிக்க திறமையுள்ளவரென்று மகா பாஷ்யத்தில் ஒரு உதாரணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இலக்கியப் பயிற்சியாளருக்கும் நர்த்தன வித்வான்களுக்கும் கௌரவமிருந்ததாகக் கட்டடங்களிற் செதுக்கியுள்ள சித்திரங்களால் அறியலாம். ப்ளேடோ, ஸாகரடீஸ் முதலான வேதாந்த வித்துவான்கள் பெரிய பாடசாலைவைத்துப் பலசிடர்களுக்குப் பாடம் சொன்னதாகச் சரித்திரமிருக்கிறது, ராமாயணமானது, பின் தோன்றிய கவிகள் நூல்களை எழுத எப்படி ஆதாரமாயிற்றோ அப்படியே கிரீக் தேச புத்தகங்கள் இப்பொழுது பிரஸித்திபெற்ற ஷேக்ஸ்பியர் முதலான மகா கவிகளால் எழுதப்பட்ட புஸ்தகங்களுக்கு ஆதாரமாயின. சுமார் 60 ஆயிரம் பெயர்கள் சுற்றிலும் உட்காரக்கூடிய ஸ்டேடியம் என்கிற நாடகசாலை துருக்கர்களால் கெடுக்கப்பட்டு அபிமானமுள்ளவர்களால் திரும்ப மார்பிள் கல்லினால் பழுது பார்க்கப் பட்டுள்ளது; அது, பார்க்க ஆச்சரியமாகத் தோற்றும். ரோமாபுரி நாடகசாலை இதைவிடப் பெரிது என்றும், அதில் 96 ஆயிரம் பேர் உட்காரலாம் என்றும் கூறுவர்; ஆனால் அது பழுது பார்க்கப் படாமல் இடிந்து கிடக்கிறது. ஏதன்ஸில் வருணன் கோவில் வெள்ளைக் கல் தூண்கள் சில இடிந்து விழுந்திருக்கின்றன. நிற்கும் தூண்களைப் பார்த்து இவைகளை எப்படி மட்டம் போட்டு இவ்வளவு உயரத்தில் சில்பிகள் நிறுத்தினார்களென்று சில்ப சாஸ்திரிகள் வியப்புறுகிறார்கள். ஒரு மலைக்குன்றின் பேரில் அக்ராபோலிஸ் என்ற வித்வத்ஸபை இப்பொழுதும் காப்பாற்றப்பட்டுவருகிறது. அதனடியில்

ஸ்ரீ கிறிஸ்துவின் சீடராகிய ஸெயிண்டு பால் என்பவர் முதல் வில் உபதேசம் செய்து இந்தத் தேசத்தாரைக் கிறிஸ்துவ மதத்திற் சேர்த்தாராம். அதனால் கிறிஸ்துவ மதம் கிரீக் சர்ச்சு என்ற பெயருடன் 1,900 ஆண்டுகளுக்கு முன் உண்டாயிற்று என அறியலாம். இந்தக் குன்றுக்கு எதிரில் அடிவாரத்தில் ஸாகரடீஸ் என்ற வேதாந்தியை விஷம் கொடுத்துக் கொல்லுமுன் அடைத்திருந்த குகை ஒன்றிருக்கிறது. அதற்கு அயலில் அப்பெரியார் தம் மாணவருக்கு பாடம் சொன்ன லைஸியம் என்ற பெயருள்ள வனம் ஒன்றுண்டு; கிரீக்கதேசம் நம் மலைநாடு போலத் தோற்றும். இது ஐரோப்பாவில் தென்கிழக்குப் பகுதியை யடைந்தபடியால் இந்தத் தேச இரவுக்கு, 'இருட்டு இரவு' (டார்க் நைட்) என்று பெயர். நான் யாத்திரை செய்த பழைய இடங்களில் இரவு, பகலைப் போல் விளக்க முற்றிருந்ததினால் 'பிரகாச இரவு' (ப்ரைட் நைட்) என்று அந்தத் தேச இரவுகளுக்குப் பெயர் வழங்கியது. இவ்விடமுள்ள மகளிர் கண்விழி கறுப்பு நிறம். கூந்தலும் நல்ல கறுப்பு. இவ்விடத்தில் ஈ, கொசு முதலானவற்றைக் கண்டேன். நம் தேசத்தில் விளையும் கத்தரிக்காய் முதலான கறி காய்களும் கிடைக்கின்றன. இதனுடன் ஐரோப்பிய யாத்திரை முடிந்து விட்டது.

இனி ஆசிய மத்திய மாகாணம்:—ஏதன்ஸிலிருந்து நேரே கிழக்கில் கடலும், தீவுகளுமடங்கிய ஆகாச வழியாக ஒரு விமானத்தில் 1,416 மைல் ஸிரியாவிற்கு யாத்திரை செய்தேன். காலையில் 8-30க்குப் புறப்பட்டு மாலை 6 மணிக்குப் பேரூத் என்ற ஸிரி

யாவின் தலை நகரம் சேர்ந்தேன். பல பிறப்புக்களிற் செய்த பாபத்தைப் போக்க ஒரு வைதிகன் இப்பிறப்பில் பூமி சம்பந்த மில்லாமல் சிறிது நேரமாவது ஜபம் செய்து ஈசுவரனைத் தியானிக்க வேண்டுமென்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. அதற்காக 'வாயுஸ்தம்பம்' செய்து பூமியைத் தொடாமல் சிலமணி நேரம் யோகாப்பியாஸம் செய்ய வேண்டுமென்று கூறப்படுகிறது; அதில் பயிற்சி இல்லாததினால் நீருள் நின்று கும்பகப் பிராணயாமம் செய்து வருகிறோம். அவ்வப்பியாசமும் இப்பொழுது குறைந்து வருகிறது. அதனால் ஸ்நானமட்டில் 50-100 வரை ஸேது முதலிய புண்ய க்ஷேத்திரங்களிலுள்ள தீர்த்தங்களில் நாம் செய்து வரலானோம்; அரசர்களுக்கு ரத்னதுலாபாரமும், ஹிரண்ய பசுகர்ப்பவாசமும் விதிக்கப்பட்டுள்ளன. பூஸ்பர்ச மில்லாமல் சுமார் 10 மணி நேரம் வரை ஈச்வர கிருபையினால் ஆகாசவாஸம் கிடைத்தது; அதனால் பகவத் கீதை முழுவதையும் சில உபநிஷத்துக்களையும் பொருளறிந்து பாராயணஞ் செய்தேன். முற்காலத்தில் விமானயாத்திரை தேவர்களுக்கு மட்டில் உரியதாயிருந்தது. இப்பொழுது மனிதருக்கும் கிடைத்தது. இஃது ஈசுவரானுக்கிரகமே. ஸ்ரீருத்திராத்தியாயத்தில் கூறின "நமோ மேக்கியாய ச, வித்யுத்யாய ச," முதலான வாக்கியங்களில் 'ஸ்ரீபரமசிவன் மேகங்கள் முதலானவைகளுக்குள் வஸிக்கிறார்' என்னும் உண்மையை அறிய விரும்பினால் விமான யாத்திரை மூலமாக உணரலாம். மழை பெய்யும் பொழுது விமானத்தை மேகத்திற்கு மேலே போகவிட்டால் ஸூர்யகிரணம் மேகத்தின்மேல் விழும்; அப்

பொழுது உண்டாகும் இந்திர தனுசுவின் நிறங்களைப் பார்க்கப்பார்க்க ஒருவன் வியப்புறுவான். இலங்கையிலிருந்து அயோத்திக்கு ஸ்ரீராமன் புஷ்பக விமானத்தில் யாத்திரை செய்யும் பொழுது வர்ணிக்கப்பட்டுள்ள ஸ்ரீமத் ராமாயண வாக்கியங்களையும், காளிதாசகவி சாகுந்தலத்தில் துஷ்யந்தன் செய்த விமானயாத்திரை வர்ணனைகளையும் படித்துப் பாருங்கள். அப்பொழுது விமானயாத்திரையின் இன்பம் புலப்படக்கூடும்.

மத்திய ஆசியாவானது, பண்டைக்காலத்து மேரு பக்கத்திலிருந்து புறப்பட்ட ஆரியர்கள் குடி புகுந்த இடமென்றும், கிறிஸ்து இந்தப் பாகங்களில் சஞ்சரித்து மதஸ்தாபனம் செய்ததொரு பரிசுத்த பூமி என்றும் சரித்திரக்காரர்கள் கூறுகிறார்கள். இந்தத்தேசம் மெடிடேரேனியன் (Mediterranean Sea) கடல் வடகரையில் அமைக்கப்பட்டிருக்கிறது. பெரூத் (Beyrout) என்கிற துறை முகபட்டினத்திலிருந்து கடற்கரை ஓரமாகக் கிழக்கே 100 மைல் மோட்டாரிற் சென்றால் பாலஸ்டயின் (Palestine) துறை முகமான ஐபா (Haifa) வென்னும் பட்டினம் வந்து சேருவோம். இதின் ஸமீபத்தில் நாசரத்து என்னும் நகரமிருக்கிறது. ஐபாவிலிருந்து சுமார் 70 மைல் தூரத்தில் வடகிழக்காக ஜெரூஸலம் (Jerusalem) என்னும் புண்ணிய க்ஷேத்திரம் ஹிந்துக்களுக்கு ஸ்ரீகாசியைப் போன்று விளங்குகிறது. வருகிற வழி முற்றும் முற்காலத்தில் காடாகவும் மணலாகவும் அழல் ஆகவுமிருந்தன. யூத ஜாதியார் (ஜுஸ்) தங்கள் புராதன புண்ணியஸ்தலமென்று அங்குக் குடியேறி உபயோகமற்ற இந்த இடங்

களை ஸ்வர்க்கலோகம் போல மனிதவஸதிக்கு ஏற்றதாகச் செய்து விட்டார்கள். எங்கே பார்த்தாலும் ஆரஞ்சு முதலான பழச் செடிகளை வைத்து அவ்விடத்தைப் பசுமை யாக்கி ஆயிரக்கணக்காக யூதர்கள் குடியேறினர். இதனால் மனிதர் முயற்சியானது, களர் நிலத்தை நன்செயாகத் திருத்தலா மென்பது தெரியும். பைபிள் படித்தவர் கள், கிறிஸ்துவானவர் ஜருஸலத்திற்கு ஸமீபத்தில் பிறந்து கடைசியில் ஜருஸலத்திலேயே சிலுவையில் அறையப் பட்டுத் தேவலோகம் சென்றார் என்றும், அவர் தம்மானு வருடன் லீலைகள் பலவற்றை ஜரூஸலத்துச் சுற்றுப் பிரதேசங்களில் செய்த விவரத்தையும் நன்றாக அறிவார் கள். இந் நகரம், ஐந்து மலைகளின் நடுவில் அமைக்கப்பட் டிருக்கிறது. முதல்மலை கிறிஸ்துவை விசாரணை செய்து சிலுவையில் அறைந்த இடமாகும்; இரண்டாவது மலையில் இப்பொழுது யூதர் (ஜூயிஸ்) வித்தியாசாலை ஸ்தாபித்திருக் கிறார்கள். மூன்றாவதில் ஜர்மன் சக்கிரவர்த்தி, தாம் வந்து இறங்குவதற்காகக் கட்டின அரண்மனையுள்ளது. நான் காவது ஸ்ரீ கிறிஸ்து தேவலோகம் சென்ற குன்று. அதில் ருஷ்ய சக்கிரவர்த்திகளால் கட்டப்பட்ட ஒரு பெரிய கோபுர முண்டு. ஐந்தாவதில் கிறிஸ்து மாதாவின் ஸமாதி யிருக் கிறது. இந்துக்கள் ஸ்ரீகாசியிலிருப்பது போல இந்த இடங்களில் மரணத்தை எதிர்பார்க்கும் கிறிஸ்துவர் பலர், நெடுந்தூரத்திலிருந்து வந்து காத்திருக்கிறார்கள். ஸ்ரீ கிறிஸ்துவின் ஸமாதி இந்த ஐந்து மலைகளுக்கும் நடுவில் உள்ளது. ஸமாதியின் மேல் ஒரு பெரிய கண்ணாடிக் கூடு அமைக்கப்பட்டிருக்கிறது. அதைச் சுற்றிலும் பெரிய

மண்டப முண்டு. ஸமாதிக்கு மின்சார விளக்குகள் போடப்பட்டு அணையாவிளக்கோடு பூஜை நடக்கிறது.

கிறிஸ்துவ மத உட்பிரிவுகளில் உள்ள ஏழுமடாதிபதிகள் நாள் தோறும் ஒவ்வொருவராக அவரவர்க்கு நியமிக்கப்பட்ட காலங்களில் வந்து நேரே பூஜை செய்கிறார்கள். அதில் கிரீக்மதாசாரியருக்குப் பாதிகால பூஜையாம். பிறகு சிலமணிக்கு அபிஸீனிய ஆசாரியரவர்களுக்கு. பிற்பாடு அஸீரியன் ஆசிரியர்க்கு. பிறகு ரோமாதிபதி போப் குருவிற்கு. கடைசியில் சிலமணி நேரம், பிராடஸ்டெண்டு எனவழங்கும் நவீன கிறிஸ்துமதக் குருவின் பூஜைக்குரியதாகும். கடைசி மதக்காரர்களுக்குப் பூஜாகாலம் மிகக் குறைவே யாகும். பூஜை விமரிசையும் ஆடம்பரமும, ஒன்று முதல் மூன்று கால குருக்களுக்கு மட்டுமே. தென் இந்திய சிவக்ஷேத்திரங்களில் ஸ்ரீ சிதம்பரம் முதலான கோவில்களில் எப்படி உத்ஸவ காலங்களில் பூஜைகளும் பாராயணங்களும் அலங்கார முதலானவைகளும் நடக்கின்றனவோ அப்படியே இந்த ஸமாதிக்கு நாள்தோறும் பெருஞ் செலவில் பூஜை நடத்தப்படுகிறது. தவிரவும் நாள் தோறும் பக்தர்கள் செலுத்தும் கட்டளைகளுமுண்டு. ஆனால் அபிஷேகம் மாத்திரமில்லை. தூப தீபாராதனைகள் விமரிசையாக நடத்தப்படும்.

நான் அவ்விடம் போன பொழுது ஸமாதியில் சிறந்ததொரு உத்ஸவம் நடந்தது. மாலையில் ஸ்வாமி வீதி புறப்பாடும் உண்டு. அதற்காக என்னை அழைத்து நன்கு காணக்கூடிய ஒரு இடமும் கொடுத்தார்கள். கூட்டம் எண்ணிக்கையில் அடங்குவதன்று. சிறந்த தங்கச்சப்

பிரத்தில் கிறிஸ்து விக்கிரகமும் மற்றொரு வாகனத்தில் மாதா மேரியின் விக்கிரகமுமிருந்தன. முதலில் ஜண்டா முதலானவை இரண்டு பக்கங்களிலும்; பிறகு சாதாரண வாத்தியம். தூபம் தங்கப்பாத்திரத்தில் போடப்பட்டிருந்தது. கன்னிகைகள் தீபம் ஏந்தி வந்தனர்; லாடின் பாஷையில் பைபிள் பாராயணஞ்செய்யும் சில பக்தர்கள்; ஆசாரியர்களாக ஆவதற்கு உமேதவாரியாயிருப்பவர்; பேராசாரியர்கள்; இவர்களுக்கெல்லாம் தனித் தனியே உடுப்பு முதலானவை ஸ்தானத்திற்குத் தகுந்தபடி உண்டு. புஷ்பவர்ஷம்; பிறகு முக்கிய பூசாரி; அவரைக் கிரீக் மடாதிபதி என்று சொன்னார்கள். அவர் ஆடை வெகு அழகாகக் காணப்பட்டது. பிறகு மாதா மேரி; கடைசியில் ஸ்ரீகிறிஸ்து தேவதை. இந்த இரண்டு வாகனங்களுக்குமேல் நாலு தங்கக்கால்களுடைய ஒருபட்டுப் பந்தல். நாலு பெயர்களால் தூக்கிக் கொண்டுவரப்பட்டது. வாகனதண்டாயங்கள் தங்கம் வெள்ளி முதலானவைகளால் செய்யப்பட்டவை; வைரம் சிகப்பு முதலானவைகள் பதிக்கப் பட்டிருந்தன. இவ்வளவு ஸம்பத்துக்களை நம் க்ஷேத்திரங்களில் நான் பார்த்ததில்லை. அளவிற்படாத ஸொத்து. பின்புறத்தில் வேதபாராயணம். பாடலுடன் கன்னிகைகள் கூட்டம். கடைசியில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள். ஆகவே ஆரம்பம் முதல் கடைசிவரை ஒன்று அல்லது ஒன்றரை பர்லாங்கு நீளம் இந்த ஊர்வலமிருக்கலாம்; மாலை மஞ்சள் வெயில் ஆடை ஆபரணங்களின் மேல் படும்பொழுது பார்க்கிறவர்களுக்கு ஆச்சரியமாகத் தோற்றும். இவ்விதம் வீதிகளைச் சுற்றிக் கொண்டு அஸ்தமன காலத்தில் திரும்பவும் கோவில் போய்ச்

சேர்ந்தது. முக்கிய பூஜாரியின் உடையை ஆயிரக்கணக்கான ரூபாய் விலை மதிக்கலாம் அப்படியே வாகனங்களுக்கு லக்ஷக்கணக்கில் மதிக்கக்கூடும்; இப்பொழுது உலகில் மூன்றில் ஒருபாகமுள்ள கிறிஸ்துவர் குல தைவத்தின் இது மூலஸ்தானமல்லவா? அம்மத அரசர்கள் ஜகத்தை ஆண்டு வந்தவர்களும், வருகிறவர்களுமாக இருக்கிறார்கள் அல்லவா? ஆகையால் லக்ஷ்மீ நர்த்தனத்தை ஸ்வாமி புறப்பாட்டில் பார்த்தேன். பார்க்கவந்த கூட்டத்தில் சிறு சப்தமில்லாமலும், தூரத்திலிருப்பவர்களுக்கும் பைபிள் பாராயண வொலி தெளிவாகக் கேட்டது.

இந்த உத்ஸசவச்சடங்கு கிறிஸ்துவ மதத்தில் எப்படி வந்ததென்று நண்பர்கள் கேட்கலாம். சரித்திரம் படித்தவர் இதற்கு பதில் சொல்வது எளிதாகும். பண்டைக்காலத்தில் (சுமார் 2,500 வருஷங்களுக்கு முன்) புத்தமதம் தோன்றி ஏழாவது நூற்றாண்டுவரை இந்தியா முழுதும் பரவியது. அக்காலத்திற்குப் பின் புத்தர் கோவில்களும் ஜைநர் கோவில்களும் கட்டப்பட்டு உத்ஸவாதிகளும் நடத்தப்பட்டன. அசோகன் என்கிற பௌத்த அரசன் 2,200 வருஷங்களுக்கு முன் பாடலிபுரத்தில் அரசாண்டான்; அப்பொழுது, புத்தமதத்தைப் பரவச்செய்யக் கிரீக் முதலான மேல்த் தேசங்களுக்குத் தன் தூதரை அனுப்பினான். அப்படியே பிற திக்குக்களுக்கும் தூதர் போனார்கள்; அப்பொழுது மேலைத் தேசத்தாரில் நிரம்பப் படித்தவர்களும் நாகரிகத்தை யடைந்தவர்களும் கீழ்நாட்டு ஆரியர்களிடம் மிக்க மரியாதை கொண்டிருந்தவர் வைதிக தேவதைகளைத் தர்மம், தம் தேவதையாகக் கொண்டாடினர்; சிலர் புத்த உத்ஸவங்

களைக் கிறிஸ்து அவதரித்து ஒரு புதுமதம் உண்டாக்கினவுடன் அனுஷ்டிக்கலாயினர். பிறகு கிறிஸ்துவ ராஜாக்கள் ஸம்பன்னராக வந்தபொழுது கோவில்களுக்குத் தாராளமாக ஸொத்தைக் கொடுத்தார்கள். ஆகையால் ரோமாபுரியிலிருக்கிற ஸேயின்டு பீடர் கோவில் இவ்வுலகில் மிகப் பெரியதாகும். அ த னு ட ன் வந்த குருவிற்கும் ஸம்பத்தை அதிக மாக்கினுர்க்ள். நாம் இப்பொழுது உலகிற் காணும் ஸொத்தை ஒரு தாசிலும் ரோமாபுரி போப்பின் ஸம்பத்தை மற்ெறுரு தராசிலும் வைத்தால் அநேகமாகப் போப்பின் ஸம்பத்தே அதிகமாக இருக்கலாம், அப்படியிருக்க, கிறிஸ்துவர் தமது குலதெய்வத்தை ஸம்பத்தினுல் உபசரிக்கக் கேட்கவேண்டுமா? புத்தமத உத்ஸவங்களே கிருஸ்துவமத உத்ஸவங்களாகப் பரிணமித்தன. இப்படி பக்ஷோத்ஸவம் மாஸோத்ஸவம் மு த லா ன வை க ள் ஜருஸலத்தில் பிரபலமாக நடந்துவருகின்றன.

கிறிஸ்து ஸமாதியைச் சுற்றியிருக்கிற மண்டபங்களில் ஓரிடத்தில் அவரை விசாரணைசெய்த இடத்தையும், சிலுவையில் அறைந்த ஸ்தலத்தையும், ஸ்ரீ கிருஷ்ணலீலையைக் கோகுல பிருந்தாவனங்களில் எப்படி செதுக்கியிருக்கிறுர்களோ அப்படியே ஜரூஸலத்திலும் செதுக்கியிருக்கிறுர்கள். இந்த நகரத்திற்குச் சிலமைல் தூரத்தில் கிறிஸ்து பிறந்த கிராமம் பேதிலாம் என்ற பெயருடன் இருக்கிறது. ஜரூஸலம் சுமார் 2,500 அடிக்கு மேலிருக்கிற ஒரு மலைப் பிரதேசமாகும். அதற்கு வடக்கே 25 மைல் தூரத்தில் 1,400 அடிக்குக் கீழ் இறந்த ஸமுத்திரம் (Dead Sea) என்ற பெயருடன் சுமார் 50 மைல் சுற்றளவில் ஒரு சிறு கடலிருக்கிறது.

பூமியில் 1,400 அடிக்குக் கீழ் ஒரு கடல் இருத்தல் ஆச்சரியத்தை உண்டாக்கும். போக்குவரவு இல்லாததினுல் இந்தக் கடல் நீரில் தோலைப் பொறுந்த வியாதிகளைக் குணமாக்குகிற சக்தியிருக்கிறது; நாள்தோறும் வைத்தியர் கட்டளைப்படி தோல் வியாதிக்காரர் பலர் ஸ்நாநம் செய்ய வருகிறுர்கள்.

தேகத்தில் ஏதாவது புண்களிருந்தால் அந்த நீர் பட்டவுடன் எரியத் தொடங்கும். நான் தெரியாமையால் கண்ணில் சிறிது நீரை எடுத்துத் துடைக்கலானேன். உடனே கண் எரிய லாயிற்று. உப்பு மிகுந்திருப்பதனுல் இதில் மீன் முதலானவை இல்லை. இச் சிறு கடலில் ஜார்டன் என்ற ஒரு சிறு நதி மேற்கேயிருந்து வந்து கலக்கிறது. இந்த ஜார்டன் ஆற்று நீரை எடுத்துக் கிறிஸ்துவுக்கு அவர் குரு ஜான் என்பவர் ஞான ஸ்நானம் செய்வித்தார். நான் அவ்வாற்று நீரை எடுத்து மேலே தெளித்துக் கொண்டேன், உடனே என்னுடனிருந்தவர் எதற்காக இப்படிச் செய்கிறீர்களென்று கேட்டார்கள். "அந்தக் காலத்தில் ஸேயின்டு ஜான் என்னும் அவதார புருஷன் கிறிஸ்துவுக்கு ஞான ஸ்நானம் செய்வித்தார். இப்பொழுது நமக்கு ஞான ஸ்நானங்கொடுக்க ஒருவருமில்லை. ஆதலினுல் இந்த ஆற்றுநீரை நானே எடுத்துத் தலையில் தெளித்துக் கொள்ளுகிறேன்" என்று சொன்னேன்; உடனே எல்லாரும் அந்த நதி ஜலத்தை எடுத்து மேலே பக்தியுடன் தெளித்துக் கொண்டார்கள். அப்படியே அதற்கு ஸமீபத்தில் ஓரூரில் சீடர்கள் "இவ்விடத்தில் ஜலமில்லை" என்று சொல்லவே கிறிஸ்து ஒரு கம்பை எடுத்

துப் பூமியில் குத்தினர்; உடனே ஒரு தாரை தோன்றியது என்று கூறுகின்றனர். அது நல்ல நீராக இருந்த தாகையால் நான் கொஞ்சம் ஜலத்தை எடுத்துக் குடித்து விட்டு என் கூஜாவிலேயும் மொண்டு கொண்டேன். உடனே என்னுடன் வந்தவர் புண்ணிய தீர்த்தமென்று அந்த ஜலத்தை வயிறு நிறையக் குடித்தனர். இதற்குப் பெ யலியாஸ் பளண்டன் என்று பெயர். ஸ்ரீகிருஷ்ண லீலை மாதிரி வெகு ஞாபகச் சின்னங்களை ஜனங்கள் அங்குக் காண்பிக்கிறார்கள். ஜரூஸலம் அரபி தேசத்தைச் சேர்ந்தது. அரபி தேசத்தில் ஜரூஸேலத்திற்குச் சுமார் 400 மைலுக்குக் கிழக்கே மெக்கா என்னும் நகரில் ஸ்ரீமஹமத் நபி அவதரித்தார்; அதற்கு வடமேற்கேயிருக்கிற மேடிஞ என்கிற நகரத்தில் ஞானத்தை அடைந்து பிறகு ஜரூஸலத்தில் தன் குதிரை மேல் ஏறிய படியே மோக்ஷமடைந்தாரென்று முகமதியர் ஜரூஸலத்தை மூன்றுவது க்ஷேத்திரமாகக் கருதி வருகிறார்கள். அவர் ஸ்வர்க்கம் ஏறின இடத்தில் ஒரு பெரிய மசீத் கட்டப்பட்டிருக்கிறது அதற்கு, 'ஓமர் மசீத்' என்று பெயர். இந்தப் பெரிய கட்டடத்தைப் பார்த்த யாத்திரைக்காரர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனல் இந்தியாவில் ஆக்ராவிலிருக்கிற டாஜ்மகாலைப் பார்த்தவர்கள், ஓமர் மசீதை இரண்டாவதென்றே சொல்லுவார்கள். இத்தேசமுழுதும் நேரே மேற்கேயிருக்கிற துருக்கி தேசத்து ஸுல்தான் ஆளுகையில் வெகு காலம் இருந்தது. இப்பொழுது நடந்த மகா யுத்தத்தில் பாலஸ்டேன் என்கிற மத்திய பாகத்தை இங்கிலீஷ்காரர்கள் ஆளுகைக்குள் சேர்த்துக் கொண்டு விட்டபடியினல் இப்பொழுது இங்கிலாந்தின் ஆளுகையி

யிருக்கிறது. துருக்கி ஆளுகையிலிருக்கிற பொழுது ஆயிர வருஷ காலமாகத் துருக்கர்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் அடிக்கடி சச்சரவு நடந்து வந்ததைச் சரித்திரமூலமாக எல்லாரும் அறிவோம். கிறிஸ்துவர்கள் துருக்கி சுல்தானிடமிருந்து ஜரூஸலத்தைக் கைவசப்படுத்தத் தர்மயுத்தம் பலமுறை செய்தனர்; அப்பொழுது ஒருமுறை வெற்றி உண்டாகும்பொழுது ஓமர் மசீதைத் தங்கள் குதிரை லாயமாக அவர்கள் உபயோகித்து வந்தார்களாம்; அதனால் "துருக்கியர் மதாவேசங் கொண்டனராம்; அப்படியே துருக்கர்கள் வெற்றியடைந்த காலத்தில் தங்களால் முடிந்தவரை எதிரிகளுக்குக் கோபத்தை உண்டாக்கினார்களாம்; அவ்விஷயமாக இரண்டு பக்கத்தாரும் நூல்கள் எழுதியிருக்கிறார்கள். இதில் வேலைசெய்த கிறிஸ்துவர்களுக்கு க்ரூஸேடர் என்ற பெயர் வழங்கிற்று. ஓமர் மசீதுக்கு ஸமீபத்தில் யூதர்களுடைய 'அழுஞ் சுவர்' இருக்கிறது. இப்பொழுது நாகரிககாலமானதினால் குயுக்தியினால் இந்த மூன்று மதக்காரர்களும் ஒருவருக்கொருவர் ஜரூஸலத்தைச் சுவாதீனப்படுத்த முயன்றுகொண்டேயிருக்கிறார்கள். ஆகையால் அவ்விடத்தில் அமைதி சிறிதுமில்லை. யூதர் (ஜூஸ்) ஒரு வித்தியாசாலையை மிகப்பெரிதாக ஸ்தாபித்திருக்கிறார்கள். அதன் தலைவரையும் உபாத்தியாயர்களையும் இவ்வித்யாசாலையில் சந்தித்தேன். உபந்நியாஸம் செய்யும்படி என்னைக் கேட்டார்கள். இந்த வித்யாசாலையில் ஸம்ஸ்கிருதத்தையும் படிப்பிக்க வேண்டுமென்று சொன்னேன்; ஏனென்றால், யூதர் வேதமானது பைபிளில் பூர்வபாகம்; மோஸஸ் சட்டமுழுதிலும் கூறும் ஆசாரங்களெல்லாம் மனுஸ்மிருதி

யிலிருந்து எடுக்கப்பட்டவை; உதாரணமாகப் பிறப்பு மரணங்களுக்குப் பன்னிரண்டு நாட்கள் கழிந்தபிறகு ஸ்நானம் செய்து விபூதியைத் தரித்தபின் சுத்தியடையலாம் என்று பைபிலில் மோஸஸ் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. இப்பொழுது லோகத்தில் திரவிய ஸம்பத்து உள்ளவர்களில் முக்கியமாயிருப்பவர் யூதர்கள். அவர்கள் முன்னோர் ஆசாரம் ஆரியர் ஆசாரமாகும்; ஏனென்றால் அதன் பிறகு கிறிஸ்துவ மதம் தோன்றியது. பிறகு மகமதிய மதம்; ஆகையால் ஆரியர் மதம் யூதர்களின் முன்னோராரின் மதமாகவிருந்திருக்கக்கூடும்; மனு சொல்லுகிறபடி ஆரியர்கள் ஈசுவரனால் படைக்கப்பட்டு ஆரியாவர்த்தத்தை ஆண்டு கொண்டிருக்கும் பொழுது அவர்கள் உலகம் முழுதும் சுற்றலாயினர். எந்த எந்த இடங்களில் வாழ்வுக்கு ஏற்ற ஸௌகரியம் இருந்ததோ அந்தந்தத் தேசங்களில் நிலைத்தனர்; காலக்கிரமத்தில் தங்கள் முன்னோருடன் ஸம்பந்த மில்லாமல் தனியாகப் பிரிந்து பூர்வாசாரத்திற் சிலவற்றை மறந்து புது ஆசாரங்களை அப்போதைக்கப்போது கைக்கொண்டு வந்தனர்; அதனால் யவனர் என்றும், மிலேச்சர் என்றும் மேனாட்டினருக்கும், திராவிடர் என்று தென்னாட்டாருக்கும் பெயர் வந்தது. அப்பொழுது அவரவர் தாய்ப்பாஷையான ஸம்ஸ்கிருதத்தையும் மறந்து விட்டார்கள். ஆகையால் உலகத்தில் வாழ்கிற மனிதர்கள் எல்லாம் மனுவின் வழியினவரே. ஆதலால் யூத மதத்தைப் பலப்படுத்த அதற்கு முன்னிருந்த ஆரியமதம் வேண்டும். ஆகையால் யூத வித்தியாசாலையில் ஸம்ஸ்கிருத பாஷை வைத்து நடத்தும்படி நான் பிரார்த்தித்தேன். வித்தியாதிகாரி, "ஸம்

ஸ்கிருத பாஷா பண்டிதர் ஒருவர் இந்த வித்யாசாலைக்கு வேண்டுவது அவசியமே; ஆனால் இப்பொழுது செலவைச் சுருக்க நேர்ந்ததினால் அடுத்த வருஷத்தில் ஸம்ஸ்கிருத வகுப்புச்செலவையும் சேர்த்து அனுமதிபெற முயலுவேன். அதை முதல் முதல் திறக்கும்பொழுது தாங்களும் வரவேண்டும்" என்று சொன்னார். இவ்விதமாக ஜரூஸலத்தில் ஒரு வாரம் தாமதித்து மத்திய ஆசியாவிலுள்ள புண்ணிய ஸ்தலங்களைப் பார்த்துக்கொண்டு என் யாத்திரையை முடிவுக்குக் கொண்டுவந்தேன்.

ஜரூஸலத்தைச் சுற்றி மேற்கிலும் வடக்கிலும் சுமார் 400 மைல் அளவில் உள்ள இடங்கள் ஆரியர்கள் வாழ்ந்திருந்த சின்னங்களுடன் காணப்படுகின்றன. அதில் முக்கியமானது யூபரேடிஸ் மகாநதிக்கரையிலிருக்கும் பாபிலோன் ஆகும். இங்கு மண்மேடிட்ட இடங்களை வெட்டிப் பார்க்கும் பொழுது, பஞ்சாப்தேசத்தில் மோகன் ஜோ தாரோ, ஹரப்பா முதலான இடங்களில் இப்பொழுது அகப்படும் பொருள்களும் பாபிலோனில் கிடைக்கும் பொருள்களும் வேறுபாடின்றி ஒரே மாதிரியாக இருக்கின்றன; இவை ஆரிய நாகரிகச் சின்னமாக மதிக்கப்படுகின்றன. தத்வ சாஸ்திரிகள் பலர், ஆரியர் மத்திய ஆசியாவில் வாழ்ந்த இடம் இதுவே யென்றும் இந்தப் பட்டணங்களைப் பண்டை நாளில் ஆண்டு வந்த அரசர் பெயர்களும் ருக்வேதத்தில் கூறப்பட்டிருக்கின்றனவென்றும் ஆராய்ந்து வெளியிட்டிருக்கிறார்கள். எழுதியும் வருகிறார்கள்.

அவ்விடத்திலிருந்து பம்பாய்க்குத் திரும்பப் போர்ட் ஸேட்டுக்கு ரயில் வண்டி-மூலமாகத் தென் கிழக்கு நோக்கி

வந்தேன் ; சுமார் 150 மைல் இருக்கலாம். வருகிற வழியில் ஒரு பெரிய மணற்காட்டைத் தாண்ட நேர்ந்தது. தெற்கே யிருக்கிற ஆப்பிரிக்கா தேசத்தில் மத்திய ரேகைக்கு வடபகுதியிலிருந்து தொடங்குவதொரு மணற் காடு சுமார் 150 மைல் அகலத்தில் தொடங்கி நேர் கிழக்காக ஆயிரம் மைல் வரை வந்து பிறகு ஈஜிப்து வழியாக வட கிழக்கில் திரும்பி அரேபியா வழியாக நேர் கிழக்கே சென்று பிறகு அகலத்திற் சுருங்கி இந்தியாவில் ஸிந்து தேச வழியாக ஜோட்பூர், பிகானீர் ராஜ்யத்தில் முடிவாகிறது. இந்த மணற் பிரதேசத்திற்கு ஸஹாரா பாலைவனம் என்று பெயர். இவ்விடத்தில் பகலில் சூடு 120 டிகிரிக்கு மேல் போகும். இரவில் 32 டிகிரிக்குக் கீழேயும் வரும். மரம் செடி முதலானவை இந்தக் காட்டில் உண்டாவதில்லை. மேக ஸஞ்சார மில்லாததினாலும் மழையின் பெயர் கூட இந்த இடங்களில் வாழ்கிறவர்களுக்குத் தெரியாதென்னலாம். சில இடங்களில் பூமியில் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. அவ்விடங்களில் சிலர் வஸிக்கிறார்கள். வியாபாரிகள் ஒட்டகையின் மேல் இரவில் யாத்திரை செய்வது வழக்கம். ஸாமான்களை ஒட்டகை மேலேற்றிப் போவார்கள். ஒட்டகமோட்டுவோன் இரவில் செல்லும் பொழுது நக்ஷத்திரங்களைப் பார்த்து வழியைக் கண்டு பிடிப்பான். எப்பொழுதாவது கொஞ்சம் மேகம் வந்து நக்ஷத்திரங்களை மறைத்து விட்டால் உடனே யாத்திரையை நிறுத்தி விடுவான். ஏதாவது இரண்டு மூன்று தின இரவுகளில் மேகங்கள் விடாமல் நக்ஷத்திரங்களை மறைத்து விட்டால் யாத்திரைக்காரர் அவ்விடங்களில் பசி தாகங்க

ளிஞல் மடிவது முண்டு; ஆஞல், மேகம் மறைப்பது மிக அரிதாகும். அரேபியா முதலான மேலேத் தேசத்திற்கு நம் ஆரியர்கள் ஜோதிடம் படிக்க முற்காலத்தில் கால் நடையாகச் சென்றதுண்டு; அக் காலத்தில் சில இரவு களில் மேகத்திஞல் நக்ஷத்திரங்கள் மறைய, வழி தவறிக் கஷ்டப்பட்டிருப்பதை ரமலம் என்கிற ஜோதிஷ புஸ்தகத் தில் காணலாம். ஆக்பர் சக்கரவர்த்தி காலத்தில் டெல்லி யில் நடந்த ஒரு ஸதஸ்ஸில், அக் காலத்தில் பிரஸித்தி பெற்றிருந்த ஸம்ராட் ஜகன்ஞத வித்துவானேத் துருக்க கணித பண்டிதர்கள் வாதத்தில் வென்று அவமானப் படுத்தினர் என்றும், மேற்படி பண்டிதர் ஒரு வருஷம் தவணே கேட்டுக் கொண்டு அரேபியாவுக்குப் போய் அவ் விடத்திலிருந்த அரபிப்பண்டிதர்களிடத்தில் கணித சாஸ்திர நுட்பங்களேக் நன்ருகக் கற்று வந்து அரபி பாஷை யிலிருக்கிற மிதஸ்தி என்கிற கணித புஸ்தகத்தை ஸம்ஸ்கிருத பாஷையில் மொழிபெயர்த்து ஆக்பர் ஸதஸ்ஸுக்கு வந்து தோற்ற ஸபா பண்டிதர்களிடத்தில் வாதஞ் செய்து வெற்றி பெற்ருர் என்றும் சரித்திரம் உண்டு. அந்தப் புஸ்தகத்தை நான் பரோடா புத்தகசாலேயில் உத்தியோகம் செய்து வருகையில் புஸ்தக ஸம்பாதன யாத்திரையில் கண்டேன்; சில பிரதிகள், ஸம்ராட் ஜகன்ஞதன் வம் சத்தாரிட மிருந்து ஜயப்பூரில் ஸம்பாதித்துப் பிரதி செய்து வைக்கப் பட்டுள்ளன. அந்த பண்டிதரும் அவர் தோழரான நயநசுகோபாத்தியாயரும் கணிதப் படிப்புக் காக மணல் வழியிற் சென்றதை வர்ணித்திருக்கிருர்கள். அரபி தேசத்தார் முகமதியராகையிஞல் அவர் கள் சாந்திரமான கால நிர்ணயம் செய்தவர்கள். நாள்

தோறும் கணித சாஸ்திரத்தை ஆ ரா ய் ச் சி செய்து அப்போதைக்கப்போது நடக்கிற கிரகசார வித்தியாஸங் களைக் கு றி ப் பி ட் டு வைப்பது வழக்கம். நம் நாட்டில் சிரௌதாசாரம் நடை பெற்று வந்த காலங்களில் முன்னோர் நக்ஷத்திரசாரங்களைக் கவனித்து அதற்குத்தகுந்த படி யாகாதிகளைச் செய்து வந்தார்கள்.

ஜோதிடத்தில் வரப்போகிற விஷயத்தை தெரிவிக் கிற பல நூல் பெருகிய பொழுது கணித சாஸ்திரத்து ஆராய்ச்சிக்குறைவு வந்தது. ஆகையால் ஜகந்நாத வித் துவானுக்குக் கணித சா ஸ் தி ர த் தி ல் கொஞ்சம் ஞானக்குறைவு நேர்ந்தது; அதனால் ஆக்பர் ஸபையில் முதலில் அவமானம் ஏற்பட்டது. ஜரூஸலத்திலிருந்து வரும்பொழுது மணல் காட்டை சுமார் 70 மைல் கடக்க வேண்டும். மணல் காட்டில் அனேகமாகச் சுழல் காற்று அடிப்பதுண்டு. ரயில் ரஸ்தாவை மணல் அடிக்கடி மூடி விடும். மணலை ரயில் ரஸ்தாவிலிருந்து விலக்குவதுதான் கூலியாட்கள் வேலையாகும். போர்டு ஸேட் நகரம் ஸூயெஸ் கனல் தென்கரை மேல் ஓரத்திலிருக்கிறது. இந்த வாய்க்கால் நூறு மைல் உள்ளது; இ தை க் கடக்க ஸ்டீமர்களுக்கு 10 அல்லது 12 மணி நேரமாகும். பிறகு ரெட் ஸீ (Red sea) என்ற பெயர் பூண்ட கடலை மூன்று தினங்களில் கடந்து ஏடன் வழியாக மூன்று நாளில் அரு ணோதய காலத்தில் பம்பாய் நகரம் வந்து சேர்ந்தேன்.

இவ்விதமாக மூன்ருவதென்று முன் சொல்லப்பட்ட தேவர்கள் வாஸஸ்தானமும் ஸூர்யன் பிரதக்ஷிணம்

செய்து வருவதுமான மேருயாத்திரையைச் சில வருஷங்களுக்கு முன் ஒருவரும் செய்யமுடியாமலிருந்தது. இந்த மேருவைக்காணத் தத்வ சாஸ்திரிகள் பலர் முயன்று தம்மையே பலி கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது மேரு யாத்திரையானது பூப்பிரஸ்தார கைலாஸப் பிரஸ்தார யாத்திரைகளைவிட மிக எளிதாக இருக்கிறது. உத்தராயணத்தில் உதயாஸ்தமனமில்லாத சூரியனைத் தரிசிக்க மேமீ 15உ முதல் ஆகஸ்ட்மீ 15உ வரையில் போகலாம். நம் பூர்விகர் செய்த சதராத்திரக்கிருது முதலான ஸ்தலங்களைத் தர்சிக்க டிஸம்பர்மீ முதல் மார்ச்சுமீ வரையில் யாத்திரை செய்யலாம். செலவு, நேரே மேருதர்சனத்துக்கு மாத்திரம் ரூ. 1,500 ஆகும். ஐரோப்பாக் கண்டத்திலிருக்கிற வித்தியாசாலைகளையும் சில்ப வேலைகளையும் விசித்திரமான பூப்பிரதேசங்களையும் ஈசுவரனுடைய அம்சமென்று கருதிப் பார்க்க விரும்புவதானால் ரூ. 1,000 அதிகமாகும். நல்ல வேதம் சிரௌதம் படித்த வித்துவானாக இருந்து மேலைத் தேசங்களிலிருக்கிற வித்யாசாலை மாணவர்களுக்கு உபந்யாஸம் செய்கிறவனாக இருந்தால் யாத்திரைச்செலவு முழுதும் உபந்நியாஸ டிக்கட்டிலிருந்து கிடைக்கும் பணத்தால் நடத்தலாம். விரத யாத்திரை செய்கிறவர்கள் உபந்நியாஸத்திற்குத் தக்ஷிணை வாங்கமாட்டார்கள். அப்படியே பாதாள லோகமென்கிற அமெரிக்காவையும் யாத்திரை செய்து திரும்பவும் ஜப்பான் வழியாக நம் நாடுவர ரூ. 3,500 செலவாகும். மகாமேரு யாத்திரைக்கு இரண்டு மாதகாலமாகும். பூப்பிரஸ்தாரத்திற்கு மூன்று மாதமாகும். கைலாஸப் பிரஸ்தார யாத்திரைக்கு இரண்டு மாத

காலமாகும். ஆனல் இந்த கைலாஸப் பிரஸ்தார யாத்தி ரைக்குச் சிரமம் அதிகம் ; ஏனென்றால் ஹரித்வாரம் வரை யில் ரயில் ; அப்புறம் 150 மைலில் பதரிகாச்சிரமம் அடி வரை ஆகாச விமானத்தில் போகலாம். பிறகு கால் நடையாகக் கைலாஸப் பிரதக்ஷிணம் செய்யவேண்டும். இரண்டு வருஷங்களுக்கு முன் பக்த சிரோமணியாகவும் ராஜ ரிஷியாகவுமிருக்கும் கனம் மைசூர் மகாராஜா அவர் கள் கைலாஸப் பிரஸ்தார யாத்திரையை விரதத்துடன் நடத்தினர்கள் ; அந்த யாத்திரா ரிபோர்ட்டும் ஒரு சிறு புஸ் தகமாக அச்சிடப்பட்டிருக்கிறது. ஹிமாலயாப் பிரதேசம் முழுதும் நன்ருக ஸர்வே செய்யப்பட்டு அங்கங்கே வஸிக்கக்கூடிய இடங்களில் கிராமம் கிராமமாகப் பலர் வசிக்கிருர்கள். நடக்கக் காலடி ரஸ்தாவும் ஹிமாலயத்தி லுண்டு. அதில் வடகிழக்கு முழுவதும் கிம்புருஷகண்ட மென்கிற திபேத்ப்ரதேசமாகும். அவ்விடத்தில் ஸம்ஸ்கிருத புஸ்தகங்கள் மிகுதியுமுண்டு. மேல் பாகம் காஷ்மீர் தேசம். அவ்விடத்தில் வெகு வைதிக புஸ்தகங்களிருக்கின்றன. மத்திய ஹிமாலயாவில் பதரீ கேதாரமும், பதரீநாராயணமுமிருக்கின்றன. அவற் றிற்கு அடுத்த கீழ்ப்பக்கத்தில் மானசஸரஸ் இருக்கிறது. ஹிமாலயாவிலிருந்து கால் நடையாக வடக்கே கோபி டேஸர்டு என்று சொல்லுகிற ச்வேதத்வீபத்திற்கு யாத்திரை செய்யலாம். ச்வேதத்வீபத்தைக்குறித்து மகா பாரதம் சாந்தி பர்வக்கடைசியில் பார்க்க. பிறகு அதற்கு வடபக்க மாக ருஷ்யாவிலிருந்து நேரே ஒரு ரயில் கிழக்காகச் சைனதேசத்துக்குப் போகிறது. ஹிமாலயா

வைப் பிரதக்ஷிணம் செய்ய ஒருமுறையுண்டு; அதை முறைப்படி நடத்துபவர் மகாமேரு போய்ப் பிறகு ருஷ்யா (Russia) மூலமாக ரயிலில் ஏறி ஹிமாலயாவுக்கு வடக்கே கூடிப்போகிற ச்வேதத்தீவு தரிசனத்தையும் செய்துகொண்டு சைனாவுக்கு வந்து பிறகு தெற்கில் சிங்கப்பூர் வழியாக இந்தியாவுக்கு வரலாம். நான் முதலில் அமேரிக்கா வழியாகச் பூப்பிரதக்ஷிணம் செய்வதாக எண்ணினேன். அமேரிக்கா புத்தகசாலைகளில் ஏட்டுப் பிரதிகள் சோதிக்க இல்லை என்று தெரிந்தவுடன், ஹிமாலயாப் பிரதக்ஷிணம் செய்யலாம் என்று நினைத்தேன். பிறகு மத்திய ஆசியாக் கண்டத்துக்கு வரும்படி நேர்ந்தது. அதனால் ஹிமாலயாப் பிரதக்ஷிணம் செய்யும் பாக்கியங்கிடைக்கவில்லை. என் ஸங்கல்பம் பழைய ஏட்டுச் சுவடிகளைக் காப்பாற்ற வேண்டுமென்பதே. அதனுடன் தீர்த்த யாத்திரையும் க்ஷேத்திர யாத்திரையும் நடத்த விரும்பினேன். ஏட்டுப் பிரதிகள் கிடைக்காமல் யாத்திரை செய்வது விரத பங்கமாகும். ஆறுவது நூற்றாண்டில் சைனாதேசத்து பௌத்த பக்தர் ஒருவர் கால் நடையாகச் சைனாவிலிருந்து ஹிமாலயாவுக்கு வடக்குப் பாகமாக மேற்கே வந்து ஆப்கானிஸ்தான் வழியாகக் காந்தார தேசம் (காண்டஹார்) சேர்ந்து பிறகு வட இந்தியாவில் தக்ஷசிலா, நாளந்தா முதலானவற்றின் வித்தியாசாலையில் படித்துத் தென் இந்தியா சிலோன் மார்க்கமாய்ச் சைனா தேசம் போய்ச் சேர்ந்தார். அவர் சரித்திரக்கார ராகையால் சீன பாஷையில் தான் பார்த்த ஒவ்வொரு தேசம் பட்டணம் கிராமங்களுடைய அளவுகளை மிகத்துல்லியமாக எழுதிவைத்திருக்கிறார்;அதனை

இப்பொழுது இங்கிலீஷில் மொழி பெயர்த்து அச்சிட்டிருப்பதா லறியலாம். அந்தப் புஸ்தகத்தைப் படித்தால் அக்காலத்தில் அவர் க்ஷேத்திர யாத்திரை தீர்த்த யாத்திரையில் எவ்வளவு கஷ்டப் பட்டார் என்பது விளங்கும். அந்தச் சரித்திரத்தில் அவர் கலிங்க பட்டணத்திலிருந்து கப்பல் ஏறிக் கீழ்கடலிற் போகும்பொழுது அந்தக் கப்பலில் பல ஆரியர்கள் இருந்தார்களென்றும், இடையே புயல் காற்று உண்டாயிற்றென்றும், அதனல் கப்பல் தத்தளிக்குங் காலத்தில் அதில் இருந்த ஆரியர்கள் கடல் தெய்வத்தைச் சாந்தப்படுத்த வருணன் முதலான தேவதைகளைக் குறித்த வைதிக ஸ்தோத்திரங்கள் முதலான வழிபாடுகள் செய்தும் கடல் சாந்தி யடையாமலிருந்ததைக் கண்டு அநாரியன் ஒருவன் இந்தக்கப்பலில் இருப்பதே நம் ஸ்துதிக்கு உடனே பலன் வராத காரணமென்று அறிந்து அந்தச் சீனனைக் கடலில் தள்ளத் தீர்மானித்தார்களென்றும் எழுதப்பட்டிருக்கிறது. யாத்திரா விரதம் மாத்திரம் கொள்ளவேண்டும்; இம் மூன்று யாத்திரையும் ஒரு வருஷத்திற்குள் நடத்தலாம். தனித்தனி யாத்திரைகளுக்கு இரண்டு மூன்று மாதங்கள் போதும்.

இந்த யாத்திரா வாசகத் தொடக்கத்திலேயே நம் முன்னோரான ஆரியர்கள் ஆறுமாத காலம் யாத்திரை செய்து ஸநாதன தர்மத்தைப் பரப்பி நம் ரிஷிகளின் அநுக்கிரகத்தைப் பெற்றார்களென்று கூறி யிருக்கிறேன். அந்த வழக்கம் காலக்கிரமத்தில் அழிந்து விட்டது. மனு ரிஷியும் (இரண்டாம் அத்தியாயம்) ஜகத்தில் வஸிக்கிற எல்லோருக்கும் ஆரியனே உபாத்தியாயனுக இருக்க

வேண்டுமென்று வற்புறுத்தி யிருக்கிறார். உபதேசத் தொழிலை நாம் விட்டபடியினால் இப்பொழுதிருக்கிற பரத கண்டம் துர்த்தசையை அடைந்து பிறருக்கு அடிமையா யிற்றென்று பெரியோர் கருதுவர். இந்த அடிமைத்தன்மை யைக் கடக்கும் வழி எப்படி? நம் ரிஷிகளுடைய ரத்தம் இன்னமும் நம் சரீரத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது; படிப் பிலும் வித்தையிலும் குறைவு இல்லை. முயற்சியும் உப தேசக்குறைவுமே உள்ளன; அவற்றை நிவிர்த்திக்க வேண்டி யது அவசியமே. அதற்காக வேத சாஸ்திரங்கள் படித்த வர்களும் முதுமையுற்றவர்களும் உத்தியோகத்திலிருந்து லௌகிக விஷயங்களைக் கற்றவர்களுமான எல்லோரும் சேர்ந்து ஒரு ஸங்கம் கூட்டி அந்த ஸபை மூலமாகப் படித்த பெரியோர்களை, அசோகராஜன் ஒவ்வொரு திக்குக்களுக்கும் அனுப்பியதுபோலனுப்பி ஸநாதனமான ஆரிய மதத் தைப் பரப்பவேண்டும். நம் வைதிகமதம் ஒன்று ஒழியப் பிறகு தோன்றிய எல்லா மதங்களும் நம்பிக்கையினாலும் உறுதியினாலும் பிறகாரணங்களாலும் பெருகி யுள்ளன. வைதிகமதமோ, உலக புத்தி முழுவதையும் அவரவர் யோசனைக்குத்தகத் திருப்தி செய்து ஈசுவரானுக்கிரகத் திற்கு இடமாக்குவிப்பது. ஆகையால் வைதிக தர்மோப தேசம் செய்கிறவர் பிறமதஸ்தரைப்போல, குயுக்தி விதண்டை முதலான வாதங்களில் செல்ல நேராது; ஸநா தன தர்மம் எல்லாரையும் திருப்தி செய்கிற இயல்புடை யது. தத்வசாஸ்திர ரகஸ்யங்கள் எல்லாவற்றையும் அடக் கிக் கொண்டிருப்பது; ஆகையால் இத்தர்மத்தில் மூட நம்பிக்கையின்றி வேலை செய்யலாம்.

நான் மேருப் பிரதேசத்தில் யாத்திரை செய்த பொழுது நார்வே தேசப் பெண் ஒருவள் என்னுடன் சில தினங்கள் கப்பலில் யாத்திரை செய்தாள். அவ்வம்மை, பெரிய பரீக்ஷைக்குப் போகப்படித்துவருகிறாள்; ஷேக்ஸ் பியர் நாடகங்களுள் ஹாம்லெட்டில் "துர்மரணம் நலமா, அன்றா" என்ற வாதத்திற்குரிய சிறந்த பகுதியொன்றை உருப்போட்டுக் கொண்டிருந்தாள். உடனே அவ்வம்மையை நோக்கி நான் "இந்தத் தொடருக்கு, கீழ்நாட்டுப் பெரியோரு டைய கருத்தை யொட்டிப் பொருள் சொல்லுகிறேன்" என்று ராமாயணத்தில் 'ஸீதா தேவீ அசோகவனத்தில் அதிக சோகத்தினால் ஏன் சரீரத்தியாகம் செய்து கொள்ளக் கூடாது' என்ற கேள்விக்கு வால்மீகி முனிவர் கூறும் கருத்தையும், ஷேக்ஸ்பியர் கவியின் கருத்தையும் அவ்விரண்டிற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை யும் எடுத்துக்காட்டினேன். அந்த விதுஷி கீழ்நாட்டு முனிவரின் புத்தியைப் புகழலானாள். அப்படியே ஐரோப் பிய வித்யாசாலைப் பண்டிதர் பலருடன் சம்பாஷிக் கும்பொழுது அவர்கள் யுக்திக்குமேல் வேதத்திலிருந்து சிறந்த யுக்திகளை எடுத்துக் காட்டுவேன்; அவர்கள் உடனே கீழ்நாட்டுக்கு நமஸ்காரம் சொல்லி வாய் மூடுவர். நம் ஆரியர் நாகரிகம் பல ஆண்டுக்கணக்காக வளர்ந்து வந்திருப் பது; அதின் சரித்திரம் வேதத்திலும், வேதாங்கங்களிலும் அடங்கியிருக்கிறது. இவைகளை நன்றாகப் படித்தவருக்கு உலக சஞ்சாரம் செய்கிறபொழுதும் வித்வான்களுடன் சம்பர்ஷிக்கும் பொழுதும் சிறிதும் அஞ்ச நேராது. ஆகை யால் நம் நாட்டறிஞர் உபதேசம் செய்ய நான்கு திக்குக்

களிலும் சென்று தர்மத்தைப் பரப்புவது அவசியமே. இதனால் இந்நாட்டாருக்கு 'வித்தியா கௌரவம்' உண்டாகும். கௌடிலியன் அர்த்த சாஸ்திரத்திற் கூறியபடி காலத்திற்குத்தக இசைந்து வியாபாரம் கைத்தொழில் முதலானவைகளை நன்றாகக் கற்று அயல் தேசங்களுக்குப் போய் அவற்றையும் பரப்பினால் 'ஸம்பத் கௌரவ'மும் உண்டாகும். எந்த இடத்தில் ஸரஸ்வதியும் லக்ஷிமியும் சேர்ந்து வஸிக்கிறார்களோ அவ்விடத்தில் பார்வதி (ஈசுவரன் கிருபை) உண்டென்று பழைய ரிஷிவாக்கிய மொன்று இருக்கிறது. யாத்திரை செய்யும்பொழுது வேற்றுமொழி வழங்கும் நாடுகள் செல்லுகிறோமே என்று கவலைப்பட வேண்டாம்; இங்கிலீஷ்பாஷை ஒன்று தெரிந்திருந்தாற் போதும். உலக யாத்திரை சிரமமில்லாமல் நடைபெறும். இடலி, பிரான்ஸ், ஜர்மனி முதலான தேசங்களில் பண்டிதர்களும், வியாபாரிகளும் ஹோட்டல்காரர்களும் இங்கிலீஷ்பாஷை பேசினால் அறிவார்கள். ஸம்ஸ்கிருதம் அறிவையும் தெய்வபக்தியையும் மோக்ஷத்தையும் கொடுக்கும். ஆகையால் இந்த இரண்டுபாஷைகளையும் நன்கு கற்றவர்களுக்கு உலகமெங்கும் செல்வாக்குண்டு. மனு, "உலகம் முழுதும் படித்தவர்களுக்கும் உபதேசம் செய்கிறவருக்குமாகச் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது; பிறர் இவர்களுடைய தயையினால் வாழ்ந்து வருகிறார்கள்" என்றும், "போரில் சைனியத்தை நடத்தி ராஜ்யத்தைக் காப்பாற்றும் தொழிலை, நான்கு வேதங்களையும் அறிந்தவன் கைக்கொள்ள வேண்டும்" என்றுங் கூறியிருக்கிறார். ஆகையால் மரண காலம் வரையில்

தேசாடனம் செய்யாமல் வீட்டிற்குள் வாழ்கிறவன் ஆரியன் ஆகான். நம் பூர்விகர் நல்ல படிப்புடன் உயர்ந்த பதவியை யடைந்து கிருகஸ்த தர்மத்தை அனுஷ்டித்து, பிறகு வானப் பிரஸ்தாச்சிரமத்தைக் கைக்கொண்டு உலகமெங்கும் யாத் திரை செய்து ஸநாதன தர்மத்தைப் பரப்பி நூறு வருஷம் ஜீவித்து வந்தார்கள். நம் பரதக் கண்டம் அவர் களால் உயர்வை யடைந்தது.

அநுபந்தம் 1.

பிராணுயாமம்: இதைக் குறித்த ரகஸியம் ஒன்றும் இல்லை; இந்துக்கள் எந்த வேலையைத் தொடங்கினுலும் 'ஆசம்மிய', 'பிராணுணுயம்மிய' என்று சொல்லியே யாகவேண்டும். இதைச் சிறு வயது முதல் மரணம் வரை ஒவ்வொருவனும் அநுஷ்டிப்பது வழக்கம். இது உடல் நலத்தை உண்டாக்குகிறது; இதன் பலன், நோயணுகாது. வைத்தியரைத் தேட வேண்டாம். ரத்த புஷ்டியுண்டாக்கும். இதன் குணத்தைக் குறித்து அடிக்கடி பத்திரிகைகளிலும் துண்டு பிரசுரங்களிலும் தத்வ சாஸ்திரிகளும் உபாத்தியாயர்களும் எழுதி வருகிறுர்கள். இதை அநுஷ்டிக்க வேண்டிய அவசியத்தைக் குறித்து நானும் சில புஸ்தகங்களில் எழுதியிருக்கிறேன். வகுப்புக்களிலேயும் கற்பித்திருக்கிறேன்; நோய் வாய்ப்பட்டவர்க்கு உடனே பலன் தெரியும். உடல் நலம் உறுதிப்படும்.

இதை அநுஷ்டிக்கும் முறை:—ஒவ்வொருவனும் இரவு 9 மணியிலிருந்து 10 மணிக்குள் நித்திரைக்குப் போக வேண்டும். அருணேதய காலத்தில் எழுந்திருக்கப் பழகுதல் நலம். தந்ததாவனம் முதலானவை செய்த பிறகு அரை லோடா அளவு தண்ணீரைச் சாப்பிடலாம். மலச் சிக்கல் உள்ளவர்கள் ஒரு லோடா நீரைக் குடிப்பது நலம். கிழக்கே பார்த்தாவது வடக்கே பார்த்தாவது ஒரு ஆசனத்தின் மேல் உட்காரவேண்டும்.


ஆசனம் கிடையாவிட்டால் மேல் துண்டை மடித்துப் போட்டு நம் கால் பூமியில் படாதபடி உட்கார வேண்டும். பத்மாசனம் முதலானவைகளில் வழக்க மிருந்தால் அந்தப் படிக்கு உட்காரலாம். முதுகு வளைந்திருக்கக் கூடாது. உடனே இரண்டு மூக்குத் துவாரங்களின் வழியாகவோ ஒரு துவாரத்தின் வழியாகவோ, முதலில் மூச்சை வெளியில் விட வேண்டும். விடும்பொழுது சரீரத்திற்குள் இருக்கிற எல்லா விஷவாயுவையும் (கார்பன்) சிரமத்துடன் வெளியாக்கலாம்; உடனே நிதானமாக நல்லகாற்றை உள்ளே யிழுக்கவேண்டும். இதற்கு முயற்சியே வேண்டாம். சுவாசக் குழாய்கள் எவ்வளவு அபேக்ஷிக்கிறதோ அவ்வளவு வாயு உள்ளே போகும்; இந்தக் காற்றிற்கு ஆக்ஸிஜன் என்று பெயர். இவ்விதம் சிரமத்துடன் வெளியிலேயும் மெள்ள உள்ளேயும் 10 நிமிஷம்வரை அப்பியாசஞ் செய்ய வேண்டும். இதனால் சரீரத்திற்குள்ளிருக்கிற விஷக்காற்று முழுவதும் வெளியில் தள்ளியும் நல்ல காற்றை உள்ளே யேற்றவும் சரீரத்திலிருக்கிற ரக்தம் முழுவதும் சுத்தி செய்யவும் படும். இந்த அப்பியாசத்தை மாத்திரம் நம் பூர்விகர்களில் சிலர் காலையில் ஒரு மணி நேரம்வரை செய்து வந்ததாகத் தெரிகிறது. இப்பொழுதுள்ள தத்வ சாஸ்திரிகளில் அனேகர் இந்த அப்பியாசம் மாத்திரமே போதுமென்று கருதுகிறார்கள். இதன் பலன் இரவிலே தெரியும். இது நம் ஆரியர்களுடைய சித்தாந்தம். உடனே பலன் கிடைப்பதை அனுஷ்டிப்பது அவர்கள் வழக்கம். பசியுள்ளவன் புஜித்தவுடன் மகிழ்ச்சியடைவதையுவமையாக அடிக்கடி கூறியிருக்கிறார்கள். முயற்சி யில்லாத

சோம்பேறிகளுக்குக் காலாந்திரத்தில் சுகம் கூறப்பட்டிருக்கிறது. ஆரியர்களுக்கு இகத்தில் உடனே சுகம்; அப்படியே பரத்திலும் சுகம். ஆகையால் புத்தி முக்தியென்கிற இரண்டையும் கொடுப்பது ஆரிய சாஸ்திர மென்று எல்லோரும் புகழ்ந்திருக்கிறார்கள்.

இரண்டாவது அப்பியாசமாவது; இவ்விதம் பிராண வாயுவை வெளியேயும் உள்ளேயும் செல்லப் பழகிப் பிறகு வாயுவை உள்ளே இழுத்தவுடன் சிறிது நேரம் உள்ளே மூலாதார முதல் சிரசுவரையுள்ள இஷ்டமான இடத்தில் நிறுத்தலாம். இதற்குக் கும்பகம் என்று பெயர். எவ்வளவு நேரம் நிறுத்த முடியுமோ அவ்வளவு நேரம் வாயுவை நிறுத்தக் கூடும். இதிலும் சிரமப்படக்கூடாது. இதின் பலன் அந்தந்த இடங்களில் ரத்த ஸ்தானங்கள் ஆக்ஸிஜனால் சுத்தி செய்யப்படுகிறது; அதாவது கண்ணில் கொஞ்சம் பலக்குறைவு இருந்தால் சுமார் பத்து கும்பகஞ் செய்தால் அது நிவிருத்தியாகும். அப்படியே இருதயத்தில் கும்பகஞ் செய்தால் மார்படைப்பு நிவிருத்தியாகும். இவைகள் கைகண்ட பலனாகும். இந்த அப்பியாசத்தை பிராமணச் சிறுவர் முதலியோருக்குப் பூணூல் போடுங்கால் இளமையில் ஓம்பூ: என்று தொடங்குகிற மந்திரத்தினால் சொல்லி வைக்கிறார்கள். அதாவது ஓம்பூ: என்பதை மனத்தில் ஒரு தரம் நினைத்துக் கொண்டு உள்ளேயும் வெளியிலேயும் விட வேண்டும். மூன்று தரம் சொல்லிக் கொண்டு உள்ளே நிறுத்த வேண்டும். ஓம் பூ: என்கிற மந்திரம் ஐந்து தரமாகிறது. அப்படி 16 தடவை செய்ய வேண்டும். இதற்குச் சுமார் அரைமணி நேரம் ஆகலாம். இப்பொழுது,

சாஸ்திரப்படியுள்ள வழக்கம் போய் மூக்கு நுனியை விரல்களால் பிடித்துக் கொண்டு பத்துத் தடவை ஜம்பு மந்திரத்தை வாயினால் சொல்லுகிறார்கள். அதில் தேகத்திற்கு ஒரு ஆரோக்கியமும் உண்டாவதில்லை. ஆகையால் ஆரோக்கிய சாஸ்திரப்படி முதலில் சிரமத்துடன் வாயுவை வெளியில் விட்டும் உடனே உள்ளே நிதானமாக இழுத்தும் இப்படி 10 நிமிஷம்வரை அப்பியாசஞ் செய்து பிறகு 5-முதல் 10-நிமிஷம்வரை கும்பகம் செய்தால் உடனே ரத்த சுத்தியினால் சரீரத்திற்கு ஆரோக்கியமுண்டாகிறது. இந்த அப்பியாசத்தைக் குறித்து பகவத்கீதை நான்காவது அத்தியாயத்திலும் (அபானே ஜுஹ்வதி பிராணம்), சூத சம்ஹிதை இரண்டாவது கண்டத்தில் பிராணாயாமாத்யாயத்திலும் தைத்திரீயாரணியகத்தில் வயிற்று (அன்னாச) வியாதி நிவிருத்திக்காக மூன்றாவது ஒரு அப்பியாசம் (பஸ்ராகர்மநிருதேவம் என்கிற வாக்கியத்தினால்) சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு பஸ்ராவென்று பெயர். இதைத் தமிழகத்தார் அவசியம் அனுஷ்டிக்க வேண்டும். இது வயிற்றைச் சரிப்படுத்துகிறது. அதாவது முன் சொன்ன வாயுவை வெளியே விடுகிறதையும் உள்ளே இழுக்கிறதையும் இப்படி 10 நிமிஷம் அனுஷ்டித்த பிறகு உள்ளே இழுத்த வாயுவை மூலாதாரத்தில் எதாவது ஒரு இடத்தில் நிறுத்திய பிறகு, துருத்தி ஊதுவதுபோல வயிற்றுப்பாகத்தை முன்னும் பின்னும் ஐந்து முதல் பத்து நிமிஷம்வரை அசைக்க வேண்டும். மேல் மார்பிலும் கொப்பூழுக்குக் கீழேயும் அசைவு காணக்கூடாது. வயிறு மட்டில் துருத்திபோலப் பருத்து அசைய வேண்டும். இந்த அப்பியாசமானது 30-முதல் 35 அடி வரையுள்ள சிறு குடலைச் சுத்தப் படுத்துகிறது.

இதனால் ஜீர்ணசக்தி உண்டாகி மலச்சிக்கல் நிவிருத்தியாகும். இது பிரத்தியக்ஷ பலனாகும். இந்த அப்பியாசத்தை வெறும் வயிற்றில் செய்ய வேண்டும். ஆதலால் விடியற்காலமே இதற்குத் தகுந்த சமயமாகும். மாலையில் சோறு வயிற்றில் கொஞ்சமிருக்குமாகையால் அப்பொழுது பஸ்ரா அப்பியாஸஞ் செய்யக்கூடாது. முதலில் பஸ்ரா செய்யும் பொழுது ஜீர்ணசக்தி குறைவுள்ள மனிதர்களுக்கு வயிறு நேரே முன்னும் பின்னும் அசையாது. மேல் ஏப்பமும் அபானவாயுப்பறைவும் உண்டாகும். இதனால் குடல் பலஹீனமடைந்திருப்பதை அறியலாம். இந்த அப்பியாசம் இரண்டு மூன்று தினங்களில் சரியாக வந்துவிடும். இதற்கும் குரு வேண்டுவதில்லை. வயிற்றை முன்னும் பின்னும் நன்றாக அசைக்க வேண்டும். இதை எப்படி தப்பாக செய்தாலும் சரீரத்திற்குக் கெடுதல் இல்லை. அப்படியே முன்சொன்ன இரண்டு விதப் பிராணாயாமமும் வந்தால் நல்லது. கெடுதல் உண்டாகாது. ஆகையால் யாவரும் நிர்ப்பயமாக இந்த மூன்று அப்பியாசங்களை வேறுமனிதன் உதவியில்லாமல் அனுஷ்டிக்கலாம். மொத்தம் 30 அல்லது 35 நிமிஷமாகும். மகளிரும் அனுஷ்டிப்பது நலம். அவர்கள் கர்ப்பத்துடன் இருந்தால் பஸ்ராமாத்திரம் பிரசவமாகும் வரை செய்யக்கூடாது. பிராணயாமத்தினால் கர்ப்பம் நன்றாக வளர்ந்து சுகப்பிரசவம் உண்டாகும். இவைகளெல்லாம் தத்வ சாஸ்திர பரிசோதனையாலும் பயிற்சியாலுமே தெரிவிக்கப்படுவன. பஸ்ராவைப் பயின்றவுடன் வயிறானது நல்ல சத்துள்ள ஆகாரத்தைத் தேடும். உப்புப் புளி முதலான ராஜஸ ஆகாரத்தைக் குறைக்கச்சொல்



1
2
3
8
4
7
9
5
10
6
11
12

லும். கஞ்சி வடியாத அன்னம், பருப்பு, ஆடையுடன் கூடிய தயிர், பால், வாழைப்பழம், ஆகியவற்ருேடு கறிகாய் களைச் சாப்பிடச் சொல்லும். இப்படிச் சாப்பிட ஆரம்பித் தால் இரண்டு வேளை ஆகாரம் ஒருவனுக்குப் போது மானது. மலச்சிக்கலும் வராது. மலத்தில் துர்கந்தமு மிராது. தினம் இரண்டுவேளை மலம் சிரமமில்லாமல் வெளியாகும். சில காலங்களுக்குப் பிறகு பச்சைக் கறிகாய் களையும் பழ வர்க்கங்களையும் அதிகம் உபயோகப் படுத்தத் தொடங்கலாம்; அப்பொழுது சீதோஷ்ண துன்பங்களை ஒருவன் அடையாமலிருக்கலாம். விலங்குகளை யொப்பப் பச்சையைத் தின்கிற சரீரமானது ரத்தபுஷ்டி அதிகமாகித் தொத்து நோய்களை அடையாமல் ஆனந்தமாக வாழத்தக்க தாகும். இம்மூன்று அப்பியாசங்களைச் செய்தவுடன் கால் மணி நேரமாவது ஈசுவரத்தியானஞ்செய்து வந்தால் மனே வியாதியும் நிவிருத்தியாகும். நூருண்டு சந்தோஷத்துடன் வாழ்ந்து இன்பத்தையடைலாம். ஆரியர் முன் நடத்தினதை சாஸ்திரங்களில் இப்படித்தான் எழுதிவைத்துப் போயிருக் கிருர்கள். இது அனுஷ்டானத்தில் கைகண்ட பலம். வியாதி யிருந்தால் உடனே அதன் நிவிருத்தி; வியாதியில்லாதவர் களுக்குச் சரீராரோக்கியம்.

அன்னக் குழாயின் படம்.

1. வாயில் உணவைப் போட்டவுடன் பற்களினுல் சவைக்கப்படும் பொழுது உள் கன்னத்திலிருந்து சுபாவ மாக, 'சலைவா' என்ற பெயருள்ள ஒரு திரவபதார்த்தம் உண்டாகிற இடம். இந்தச் சலைவா சேர்ந்தவுடன் சவைத்த உணவு ஜீர்ணமாகி வயிற்றிற்குள் போகிறது. இதைக்

குறித்து, பகவத் கீதை 15வது அத்தியாயத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவான் சலைவாவினால் ஆகாரத்தைத் தான் சமையல் செய்கிறதாகச் சொல்லியிருக்கிறார்.

2. ஆகாரக் குழல்.

3. உணவு சலைவாவினுடன் வயிற்றிற் சேர்ந்து வந்தவுடன் சுபாவமாக உண்டாகி வந்த 'பாங்கேரியா' என்றும், 'பையில்' என்றும் கூறப்பட்ட இரண்டு திரவபதார்த்தத்துடன் சேர்க்கப்பட்டு நன்றாகக் கடையப்படும் இடம். இதை 'இரண்டாவது சமையல் செய்கிறேன்' என்று கிருஷ்ண பகவான் சொல்லுகிறார்.

4. சிறு வயிறு: சுமார் 30 முதல் 35 அடி நீளம் உள்ளது, சிறு வயிறென்று சொல்லப்படுகிற குடல் ஆகும். இவ்விடத்தில் உணவு முழுதும் ஜீர்ணமாகி ரத்தமாக மாற்றப்படுகிறது. மூன்றாவது பாகஞ் செய்கிற இடம் என்று இதைக் கீதா கூறிற்று. நான்காவது பாகஞ் செய்கிறேன் என்று சொன்ன கிருஷ்ண பகவான் கருத்தாவது, ரத்தம் முதலானவைகளாக மாறின உணவை இந்திரியக் கருவிகள் மனமுதலானவைகளுடன் சேர்ப்பிப்பதாகும். இது மனிதனால் செய்யக்கூடிய காரியமன்று; ஆகையால் ஈசன் அவற்றைத் தன் காரியமென்று கீதையில் கூறினார். உணவு நான்கு வகையாகப் பரிணமிப்பது, மனித சரீரத்தில் மாத்திர மன்று; ஸ்தாவர ஜங்கம சரீரங்களிலும் இப்படியே ஈசன் ஜீர்ணத்தை நடத்துகிறான்.

5. உணவில் உள்ள சத்தைப் பிரித்தபின் பாக்கியை மலமாக வெளிப்படுத்துகிற ஒரு வாசல்.

6. இதின் கீழ்ப் புழுமாதிரி ஒரு சதை தொங்குகிறது; இதற்கு 'அபெண்டிஸ்' என்று பெயர்; இதை ஈசன் எதற்காகச் சிருஷ்டித்தானென்று இதுவரை ஒருவராலும்சொல்ல முடியவில்லை. ஆனால் அதில் கொஞ்சம் வீக்கம் முதலானவைகள் உண்டானால் உடனே மனிதனுக்கு அபாயம் நேரிடும். இந்தக் கஷ்டத்தை மகாத்மா காந்தி திருமேனியும் ஒருகாலத்தில் அடைந்து ஆபரேஷன் ஆனதும் எல்லோருக்கும் தெரியும்.

7. வெளியில் தள்ளின மலத்தை மேலே ஒரு அடி கொண்டு போகிற குழாய்.

8. அந்தக் குழாய் வலப் பக்கத்திலிருந்து இடப் பக்கத்திற்குத் தாண்டுகிறது.

9. உடனே கீழேயிறங்குகிறது.

10. மலம் தங்குகிற இடம்.

11. மலம் வெளியே கிளம்புகிற குழாய்.

12. அபானம் வெளித்தள்ளுகிற குழாய் முடிவு. இதில் 1 முதல் 4 வரைக்குமுள்ள குழாய் நாலு பங்கு நீளம். ஜீர்ணஞ் செய்கிற இடம். 5 முதல் 12 வரை ஒரு பங்கு அதாவது சுமார் 5 அல்லது 6 அடிகள் நீளமிருக்கும். இது மலத்தை வெளியாக்குமிடம்; இவ்விடம் தான் மலச்சிக்கல் முதலான சகல வியாதிகளும் சிருஷ்டிக்கப்படுகிற இடம். இது சுத்தியாயிருந்தால் எமனும் ஒருவனை அண்ட அஞ்சுவான்.

ஜய மஹாதேவ

அநுபந்தம் II

திலகர் ஆர்க்டிக் ஹோம் என்ற புஸ்தகத்திலிருந்து பக்கங்கள் பார்க்கவும். உத்தராயணம் ஆரம்பிக்கும் பொழுது சூரிய பகவான் வடக்கே புறப்படுகிற காலத்தில் நேர் கிழக்கே கிருத்திகை நக்ஷத்திரம் இருந்ததாகச் சதபதப்பிராமணத்தில் II-I. 2. 3. கூறப்பட்டிருக்கிறது. அந்தக் கால கணித சாஸ்திரப் பிரகாரம் சுமார் 7,000 வருஷத்திற்குமுன் இருந்திருக்க வேண்டும். (பக்கம் 44.)

இப்பொழுது மேருநுனியில் 194 தினங்கள் முழுதும் சூரியனும், 76 ராத்திரி முழுதும், 47 பூரா உஷஸும், 48 அருணோதய தேஜஸும் காணப்படுகின்றன. (பக்கம் 48)

ரிக் வேதம் X. 69-4-2. இந்திரன் தன் சக்தியினுல் அச்சில் இரண்டு சக்கிரங்கள் சுற்றுவது போல் பூமியையும் ஆகாசத்தையும் சுற்றுகிறுன். சூரியன் ரதத்தின் சக்கிரங்களைப் போல் தன் கிரணங்களைச் சுற்றுகிறுன்.

(பக்கம் 65.)

ரிக் வேதம் I. 24-10 இந்த நக்ஷத்திரங்கள் (சப்தரிஷிகள்) நேர் மேலே அமைக்கப்பட்டிருக்கின்றன. மேருவில் இவர்கள் தலைக்கு மேலே நேரே காணப்படுவார்கள். (பக்கம் 66.)

ரிக் I. 83. 6. “ஓ அச்விினிகளே, இந்த இருட்டின் முடிவை அடைந்து விட்டோம்.” VII. 76-2 “நீங்கள் தேவ

யானமார்க்கமாக எங்களிடம் வாருங்கள். தேவயானமார்க்கம் எனக்கு காணப்படுகிறது; உஷஸின் கொடி கிழக்கில் தெரிய வருகிறது." (பக்கம். 73.)

ரிக் X. 18. 1. அப்படியே பிதிர்யானம் இருட்டுடன் ஆரம்பமாகிவிட்டது. ஆகையால் ஆரு மாதம் ஒரே பிரகாசத்திற்கு தேவயானமென்றும் மற்ற ஆருமாதமேருவின் இருட்டுக்குப் பிதுர்யாணமென்றும் பெயர். (பக்கம் 74.)

சுமார் 300 தடவைகள் ரிக் வேதத்தில் உஷைக் குறித்து ஏகவசனத்திலும் பகுவசனத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (பக்கம் 81.)

நடு ராத்திரி ஆனது முதல் சூரியன் வருகிறவரை ஆச்வின சாஸ்திர மென்ற ஆயிர கணக்கான மந்திரங்களை ஜபிக்க வேண்டும். நிருக்தம் XII, 1-ஆச்வலாயன சிரௌத சூத்திரம் VI. 5-8. ரிக் VII. 67. 2-3. (பக்கம் 82.)

அப்படி வந்தும் சூரியனுக்குப் பிரகாசமில்லாவிட்டால் ஒருப் பிராயச்சித்தத்தை நடத்த வேண்டும். தைத்திரிய சம்ஹிதை II.1.4 (பக்கம் 83.)

உஷசின் பொருட்டு எழுவிதமாக ஹோமம் செய்யப்பட்டிருக்கிறது. தை. ச. VII. 2. 20. (பக்கம் 84.)

மூன்று விதமாக உஷஸ் ரிக் வேதத்தில் VIII. 41-3. உஷஸ் நிரம்ப மெள்ளவருகிறது. II-15-6. முற்காலத்தில் எப்பொழுதும் உஷஸ் இருந்தது I.113-13. (பக்கம் 85.)

ரிக். VII, 76. 3. 23. உஷஸே, சூரியன் உதிக்குமுன் எவ்வளவோ தினங்கள் நீ ஆண்டிருக்கிறுய். எவ்வளவோ தினங்கள் நீ ஆளப்போகிறுய். (பக்கம் 86.)

இருட்டு தினங்களும் வெளிச்ச தினங்களும் கலந்து வருகின்றன, VI. 9-1. (பக்கம் 91.)

உஷஸே, நீ வந்து வெகு தினங்கள் ஆயிற்றே VII. 76. 3. (பக்கம் 93.)

ரிக். II. 28-9. நான் செய்த பாபங்களை நீ நிவிருத்தி செய்க; ஓ ராஜனே, பிறர் செய்த பிழைக்கு என்னைக் காரணமாக்கவேண்டா, இன்னம் அனேக உஷஸுக்கள் பிரகாசமாக வில்லை. ஓ! வருணா, நாங்கள் அந்த நீண்ட காலங்களில் ஜீவித்திருக்கும்படி செய்யும் (பக்கம் 94.)

உஷஸுகளே I. 92-I. யுத்த வீரர்களின் கூட்டமாகவும், I. 92, 3. வேலை செய்கிற ஸ்திரீகள் மாதிரியும். VI. 64-1 தண்ணீர் அலைகள் மாதிரியும், IV 51-2. யாகத்தில் அமைக்கப்பட்ட தூண்கள் மாதிரியும், VII-79-2. வேஷம் போட்ட மனிதன் மாதிரியும், IV. 51-8. மாட்டுக்கூட்டங்கள் வருகிற மாதிரியும், IV. 51-6. இவ்வளவு பெயர்களும் ஒரே மனதுடன் ஒத்து வேலை செய்கிறார்கள்; VII. 76-5. ஒருவருக்கொருவரில் கலகமும் கிடையாது. பக்கம் 96.

தை. ச. IV. 3-11. 30 உஷச் சகோதரிகள் ஐந்தைந்து கூட்டமாகப் போகிறார்கள். தை. ப்பி. II. 5-6 5. (பக்கம் 98.)

ரிக். III. 61-3 ஓ புதிதாகப் பிறந்த உஷஸே, ஒரே முடிவு வழிக்கு உன் சக்கிரத்தை திருப்பு. (பக்கம் 105.)

ரிக். II. 15-6. X. 73-6. இந்திரன் உஷஸை வச்சிராயுதத்தினால் பிளந்து சூரியனைக் கொண்டுவந்தான். (பக்கம் 110.)

ரிக். II. 27-14. ஓ அதிதி, மித்திர, வருண, நாங்கள் தங்களுக்கு விரோதமாகப் பாபஞ் செய்யாதிருக்கிறோம். பய மில்லாதப் பிரகாசங்கிடைக்கட்டும். நீண்ட இருட்டுகளை தாண்டுவோம். I. 46. 6 ஓ அச்வினிகளே, நாங்கள் இந்த இருட்டுக்காலங்களைத் தாண்டச் சக்தியைக் கொடும். VII. 67-2 அக்கினி யெரிய ஆரம்பித்துவிட்டது. இருட்டு முடிவையும் பார்க்கலானோம். உஷசின் கொடியும் கிழக்கே காணப்படுகிறது. X 124-1 ஓ அக்கினியே, வெகு இருட்டு தினங்களில் எங்கள் கூட இருந்தீர். II. 2. 2. விடாத ராத்திரியில் நிரம்பப் பிரகாசஞ் செய்தீர் X 127-6 கீழ் ராத்திரி சூக்தம் இருட்டின் கரையைத் தாண்ட வேண்டுமென்று ஒரு பாட்டு. (பக்கம் 126.)

அதர்வவேதம் XIX. 47. 2. இன்னம் இருட்டின் கரையைக் காண வில்லையே. தை. ச. I-5-7-5. ஏ சித்திராவஸோ (ராத்திரியே) க்ஷேமமிருக்கட்டும். ராத்திரியைத் தாண்டுவோம் (பக்கம் 129.)

ரிக் I. 122-2 I. 142. 7. I 188-6. ராத்திரியும் உஷசும் சேர்ந்து போய்விட்டதே. (பக்கம் 131.)

ரிக் X. 138. 3. சூரியன் மத்திய ஆகாசத்தில் தன் ரதத்தை அவிழ்த்துவிட்டான் (பக்கம் VII.) 87-5 வருணன் தங்கவர்ணமுள்ள சூரியனை ஆகாயத்தில் ஊஞ்சல் மாதிரி ஆட்டுகிறான். (பக்கம் 140.)

ரிக். X. 28-4 அதிதி யெட்டுப் பிள்ளைகளைப் பெற்றாள். அதில் ஏழு பெயர்கள் (சூரியன்கள்) பிரகாசித்து

வருகிறார்கள் : எட்டாவது கச்யபன் என்கிற சூரியன் மகா மேருவை விடுகிறதில்லை. (பக்கம் 153.)

ரிக் III. 39-5. இருட்டிலிருந்து சூரியனை இந்திரன் வெளிப்படுத்தினான். I. 117-5. அச்வினிகள் புதைத்திருந்த தங்கத்தைப் போலிருக்கிற சூரியனை வெளிப்படுத்தினார்கள். (பக்கம் 163.)

• ஒன்பது மாதம் யாகஞ் செய்து முடித்தவர்களைக் குறித்தும் பத்து மாதம் யாகஞ் செய்து முடித்தவர்களைக் குறித்தும் அடிக்கடி நவக்வா வென்றும் தசக்வா வென்றும் ரிக்கில் கூறப்பட்டிருக்கிறது. இரண்டு மூன்று மாதம்வரை சூரியன் இல்லாததினால் தக்ஷிணாயனத்தில் சில ரிஷிகளால் சதராத்திரக்கிரது நடத்தப்பட்டிருக்கிறது. (பக்கம் 165.)

VI. 6. 3 ; VII. 12. 2; IX. 108. 4, I. 162-4 X. 62-6 ஸாயனபாஷ்யத்தில் நவக்வா தசக்வா வார்த்தைகளுக்கு ஒன்பது மாதம் சூரியனிருந்த காலத்தையும் பத்து மாதமிருந்த காலத்தையும் குறித்து விஸ்தாரமாக எழுதப்பட்டிருக்கிறது. (பக்கம் 166.) I. 158, 6 தீர்க்கதமஸ என்கிற ஒரு ருஷி பத்தாவது மாதத்தில் கிழவனாகி உடனே கண்ணை யிழந்து இரண்டு மாத காலங்கள் கஷ்டப்பட்டு, பிறகு அச்வினி தேவதைகளால் குணமாக்கப்பட்டு, திரும்பவும் பாலியத்தை மேற்படி தேவதைகளால் பெற்றதும் (மகாபாரதத்தில் ஆதிபர்வம் 104 அத்தியாயத்திலும்) விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இது சூரியன் விஷயமானது. இதே கதையைக் குறித்துப்

பசுக்களை மறைவிலிருந்து மீட்கும் அடைத்து ஸ்ரீ கிருஷ்ண பகவான் காப்பாற்றினார் என்று பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வேதத்தில் பசுக்கள் என்ருல் சூரிய கிரணங்களைக் குறிக்கும். ஐதரேயப் பிராஹ்மணம் IV-17 (பக்கம் 171.)

பிரமதேவன் தன் புத்திரியை பின் தொடர்ந்தான் என்கிற கதையை ஐதரேயப்பிராஹ்மணத்தில் III-33 சூரியன் உஷையைப் பின் தொடர்ந்ததையும், இந்திரன் அகலிகையைத் தொடர்ந்தான் என்கிற கதையைக் குமாரிலபட்டர் சூரியன் ராத்திரியைத் தொடர்ந்தான் என்றும் வியாக்கியானஞ் செய்திருக்கிறார். (பக்கம் 238.) இந்திரன் விருத்திரன் என்கிற அசுரன் ஆகிற இருட்டைக் கொன்று சூரியனை வெளியாக்கினதாக வெகு ருக்குக்கள் விருத்திராசுரவதத்தை வர்ணித்திருக்கிறது. III-34. 4; VIII-15-5; X-43-4. III-34-5. முதலானவைகளைப்பார்க்க (பக்கம். 255.) இந்திரன் மலையில் வசித்துக் கொண்டிருக்கிற சம்பரனைச் சரத்காலத்தில் 40வது தினத்தில் கொன்றான். ரிக். II-12-11. கணிதப்படி அக்டோபர் மாதம் 10 தேதியில் சூரியன் மறைந்திருக்க வேண்டும். (பக்கம் 280.)

தை. ச. II-1-2-5 சூரியனுக்கு மூன்றே ருதுக்கள் (அவஸ்தைகள்) உண்டு, அஃதாவது வஸந்தம், கிரீஷ்மம். சரத்-ருது. சரத் என்றால் வாடுதல், தேய்ந்து போகுதல்; வஸந்தம் பாலியம், கிரீஷ்மம் யௌவனம்; சரத் ஜரையாகும்.

ரிக் வேதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிற அச்வினீ தேவதைகளின் ரிக்குகள், அவர்கள் தேவ வைத்தியர்களென்றும் குருடு முதலான வியாதிகளை குணமாக்குகிறார்களென்றும் சொல்லியிருப்பதெல்லாம், சூரியன் தக்ஷிணாயனத்தில் மங்கிப் போனதை உத்தராயணத்தில் திரும்பவும் சக்தியுடன் வந்ததைக் குறித்ததாகும். இவ்விஷயம் விஸ்தாரமாக தெரிய வேண்டுமானால் திலகர் ஆர்க்டிக் புஸ்தகத்தைப் பார்க்க.


அனுபந்தம் III.

ரிக் வேதமானது உலகத்தின் கண் இப்பொழுது பரவி யிருக்கிற எல்லா ஆரிய வம்சம் நாகரிகத்தையும் கூறும் தஸ்தாவேஜென்பது சரித்திர வறிஞர் அபிப்பிராயம். பரத கண்டத்திலிருக்கிற வைதிக் வித்துவான்கள், புராதன சம்பிரதாயப்படி வேதமானது பரத கண்டத்தில் வடபாகத் திலிருந்த நம்முன்னோர்களின் கதை யென்றும், ஆரியாவர்த்த பூமியைச் சேர்ந்த ராஜாக்கள், பட்டணம் முதலானவைகள் வேதத்தில் சொல்லியிருக்கிற பெயர்களை. புருகல்பகதை யென்றும் அவைகளை இந்தக் காலப்படி இசைத்து அர்த்தஞ் செய்ய முடியாதென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். போதாயனர் முதலான சூத்திரகாரர்கள் பூமியை இரண்டா கப் பிரித்து ஒன்றுக்கு ஆரியாவர்த்த மென்றும் இரண்டா வதற்கு மிலேச்ச தேசமென்றும் பெயரிட்டிருக்கிறார்கள். அதில் நாம் இப்பொழுது வஸித்துவருகிற ஆந்திர திரா விடம் முதலான தேசங்கள் மிலேச்ச தேசங்களாகும். அதில் வஸித்துவருகிற ஆரியர்களுக்குத் தோஷமுஞ் சொல்லி யிருக்கிறார்கள். மத்திய ஆசியா கண்டத்தில் சுமார் 6,000 வருஷங்களுக்கு முன் வாழ்ந்திருந்த பாபிலோன் ராஜியத் தில் சில ராஜாக்கள், நதி பட்டணம் முதலானவற்றின் பெயர்களை வரிசையாக ரிக் வேதத்தில் கூறப் பட்டிருக்கிற தென்பது சரித்திர சாஸ்திரிகள் சொல்லுகிறதில் சிலவற்றைக் கீழ் காண்பிக்கிறோம். ரிக். VI. 22-2-6. பர்வதத்திலிருக்கிற

தாதுரி பட்டணம். I. 169-1-X-48-8. II. 32-8. X 50-5. III. 6.8 முதலானவை. I. 134. V 1-7 ரிக்குகள் பாபிலோனில் 3500-3150. கி.மு.வில் ஆண்ட ராஜாக்கள் சரித்திரம்.

ஈஜிப்ட்டில் பாரோவா ராஜாக்கள் சரித்திரம் ரிக்கில் X. 129-முதல் X 152 வரையில் சில ரிக்குகள். இதில் இருந்த ராஜாக்கள் 4,400 கி.மு. முதல் 3,986-கி.மு. வரை ஆவார்கள். ஈஜிப்ட்டுக்குச் சமீபத்திலிருக்கிற லைபியன் மணல்பரடும் இப்பொழுது யுத்தம் நடக்கிற அபிஸினியாவில் சில தேசங்களும் இதில் அடங்கியிருக்கின்றன.

ஹிந்தி பிரசார் பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை—1-36.


கீழ் வட துருவம்
மகாமேருபர்வதம்
மேல் வட துருவம்
அலாஸ்கா
வட அமெரிக்கா
இங்கிலாந்து
ஐரோப்
ஆசியா
கைலாச
பருவதம்
சீனா
ஜப்பான்
பரதகண்டம்
ஆப்பிரிக்கா
பூமத்திய ரேகை
கீழ் உலகம்
தென் அமெரிக்கா
பூ பிரஸ்தாரம்
மேல் உலகம்
ஆஸ்டிரேலியா
நியுசிலாண்டு
கீழ் தென் துருவம்
மேல் தென் துருவம்